உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 25 ஞாயிற்றுக்கிழமை (11.09.2011)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 289

# ஆணைக்குழு அறிக்கை வருமா ஐ.நா. சபைக்கு?

## சமர்ப்பிப்பதில் அமெரிக்கா கடும் ஆர்வம்

## கொழும்பு வரும் பிளேக் அது பற்றிப் பேசுவார்

கொழும்பு, செப்ரெம்பர் 11

**ஜனாதிபதி நியமித்த நல்லிணக்கத்துக்கான கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையை, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பித்து விவாதிப்பது குறித்து அமெரிக்கா அதிக கரிசனை செலுத்தி வருகிறது. அதற்கு இலங்கை அரசு இணங்கி வரா விட்டால், நாளை ஆரம்பமாகும் 18ஆவது கூட்டத் தொடரிலேயே இலங்கை அரசு கடும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என்று கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.**

நாளைமறுதினம் கொழும்பு வரும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக், நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை குறித்து இலங்கை அரசுடன் பேச உள்ளார்.



பிளேக்

பிளேக்கின் இலங்கைப் பயணத்தின் முக்கிய நோக்கம் அதுவே என்று வாஷிங்ரனில் வெள்ளியன்று இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நூலண்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

''நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கை குறித்துப் பேசுவது பிளேக்கின் பயணத்தின் ஒரு பகுதி. அந்த அறிக்கையின் மூலம் நம்பிக்கைக்குரிய விதத்தில் முழுமையானபணியை அவர்கள் எப்படி

பக் 03

### நளினி - முருகன் சிறையில் சந்திப்பு

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனைக் கைதியான நளினி, தனது கணவரும் தூக்குத் தண்டனைக் கைதியுமான முருகனை நேற்று வேலூர் சிறையில் சந்தித்து 20 நிமிடங்கள் பேசினார். முருகனின் கருணை மனுவை இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் நிராகரித்ததன் பின்னர் அவர்கள் இருவரும் சந்தித்துக் கொள்வது இதுவே முதல் தடவை. (உ)

### இந்திய எம்.பிக்கள் விரைவில் வருவர்

ஈழத் தமிழர்களின் உண்மை நிலை அறிவதற்காக இந்திய அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு ஒன்று விரைவில் இலங்கை வரும் என்று பாரதிய ஜனதாக் கட்சியின் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார். டெல்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சுஷ்மா, தனது தலைமையில் அனைத்துக் கட்சி குழு ஒன்று இலங்கை செல்லும் என்றார். (உ)

### 4 படையினர் கைது

வடக்கில் வியாபாரிகளை மிரட்டிக் கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் நான்கு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர். பழைய இரும்பு வர்த்தகத்தில் ஈடுபட்ட வர்த்தகர்களிடமிருந்து பணம் மற்றும் சொத்துக்களை இவர்கள் மிரட்டிப் பறித்தனர் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டி உள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவரும் அடங்குகிறார்.

## வடக்கு துரித மீட்சித் திட்டத்தின் இவ்வருட நிதி முடிவடைந்தது

### தேர்தல் கால வேலைத் திட்டங்களால் விரைந்து கரைந்தது

யாழ்ப்பாணம், செப் 11

அண்மையில் இடம் பெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் காலத்தில் யாழ்.மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் அவசரஅவசரமாக வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் காரணமாக வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் இந்த வருடத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்து விட்டது. இதன் காரணமாகப் புதிய வேலைத் திட்டங்கள் யாவும் அடுத்த வருட நிதியிலேயே மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

பக் 3

## செல்வச்சந்நிதி தேர் இன்று

வடமராட்சி,செப்.11

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி கோயிலில் தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

தீர்த்தத்திருவிழா நாளை 12

பக் 3

## பூதங்களை அடக்க மறுத்தால் போராட்டம் தவிர்க்க முடியாதது

கொழும்பு, செப்.11

ஜனாதிபதி உறுதிமொழி அளித்தபடி 'கிறீஸ் பூத' விவகாரத்துக்கு முடிவு ஏற்படாவிட்டால் மீண்டும் சாத்வீகப் போராட்டங்களில் குதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ்

பக் 3

## தொல்புரத்தில் மர்ம மனிதர் நடமாட்டம் இரு படையினரை மடக்கினர் மக்கள்

### நேற்றிரவு அப்பகுதியில் பதற்றம்; பரபரப்பு

யாழ்ப்பாணம், செப். 11

சுழிபுரம், தொல்புரம் மத்தியில் மர்மமனிதர்களின் நடமாட்டத்தை அடுத்து இராணுவத்தினர் இருவர் பொதுமக்களால் சிறைப்பிடிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நேற்றிரவு 8 மணியளவில் தொல்புரம் அமெரிக்க மிஷன் பாடசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

பக் 03

## வடக்கு - கிழக்கில் சிங்கள எழுத்து பிழைகளைத் திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.11

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள அலுவலகப் பெயர்ப்பலகைகள் மற்றும் அறிவித்தல் பலகைகளில் உள்ள சிங்கள எழுத்துப்பிழைகளை திருத்துவதற்குத் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச அலுவலகங்களின் அறிவித்தல் பலகைகளிலும், பொது இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல் பலகைகள் மற்றும் அறிவுத்தல் பலகைகளிலும் உள்ள சில சிங்களச் சொற்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன என

பக் 03

## பிரதேச சபைத் தலைவர் வீட்டுக்கும் நேற்றிரவு வந்தான் மர்ம மனிதன்

யாழ்ப்பாணம், செப்.11

நேற்றிரவு மின்வெட்டைத் தொடர்ந்து சிறிது நேரத்தில் மர்ம மனிதன் வீட்டின் கூரை மீது பாய்ந்து ஓடிய சம்பவம் நேற்று சித்தன்கேணி சிவன் கோயிலடி

பக் 03

## ஆலயத்துக்கு வந்தவர் நேற்று விபத்தில் சாவு

தென்மராட்சி, செப்.11

ஆலயத் தேர்த்திருவிழாவுக்காக மோட்டார் சைக்கிளில் பண்டத்தரிப்புக்கு வந்த வவுனியா வர்த்தகர் புளைப்பகுதியில் கன்ரர் வாகனத்துடன் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தார்.

சம்பவம் நேற்று நண்பகல் இடம்பெற்றது. பண்டத்தரிப்பு பிரான்பற்றைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான திரு நாவுக்கரசு பிரபாகர் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார்.

இன்று நடைபெறும் பிரான்பற்று முருகமூர்த்தி ஆலயத்தின் தேர் உற்சவத்துக்காக

பக் 03

## போதையின் விளைவு; திருமலை இளைஞர் அடித்துக் கொலை

திருகோணமலை, செப்.11

மதுபோதையில் இருந்த இளைஞர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் மற்றொரு இளைஞரின் சடலத்தைப் பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

திருகோணமலை ஆண்டாள் குளத்தைச் சேர்ந்த கலபதி சமிந்த ஆராய்ச்சி (வயது 38) என்பவரின் சடலமே திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது. சடலம் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பக் 03

## ஊர்காவற்றுறை சென்.அன்ரனிஸ் தேசிய ரீதியில் முதலிடம்

யாழ்ப்பாணம், செப்.11

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையே கல்வி அமைச்சு நடத்திய தேசிய மட்ட உடற் பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரி முத லிடம் பெற்றுச் சாதனை படைத்துள்ளது.

இரண்டாம் இடத்தை உடு முல்ல மகா வித்தியாலயமும், மூன்றாம் இடத்தை நகர வெல்ல மத்திய மகா வித்தியா லயமும் பெற்றுக் கொண்டன.

இந்தப் போட்டி நேற்று பதுளை சறாலி வெல நகரசபை மைதானத்தில் நடைபெற

பக் 03

திருச்சி மற்றும் சென்னை பயணச் சீட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள..

Call 0777380557 0773629519

AiR MARK Travels & Tours

IATA

புத்தம் புதிய டிசைன்களைக் கொண்ட டைல் வகைகளுக்கு



Open Every Day

நவீன் செரமிக்

Naveen Ceramic

#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

021 222 0033 / 021 222 0044

#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

021 222 4777 / 021 222 4888

Metro Engineering (Pvt) Ltd

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் அதிகமாகக் காணப்படுகின்றது.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு தன்னியக்க ஒட்சிசன் இயந்திரம்

## பிரான்ஸில் இருந்து வந்தது


யாழ்ப்பாணம், செப். 11

வளிமண்டலத்திலிருந்து ஒட்சிசன் வாயுவை உற்பத்தி செய்யும் இயந்திரம் ஒன்று பிரான்ஸ் நாட்டினால் சுகாதார அமைச்சின் ஊடாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தன்னியக்க இயந்திரமான இதன் பெறுமதி 40 மில்லியன் ரூபா என யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா தெரிவித்தார்.

இந்த இயந்திரம் வளிமண்டலத்திலிருந்து வாயுக்களை உறிஞ்சி அதிலிருந்து ஒட்சிசன் வாயுவைப் பிரித்தெடுத்து பிறிதொரு கொள்கலனுக்கு அனுப்புகிறது. அதற்குள் இரசாயனப் பதார்த்தங்கள் வழங்கப்பட்டு ஒட்சிசன் வாயு தூய்மையாக்கப்படுகின்றது.

அதன் பிறிதொரு பகுதி ஊடாக தேவையற்ற வாயுக்கள் வெளியேறுகின்றன. தேவையான ஒட்சிசன் வாயு சுத்திகரிக்கப்பட்ட பின்னர் வேறு ஒரு கொள்கலனுக்குள் செலுத்தப்பட்டு அதிலிருந்து இயந்திரம் மூலமாகச் சிலிண்டருக்கு அனுப்பப்படுகிறது. மனிதவலு இன்றி தானியங்கியாகச் செயற்படும் தன்மை வாய்ந்ததாக இந்த இயந்திரம் உள்ளது.



இது தேவைக்கேற்ப ஒட்சிசன் வாயுவை தயாரித்துச் சிலிண்டர்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும். சிலிண்டர்கள் நிரம்பிய நிலையை அடைந்ததும் இந்த இயந்திரம் தானாகவே ஒட்சிசன் உற்பத்தியை நிறுத்திக் கொள்ளும். இரவு, பகல் தொடர்ச்சியாக இயங்கும் தன்மையை இது கொண்டது.

சிலிண்டர்களில் ஒட்சிசன் வாயு நிரம்பியதும் அவற்றை எடுத்து விட்டு ஏனைய சிலிண்டர்களை பொருத்துவதற்கு மட்டுமே இங்கு மனிதவலு பயன்படுகின்றது.

இந்த இயந்திரத் தொழில்நுட்பம் மூலம் 1 மணித்தியாலத்துக்கு 6 ஆயிரத்து 500 லீற்றர் கொள்ளளவுடைய நான்கு சிலிண்டர்களை நிரப்ப முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமாகாணத்தில் கூடிய வலுகொண்ட ஒட்சிசன் உற்பத்தி செய்யும் இயந்திரம் இந்த வைத்தியசாலையில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இதனைவிட யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா ஆகிய வைத்தியசாலைகளில் குறைந்த வலுகொண்ட ஒவ்வொரு இயந்திரங்கள் மூலமாக ஒட்சிசன் தயாரிக்கப்பட்டு வருகிறது. தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் ஓர் இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் யாழ். போதனா வைத்தியசாலையில் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசன் வாயு போதாமையினால் வாரத்துக்கு இரண்டு தடவையாவது அநுராதபுரத்திலுள்ள ஒட்சிசன் உற்பத்தி செய்யும் நிலையத்துக்குச் சென்று ஒட்சிசன் சிலிண்டர்களில் எடுத்துவரப்படுவது வழமை. எதிர்காலத்தில் யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த இயந்திரம் மூலம் 60 வீதமான ஒட்சிசன் தேவையை நிறைவு செய்துகொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-4)

## சித்திரக் காட்சி

யாழ்ப்பாணம், செப். 11

'சித்திரத்தூவானம்' என்னும் சித்திரக் காட்சி இன்றும் நாளையும் இல.15, நக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்ற வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இரு நாள்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை இந்தக் காட்சி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடமராட்சி வடக்கு மீனவரின் 342 படகுகள் மீள ஒப்படைப்பு

## கடற்படைத் தளபதி தெரிவிப்பு

வடமராட்சி, செப்.11

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களின் 342 மீன்பிடிப் படகுகளும் அவற்றுக்கான இயந்திரங்களும் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் ரவிந்திர விஜய குணவர்த்தன தெரிவித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் வன்னிப்பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்து சென்ற வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் தமது படகுகள் அவற்றின் வெளி இயந்திரங்கள், தொழில் உபகரணங்கள் என்பவற்றைத் தத்தமது கடற்கரைகளில் விட்டுச் சென்றிருந்தனர்.

இவர்கள் விட்டுச் சென்ற மீன்பிடிப்படகுகள், இயந்திரங்கள் போன்றவற்றை கடற்படையினர் கைப்பற்றி தமது பாதுகாப்பில் வைத்திருந்தனர்.

போர் முடிவுக்கு வந்த பின்னர் மீள்குடியேறிய வடமராட்சியில் வடக்குப் பிரதேச மீனவர்கள், தாம் கடல்தொழிலை மீண்டும் ஆரம்பிக்க தமது கடற்தொழில் உபகரணங்களை மீள வழங்குமாறு பருத்தித்துறையில் தளமிட்டுள்ள கடற்படையினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட கடற்படையினர் மீனவர்களின் ஆவணங்களைப் பரிசீலித்த பின்னர் அவரவர்களின் மீன்பிடிப்படகுகள், இயந்திரங்களை திருப்பி ஒப்படைத்துள்ளனர்.



கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள 42 படகுகளும் பருத்தித்துறை முனைக் கரையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

கடற்படையினரின் பாதுகாப்பில் இருந்த 384 மீன்பிடிப் படகுகள், இயந்திரங்களில் இதுவரை 342 மீன்பிடிப்படகுகளும் இயந்திரங்களும் உரிய மீனவர்களிடம் கையளிக்கப்பட்டதாக வடமாகாண கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

இன்னமும் 42 படகுகள் உரிமை கோரப்படாத நிலையில் கடற்படையினரின் பாதுகாப்பில் இருப்பதாகத் தெரிவித்த கடற்படைத்தளபதி இந்தப் படகுகளுக்கு உரிமையுள்ள மீனவர்கள் தமது ஆவணங்களைச் சமர்ப்பித்து படகுகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கூறினார். (உ-236)

# வாக்காளர் இடாப்பில் பதியுமாறு வலி.வடக்கு மக்களுக்கு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், செப்.11

வலி. வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட 9 கிராம சேவகர் பிரிவுகளையும் சேர்ந்த மக்கள் தமது பெயர்களை 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் எஸ். முரளிதரன் அறிவுறுத்தி உள்ளார். உரிய கிராம அலுவலர்களைத் தொடர்பு கொண்டு ஒவ்வொருவரும் தமது வாக்காளர் பதிவை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

இளவாலை வடமேற்கு (ஜே/222), வித்தகபுரம் (ஜே/223), கொல்லன்கலட்டி (ஜே/225), நகுலேஸ்வரம் (ஜே/226), தெல்லிப்பழை (ஜே/228), தந்தைசெல்வாபுரம் (ஜே/230), மாவிட்டபுரம் (ஜே/231), மாவிட்டபுரம் தெற்கு (ஜே/232), கட்டுவன் மேற்கு (ஜே/239) ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களில் இதுவரை 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் தம்மைப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடனடியாகத் தமது பகுதிக் கிராம அலுவலர்களுடன் தொடர்புகொண்டு பதிவு செய்யவேண்டும்.

''பதிவுசெய்யத் தவறின் 2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் அவர்களது பெயர்கள் இணைக்கப்படமாட்டா. எனவே மக்களை உட னடியாகப் பதிவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்''- என்றார் பிரதேச செயலர். (உ-15)

# நிகழ்வுகள்

### இலவச மரக்கன்று விநியோகம்

தேசிய மர நடுகை வாரத்தை முன்னிட்டு நல்லூர் லயன்ஸ் கழகமும் கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக் கழகமும் இணைந்து இலவச எலுமிச்சை மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பொற்பதி விநாயகர் ஆலய முன்றிலில் இடம்பெறும். கொக்குவில் கிழக்கு ஜே/122,ஜே/126 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

600 நல்லின எலுமிச்சை மரக்கன்றுகள் வழங்கப் படவுள்ளன. (உ-311)

### கலந்துரையாடல்

நவம்பர் மாதம் நடை பெறவுள்ள உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு வைபவத்தில் கலந்து பட்டம் பெறவுள்ள யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் நடைபெறும் என்று பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் செ.செல்வரதன் அறிவித்துள்ளார். (உ-23)


### நூல் வெளியீடு

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துச் செம்மல்கள் என்னும் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் கதிரமலைச் சிவன் தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வ. மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், வலிகாமம் கல்வி வலயத்தின் பணிப்பாளர் ஆறுமுகம் இராஜேந்திரன்,பண்டிதர் மானியூர் வீ.பிரதீபன் , வவுனியா இந்து நாகரிக ஆசிரியர் சிவகஜன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-311)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசைக் கைத்தொழில் ஊக்குவிப்பு கண்காட்சி நேற்று கோலாகல ஆரம்பம்



யாழ்ப்பாணம்,செப்.11

குடிசைக் கைத்தொழில் ஊக்குவிப்புக் கண்காட்சி, யாழ். இந்துக் கல்லூரியில் நேற்று பெருமெடுப்பில் ஆரம்பிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். இன்றும், தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியின் மூலம் 6,000 பேர் சிறுதொழில் வாய்ப்புகளைப் பெறமுடியும் என்று யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, பௌசி, ரிஷாத் பதியு தீன், டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திஸநாயக்க மற்றும் அரசு கட்சி சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உயர் அதிகாரிகள் ஆகியோர் கண்காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிட்டனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடனும் வழிகாட்டலுடனும் இந்தக் கண்காட்சி இடம்பெறுவதாக யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆறு பிரிவுகளில் 30 காட்சி அறைகளைக் கொண்ட தாக இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. பத்து இலட்சம் மனைப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டத்தின் ஓர் அலகாக நாடு முழுவதும் நடத்தப்பட்டுவரும் குடிசைக் கைத்தொழில் ஊக்குவிப்புக் கண்காட்சி வரிசையில் இந்தக் கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

'செழிப்பான இல்லம் வளமான தாய் நாடு' என்பதே கண்காட்சியின் தொனிப் பொருள். ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். அவர்களில் பலர் விசேட பஸ்கள் மூலம் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

அரச தொழில் முயற்சி அமைச்சு, வர்த்தக கைத்தொழில் அமைச்சு, இளைஞர் விவகார அமைச்சு, தகவல் தொழில் நுட்பவியல் அமைச்சு பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு என்பன இந்த மனைப் பொருளாதார நிகழ்ச்சித் திட்டத்துக்கு அனுசரணை வழங்கி வருகின்றன. (உ-14)

# பாதுகாப்பு வலயத்தில் விறகு வெட்டும் தொழிலாளியின் சடலமே மீட்கப்பட்டது

## உடலில் பல இடங்களில் அடிகாயங்கள்

புத்தூர் - மீசாலை வீதியில் அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட ஆணின் சடலம் அவரது மனைவியால் நேற்று இனங் காணப்பட்டுள்ளது.

விறகு வெட்டும் தொழிலாளியான சுன்னாகத்தைச் சேர்ந்த சுரேஷ் (வயது-36) என்ற இரு பிள்ளைகளின் தந்தையின் சடலமே நேற்று முன்தினம் மீட்கப்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சுரேஷ் என்ற இந்த நபரைக் காணவில்லை என்று கடந்த 5 தினங்களுக்கு முன்னர் அவரது மனைவியால் சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே புத்தூர் - மீசாலை வீதியில் புத்தூர் சந்தியிலிருந்து ஒன்றரை கிலோ மீற்றர் தூரத்தில் அடி காயங்களுடன் மிகவும் பழுதடைந்த நிலையில் சடலம் ஒன்று மீட்டகப்பட்டிருந்தது.

சடலம் மீட்கப்பட்டிருப்பது தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து சந்தேகத்தின் பேரில் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்து பார்த்தபோதே சடலத்தில் காணப்பட்ட காற்சட்டையை வைத்து தனது கணவன் தான் என்று மனைவி உறுதிப்படுத்தினார். குறித்த குடும்பஸ்தர் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் விறகு வெட்டும் அன்றாட கூலித்தொழிலாளி என்று உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சடலத்தை அடையாளம் காட்டிய சுரேஷின் மனைவி பின்னர் அச்சு வேலி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றார். நேற்று மாலைவரை பொலிஸாரும், இனங்காட்டிய சுரேஷின் மனைவியும் வராததினால் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளை சடலம் மீட்கப்பட்டது தொடர்பில் காணாமற் போனதாக முறைப்பாடு செய்திருந்த சம்பந்தப்பட்டவர்களுக்கு பொலிஸார் எதுவும் அறிவித்திருக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (ஒ-15)

# டிராக்டர் பெட்டி கவிழ்ந்து எண்மர் காயம்

யாழ்ப்பாணம் .செப்.11

டிராக்டரில் சென்று கொண்டிருந்த வேளைஅதன் பெட்டியின் ஊக்கி முறிந்து அது சரிந்து கவிழ்ந்ததால் அதில் சென்ற 8 பேர் தூக்கி வீசப்பட்டு காயங்களுக்குள்ளாயினர். அவர்கள் அனைவரும் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.இந்த சம்பவம் உடுவிலில் தேவாலயம் ஒன்றை அண்மித்த பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம் பெற்றது.

குளம் ஒன்றின் புனரமைப்புப் பணிக்காக நீர்பாசனத்திணைக்களத்தினால் கூட்டிச் செல்லப்பட்ட தொழிலாளர்களே இந்த விபத்தில் சிக்கினர். (ஒ-4)

## பிரதேச சபை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் இடம்பெற்றுள்ளது. வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் வீட்டிலேயே இந்த மர்ம மனிதன் திடீரெனப் பாய்ந்து ஓடினான்.

இது தொடர்பாக திருமதி ஐங்கரன் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்ததாவது:

இரவு 7 மணியளவில் மின்வெட்டு எமது பகுதியில் அமுல்படுத்தப்பட்டது. சற்று நேரத்தில் வீட்டின் கூரை மீது யாரோ நடப்பது போன்று சத்தம் கேட்டது. வெளியே வந்தபோது வீட்டு முன் 'கேற்'றடியில் 'ஹெல்மற்' அணிந்தவாறு ஒருவர் நடமாடியதை அவதானித்தோம்.

அந்த நபரை நோக்கி நாங்கள் சென்ற போது மிக விரைவாக அவன் ஓடி மறைந்து விட்டான். அதேசமயம் வீட்டின் கூரை மீது நின்ற மற்றொருவன் வீட்டின் பின்னால் நின்ற மரத்தில் தாவிக் குதித்து அவனும் மாயமாகி விட்டான்.

இந்த விடயம் தொடர்பாக வட்டுக் கோட்டை பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளோம் - என்றார் அவர். (ஒ-14)

## ஊர்காவற்றுறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

றது.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 2007 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்ட உடற்கல்விப் போட்டியில் முதலாம் இடத்தையும் 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற தேசிய மட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தையும் 2009ஆம், 2010ஆம் ஆண்டுகளில் நடபெற்ற தேசிய மட்டப் போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (த-23)

## ஆலயத்துக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அவர் யாழ்ப்பாணம் வந்து கொண்டிருந்தார்.

விபத்தில் தொடர்புபட்ட வாகனச் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். வேகமாக வந்த கன்ரரைக் கண்டு திருநாவுக்கரசு தனது மோட்டார் சைக்கிள் வேகத்தைத் தணித்த போதும் கன்ரர் அவரை மோதித் தள்ளியதாக நேரில் கண்ட சாட்சிகள் தெரிவித்தனர். சடலம் உடல் கூற்றுப் பரிசோதனைக்காக பொலிஸாரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமையும் இதே பகுதியில் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். சைக்கிளில் வந்த வயோதிபர் வான் ஒன்றால் மோதப்பட்டு இறந்தார். (உ-207)

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

அமைச்சரவையினால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதனால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள பெயர்ப் பலகைகளில் சிங்கள மொழியில் உள்ள பிழைகளைத் திருத்துவதற்கு மேற்படி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டப் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளடங்கும் அனைத்து அரச நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் ஏதாவது பிழைகள் இருப்பின் அவற்றைப் புகைப்படம் எடுத்து நிர்வாகக் கிளை, மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அனைத்துப் பிரதேச செயலர்களையும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் வைக்கப்பட்டுள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளில் தமிழ்ப் பெயர்கள் பிழையாக எழுதப்பட்டு திருத்தப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாகப் பொலிஸ் நிலையங்கள் சிலவற்றின் முன்னால் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகைகளில் இந்த தமிழ் எழுத்துப் பிழைகள் காணப்படுவதாகப் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (த-60)

## தொல்புரத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்துக்கு இரவு 10 மணியளவில் வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்களைவி கைது செய்து அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

தொல்புரம் அமெரிக்க மிஷன் பாடசாலைக்குச் சமீபமாக மர்ம மனிதர்கள் நால்வரின் நடமாட்டத்தை பொதுமக்கள் அவதானித்துள்ளனர். பின்னர் அவர்களைக் கலைத்துச் சென்றனர் ஊர்மக்கள். ஆனால் அவர்கள் ஓடித் தப்பிவிட்டனர். அவர்கள் தப்பிச் சென்ற ஒழுங்கை வழியாக அவ்வேளை சுழிபுரம் இராணுவ முகாமைச் சேர்ந்த இருவர் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளனர்.

அவர்கள் மீது சந்தேகப்பட்ட பொதுமக்கள் இரு இராணுவத்தினரையும் பிடித்து வீடொன்றினுள் பூட்டி வைத்தனர். இதன்பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. இரவு 10 மணியளவில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் வீதிகளில் நின்றிருந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களை விரட்டியடித்தனர். அத்துடன் இரு படையினரையும் மீட்டனர்.

இராணுவத்தினரைப் பிடித்து மறித்து வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் அந்தப் பகுதி இளைஞர்கள் ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவந்தது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

இதனால் தொல்புரம் பகுதி மக்கள் மத்தியில் நேற்றிரவு பதற்றமும் பரபரப்பும் நிலவின.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக தகவல்கள் எவையும் செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை. (ஒ-15)

## போதையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள் இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று மாவட்ட பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி எ.வி.ஜெய சுந்தர *உதயனுக்குத்* தெரிவித்தார்.

தெஹிவளையைச் சேர்ந்த நிமேஷ் சாணக்க மற்றும் அந்தோனிப்பிள்ளை ஆகியோரே கைதாகி விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸ் பொறுப்பதிகாரி கூறினார்.

கைதான இருவர் மற்றும் கொலையுண்டவர் ஆகிய மூவரும் மதுபோதையில் வாக்குவாதப்பட்டு அதன் விளைவாக பிரஸ்தாப இளைஞன் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் சடலத்தில் வெட்டுக் காயங்கள், அடிகாயங்கள் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ-14-86)

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆற்றமுடியும் என்பதை உறுதிப் படுத்துவதே அதன் நோக்கம்'' என்றார் நூலண்ட்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பித்து விவாதிப்பதற்கு ஏற்ற வகையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைத் தரும்படி அமெரிக்கா ஏற்கனவே கேட்டிருந்தது. ஆனால், உடனடியாக அதற்கு மறுப்புத் தெரிவித்திருந்த கொழும்பு, பின்னர் அறிக்கையின் சாராம்சத்தை மட்டும் தரமுடியும் என்று பின்னர் இறங்கி வந்தது.

எனினும், "இலங்கையை முன்னோக்கி நகர்த்திச் செல்லக்கூடிய சிறந்த, உறுதியான, நம்பகத்தன்மை மிக்க அறிக்கை ஒன்று வருவதை உறுதிப்படுத்துவதே எமது முதல் இலக்கு'' என்று நூலண்ட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நாளை அமெரிக்காவில் இருந்து புறப்படும் பிளேக் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொழும்பை வந்தடைவார். உடனேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேசும் அவர், யாழ்ப்பாணத்துக்கும் செல்லவுள்ளார்.

இலங்கைப் பயணத்தை முடித்துக் கொண்டு நேரடியாக இந்தியா செல்லவுள்ளார் பிளேக். அங்கு அவர் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புதுடில்லி ஆளும் வர்க்கத்துடன் தீவிரமாக ஆராய்வார் என்று தெரிகிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



**திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்**

கொக்குவில் இந்துக் கல்லூரியின் இளைப்பாறிய உப அதிபரும் கனடா பழைய மாணவர் சங்க உப தலைவருமாகிய **திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்** அவர்களின் மறைவு எங்கள் கல்லூரிக்குப் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர் நண்பர்களுக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**கொக்குவில் இந்துக் கல்லூரி,**
**பழைய மாணவர் சங்க அங்கத்தவர்கள்.**

## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

- **UK** → பல்கலைக்கழகத்தில் குறைந்த கட்டணம் + 20 Hrs. PT + Paid Internship
- **USA** → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
- **CANADA** → IELTS, Sponsor தேவையில்லை. No age limit, Work Permit Available
- **POLAND** → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- **GERMANY** → பகுதி நேர தொழில் வாய்ப்பு + PR + With / Without IELTS
- **CYPRUS** → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.

**Next Intake: Oct.2011**

**UKRAINE** - Acrospace, Aeronautical Eng, MBBS, Nursing, Tele communication, Bio Medical Science at lower cost + 1Year Free Accommodation
No need Sponsor

பஸ்னா - 0778 438403

**READ International**
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

SRI LANKA RED CROSS SOCIETY

யாழ்ப்பாணம்
இரவு-பகல்
அம்புலன்ஸ் சேவை

**அழையுங்கள்:**
021- 222 2561
021- 222 9792
021- 321 5555

## வீடு வளவு விற்பனைக்கு

கோப்பாய், இருபாலை சந்தி அருகில் பருத்தித்துறை வீதியில் பத்து பரப்பு (நில. பர.10) காணி உடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு:
**0777431100, 0112610300**

## காணி விற்பனை

யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதிக்கு அருகில் பாடசாலை, வைத்திய சாலை கோயில் சூழலில் நன்னீர்க் கிணற்றுடன் 40 பரப்புக்காணி விற்பனைக் குண்டு. பகுதியாகவும் பிரித்து வழங்கப்படும்.
தொடர்பு: 0718175820, 0779863706

## கார் விற்பனைக்கு

NISSAN Sunny N17 Supper Saloon Yom 2004 (Full Option) Sillver Colour நல்ல நிலையில் உள்ளது (Bank Officer பாவனையில் உள்ள கார்)
தொடர்புகளுக்கு: 0777110381

## ஆடு விற்பனைக்கு உண்டு

குட்டி ஈனுவதற்கு சிலநாள்கள் இருக்கும் ஆடும், தாயும் குட்டியுமான ஆடுகளும் விற்பனைக்குண்டு.
**தொடர்பு: 0750478238**

## பதவி வெற்றிடம்

பல்தேசிய நிறுவனமான **Education Technologies** கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **Trainee Marketing Executive.**
- **Marketing Executive (With one Year experiences)**

தகைமைகள்
* க.பொ.த உயர்தரப்பரீட்சையில் சித்தி (ஆண், பெண்)
* 30 வயதுக்கு மேற்படாதவர்கள்
* கணினித் தகைமைகள்

நேர்முகப்பரீட்சைகள் (Interview) 12 Sept. முதல்- 16 Sept. வரை நடைபெற உள்ளது. தகைமை உடையவர்கள் நேரில் வரவும்.

மேலதிக தகவல்களுக்கு
G.Anthany
0773434823
0215671130
0212224795

**Education Technologies**
**186, Kasthuriar Road,**
**Jaffna.**

## மணமகன் தேவை

1977 இல் பிறந்த யாழ். இந்து கௌரவ Divorced திருவாதிரை நட்சத்திரம், Masters படித்த தனியார் கம்பனியில் IT துறையில் வேலை பார்க்கும், கொழும்பில் வசிக்கும் பெண்ணுக்கு மணமகன் தேவை.
email: 20krish11@gmail.com அல்லது வி.இல. 4168, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## ஊழியர் தேவை

எமது ஸ்தாபனத்தில் பொருள்கள் பொதி செய்வதற்கும், சிட்டைகளின் படி பொருள்களை எடுத்துப் பொதி செய்வதற்கும் முன்பு சில்லறைக் கடையில் வேலைசெய்து அனுபவமுள்ள க.பொ.த.(சா/த) படித்த ஆண்கள்.
**மாதச் சம்பளம் : 12000/=**
**மதிய போசனம் : 100/=**
மற்றும் முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் திறமைசாலிகளுக்கு ஒரு நாளைக்கு ரூ.300 வழங்கப்படும்.
*கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதம் மற்றும் சுய விவரத்துடன் நேரில் வரவும்.

குறிப்பு: மாநகர எல்லைக்குட்பட்டவர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும்.

**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0212222567

## மதுரா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்



(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

**(அழகுக்கலை டிப்ளோமா பயிற்சி)**

பேஷியல் (12 வகை), மேக்கப் (4 வகை), கிளின்அப், ஹெயாஸ்ரைலிங்(30 வகை), ஸ்ரெயிட்னிங், அயனிங், பேமிங், ஹெயாகலரிங், ஸ்பாறீட்மென்ட், ஹெயா ஹொட் ஒயில் மசாஜ், பிளக்ஸ்பொட் றீட்மென்ட், பிம்பிள் ட்றீட்மென்ட், ஸ்கின் லைட்டினிங் றீட்மென்ட், பெடிக்கியூர், மெனிக்கியூர், நெயில்ஆர்ட் மெஹந்தி டிசைன், திரெட்டிங், வக்ஸிங், ஹெயாடையிங், சாறி கட்டும்முறை(10) ஆகிய பயிற்சிகள் நடைபெறுகின்றன. பயிற்சியில் இணைய விரும்புவோர் 13.09.2011 செவ்வாய்க்கிழமை மு.பகல் 10 மணியில் இருந்து மதியம் 1 மணிவரை பயிற்சி நிலையத்தில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்.
கேக் ஐசிங் (கேக்-30/ ஐசிங் 30) தையல், சாறிவேக்ஸ் பயிற்சிகளும் நடைபெறுகின்றன.

பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
(மேக்கப், கேக் ஐசிங் ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்).

0754161893,
0213214013.

பழைய வீதி,
கோப்பாய்.

## கலைமகள் அழகு நிலா Beauty Academy



புதிய பயிற்சிகள் ஆரம்பம் 14.09.2011

நவீன முறையிலான பயிற்சிகள் பதினைந்து நாள்கள் (15) இடம் பெற்று பயிற்சியின் நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும். இந்தப் பயிற்சியின் மூலம் ஓர் அழகு நிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். வயதெல்லை கிடையாது. கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன்முறையாகும். பயிற்சியினை விரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக் கொள்ளவும்.

**பயிற்சிகள்**

- Facial
- Laser Facial
- Laser Treatment
- தலைவலி, முதுகுவலி, இடுப்புவலி இவற்றுக்கான Treatment
- Hot Oil Massage
- Pimple Treatment
- Eyebrow Threading
- Waxing
- Hair Colouring
- Hair Curling
- Hair Cutting
- கறுப்புக்காய்கள் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
- Hair Stratening
- Hair Perming
- Bleaching
- Manicure Pedeicure
- Face Cleaning
- Bridal makeup

பயிற்சி நேரம் மு.ப. 10 மணி - பி.ப. 1.30 வரை

**கலைமகள் அழகு நிலா**
390, பிரதான விதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773719071

## ஓம் கிராட்கிஸ்லப் பிரம்மனே நமஹ

## நெஞ்சில் நீங்காத முதலாம் ஆண்டு நினைவலைகள்

**வேலாயுதம் பாலசரஸ்வதி**



**அன்னை மடியில்:**
**1944.10.21**

**ஆண்டவன் அடியில்:**
**2010.08.23**

நந்தவனப் பொய்கையிலே சேர்ந்திருந்த
நறுமண மலரவள் பிரிந்ததனால்
வெந்தழலால் வாடுதடி சேய்கள் மனம்
வெறும் பொய்கள் அல்ல உண்மை நிஜம்

ஈராறு மாதங்கள் ஆகியது உன் நினைவால்
ஈரம் கண்ணில் ஆறவில்லை, உன் குரலால்
படுக்கையில் நீ, பேச முடியாது போனது ஏனோ?
பாதகன் காலனவன் வீசிய கயிற்றினாலோ!

சொல்லம்மா! உண்மைச் சேதி
சொர்க்கத்தில் மிளிரும் ஜோதி
வந்தது நெஞ்சிற் தீரா மிடி, அது
வற்றிடும் நேரம் வருமா?

தங்கள் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

மகேந்திரன் குடும்பம் (சிற்பாச்சாரியார்)
உடுப்பிட்டி.

ஸ்ரீகாந்தன் குடும்பம்
(ஓட்டுநர்)
கட்டுடை

## Athavan Technology

AT

Security camera, Door phone system, Finger print attendance, Burgler alarm



No. 111/2, Brown Road
Kokuvil East, Jaffna.
Tel - 0750 421 776

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவலைகள்



செல்வி
**திருமகள் கனகசபை**
(மாணவி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

அன்னையின் அரவணைப்பில்
13.06.1981

திதி:சதுர்த்தசி


சந்நிதியான் சந்நிதியில்
25.08.1999

சதுர்த்தசி திதியில் சங்கரனார்
திருமகன் சேவடியில்
சங்கமமான திருமகளே!
எம் குல விளக்கே!
சந்நிதியான் தேர் காணச்
சென்ற வேளை அவன் தன்
பன்னிருகையால் உனையணைத்து
பன்னிரண்டாண்டுகளாகினவே

த.மு: 125, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்.
நி.மு: மீசாலை வடக்கு, மீசாலை.

ஆறாத்துயருடன்:
குடும்பத்தினர்.

இலங்கையின் பிரமாண்டமான விளையாட்டு உபகரண காட்சியறை, மட்டும் பல்தரப்பட்ட தெரிவுகளுடன்.




**Bansons SPORTS**

Bandara & Sons Sports Co.
SINCE : 1965
No. 51, Mihindu Mawatha, Colombo 12.
Tel: 2335136, 2335137
Fax: 2447170 E: bansonsgroup@sltnet.lk
W: www.bandaraandsons.com
Also available at our agents:
GAMIK SPORTS 7/3, Ground Floor, Borella Supermarket Tel/Fax: 2689944
ONMO INTERNATIONAL 73B, Kandy Road. Kiribathgoda. Tel:2911966

KARSON carlton Slazenger adidas DUNLOP MIKASA Butterfly Wilson
All kinds of high quality sports goods under one roof HOT LINE: 0773451823 **FREE DELIVERY**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வன்னி மக்களின் வாழ்வை மேலும் அமிழ்த்தும் காணி உரிமை விவகாரம்

பட்ட காலிலேயே படும், கெட்ட குடியே கெடும் என்பது தமிழ் முதுமொழி. இது தனிப்பட்டவர்களுக்கு மட்டுமன்றி மக்கள் கூட்டத்துக்கும் - சமூகத்துக்கும் - பொருந்தும். போரினால் பாதிக்கப்பட்டு நாதியற்றவர்களாக மாறியிருக்கும் வன்னி மக்களுக்கு அது முழு அளவில் பெருவட்டமாகப் பொருந்துகிறது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்த மக்களில் பலருக்குச் சொந்தக் காணி என்று சொல்வதற்கு உரித்துடைய காணி ஒன்றில்லை. காரணம் அவர்கள் வசித்த காணிகள் உரிய முறையில் பதியப்படவில்லை. அதனால் காணிகளுக்குரிய உறுதிகளோ, உத்தரவுப் பத்திரங்களோ இல்லை.

வன்னிக் கிராமங்கள் சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் குளங்களை அண்டி குடியேற்றத் திட்டங்களாக உருவாக்கப்பட்டவையே. குடியேற்றப்பட்ட மக்கள் தமக்கு வழங்கப்பட்ட காணிகளில் தொடர்ந்து குறிப்பிட்ட வருடங்கள் வசித்தால் மட்டுமே உறுதிகள் வழங்கப்படும். அதுவரை காணி உத்தரவுப் பத்திரங்களே (காணிப் பெர்மிட்டுக்கள்) வழங்கப்படுவது உண்டு. விவசாயக் காணிகளுக்கும் அது பொருந்தும்.

இத்தகைய ஒரு பின்னணியில், உத்தரவுப் பத்திரங்களோ உறுதிகளோ தமது பெயரில் பதியப்படாமல் தொடர்ந்து கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் விவசாயப் பெருங்குடி மக்கள் பலர் வசித்தது உண்டு.

பொதுவாக, குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் குடியமர்ந்து இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குப் பின்னரே காணிக்குரிய உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. சிலருக்குப் பல வருடங்களுக்குப் பின்னரும் வழங்கப்பட்டது உண்டு.

இந்த நிலையில் காணி ஒன்றில் குடியமர்ந்து, பல வருடங்களாக வசித்துவந்தவர்களில் பலர் எந்தவிதமான ஆவணங்களையும் கொண்டிராத நிலையில் உள்ளனர். பலர், போர் நடைபெற்ற வேளையில் தமது காணிக்குரிய ஆவணங்களைத் தொலைத்து விட்டனர்.

இத்தகைய ஒரு பின்புலத்துடன் மக்கள் உரிய பதிவுகள், பத்திரங்கள் இன்றிப் பல வருடங்கள் குறிப்பிட்ட பகுதியில், காணிகளில் வசிப்பதும் விவசாயம் செய்வதும் எழுதப்படாத விதியாகவே தொடர்கிறது.

போரினால், அதன் விளைவுகளால், இரண்டு வருடங்கள் கடந்த போதிலும் தமது வாழ்வாதாரங்களை முன்னைய நிலைக்குக் கொண்டு வர இயலாமல் அல்லாடும் மக்களில் பெரும் எண்ணிக்கையானோர், பெயரளவில் மீளக் குடியமர்ந்தாலும், ஏதிலிகளாகவே நாள்களைக் கழித்துக் கஷ்டமுறுகிறார்கள்; தவிக்கிறார்கள்.

இப்போது அரசினாலும், உதவி வழங்கும் நிறுவனங்களாலும் வழங்கப்படுகின்ற வீட்டுத்திட்டங்கள் மற்றும் வீடு கட்டுவதற்குரிய பொருள்களைப் பெறுவதில் இத்தகையோர் புறக்கணிக்கப்பட்ட நிலையில் உள்ளனர். இதனால் யுத்தத்தின்போது தமது வீடுகளை இழந்த பெரும் எண்ணிக்கையான் குடும்பங்கள் தகரக் கொட்டில்களில், தற்காலிகக் குடிசைகளில், விலங்குகளுக்கும் ஊர்வனவற்றுக்கும் மத்தியிலும் குழந்தை குட்டிகளோடு வாழும் அவலம் சொல்லுந்தரமன்று.

உதாரணத்துக்கு, கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் மட்டும் 12,000 குடும்பங்கள் காணி உத்தரவுப் பத்திரங்கள் இல்லாததால், நிரந்தர வீட்டுத் திட்டம் போன்ற உதவிகளைப் பெறமுடியாத நிலையில் உள்ளன.

கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் அநேகமான குடும்பங்கள் அதே காரணத்தால் உதவிகளை இழந்து நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, துணுக்காய், ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் ஆயிரக்கணக்கான மக்கள் காணி உத்தரவுப் பத்திரமோ உறுதியோ கையில் இல்லாததால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

''மண்ணின் மகிமை'' என்ற புதிய திட்டத்தின் கீழ் காணிகளைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் அரசு, அந்தப் பணிகள் 2022 ஆம் ஆண்டு வரையிலேயே நிறைவுறும் என்று எதிர்பார்க்கின்றது.

ஆகையால் வன்னிப்போரின்போது, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, இடம்பெயர்ந்து, ஏதிலிகளாகவே தமது சொந்த மண்ணுக்குத் திரும்பிய மக்களுக்கு, சில சிறப்புச் சலுகைகளை வகுத்துச் செயற்படுத்துவது அவசியம். அவர்கள் தாம் பிறந்து வளர்ந்த மண்ணில் வீட்டு வசதியைப் பெறுவதற்கான பணிகளை முன்னெடுத்து அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வகை, வழி செய்ய வேண்டும்.

காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் உத்தரவுப் பத்திரம், மற்றும் காணி உறுதிகளின் பதிவுகளின் மூலங்கள் சம்பந்தப்பட்ட அரச அலுவலகங்களில் இருக்கும். அவற்றை அடிப்படையாக வைத்துப் புதிய உறுதிகளையும் உத்தரவுப் பத்திரங்களையும் வழங்க முடியும். அதற்கென நடமாடும் சேவைகளை மக்களுக்கு உதவக்கூடாதா? அடிக்கடி வன்னிக்கு வந்துபோகும் அமைச்சர்களில் எவர் ஒருவராவது விசேட ஏற்பாடாக இந்த உதவியைச் செய்ய முன்வருவார்களா? வன்னி மக்கள் தமது முன்னைய வாழ்க்கை நிலைக்குத் திரும்புவதற்கு மனிதநேயத்தின் பாற்பட்டாவது உதவக் கூடாதா?

# யாழ்.மாவட்டத்தின் புராதன இடங்கள் பல பாதுகாக்கப்படும் சின்னங்களாக பிரகடனம்

## தேசிய மரபுரிமைகள் அமைச்சு நடவடிக்கை

வரணி, செப்.11

யாழ்.மாவட்டத்தில் பல நினைவுச் சின்னங்கள், புராதன பொருள்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படும் சின்னங்களாக தேசிய மரபுரிமைகள் அமைச்சரினால் முன்மொழியப்பட்டுள்ளன.

இவைகள் சார்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து மூலமான கோரிக்கைகளை தொல்பொருளியலாளர் திணைக்களத்துக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக அவற்றின் விவரங்கள் வருமாறு:-

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் நகுலேஸ்வரம் கோயில் மற்றும் அருகில் உள்ள சத்திரம் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகியனவும்,

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் சுண்டுக்குளி யாழ்.புனித ஜோன் பப்டிஸ் கிறிஸ்தவ ஆலயம், ஆறுமுகநாவலர் அவர்களின் வீட்டின் சிதைவுகள், வண்ணார்பண்ணை சிவன்கோயில், வண்ணார்பண்ணை நாவலர் வித்தியாலய பூமிக்கு உரிய புராதன கட்டடம் மற்றும் குரவர் கோயில், யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் அமைந்துள்ள பழைய கச்சேரிக் கட்டடம் மற்றும் வண்ணார்பண்ணை கதிரேசன் கோயில் என்பனவும்,

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சுண்டுக்குழி புனித ஜேம்ஸ் கிறிஸ்தவ ஆலயம், சங்கிலியன் அரண்மனை நுழைவாயில் அமைந்துள்ள புராதன கட்டட அத்திபாரம், வண்ணார்பண்ணை கில்னர் சாலை, நீராவியடி இந்துவித்தியாலய வீதியில் அமைந்துள்ள சைவபரிபாலன சபையின் பதிவாலயமாக உபயோகிக்கும் இந்துசாதனசாலை என்பனவும்,

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் காரியாலத்திலுள்ள புறாக்கூட்டுக் கட்டடம் மற்றும் கட்டடச் சிதைவுகள், கோட்டைக்காடு பௌத்த தூபிகள் உட்பட்ட சிதை வுறு வளாகம், சாரப்பிட்டி பிரதேசத்தில் உள்ள கிணறு, மற்றும் சிதைவுறு வளாகம் சீகிரியாம்பள்ளம் பகுதியில் உள்ள மீகாமன் கோட்டை என்பனவும்,

வேலணை பிரதேச செயலர் பிரிவில்

புங்குடுதீவு கிறிஸ்தவ ஆலயம் மற்றும் மண்டைதீவு புனித பீற்றர் கிறிஸ்தவ ஆலயம் என்பனவும்,

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில்; அல்வாய் வடக்கு புனித பிரான்சிஸ் முனிவர் ஆலயம், பசுபதீஸ்வரன் கோயில் அருகில் உள்ள தெருமூடி மட சத்திரம் என்பனவும்,

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில்;

உடுப்பிட்டி வீரபத்திரர் கோயிலுக்குச் சொந்தமான தமிழ் கல்வெட்டுத் தூண்கள், வதிரி கிராமத்தில் பிள்ளையார் கோயிலுக்கு சொந்தமான புராதன குளம் மற்றும் மதில் சத்திரம், கிணறு மற்றும் அதனையண்டிய கற்படைப்புக்கள் மற்றும் மணல்காடு ஒல்லாந்து ஆலயம் என்பனவும்,

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அச்சுவேலி நகரம், கிறிஸ்தவ ஆலயம் மற்றும் புராதன ஒல்லாந்து ஆலயச் சிதைவுகள்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் வட்டுக்கோட்டை கிறிஸ்தவ ஆலயம். (த-122)

# ஹோட்டல்களுக்கு 'சீல்' மேர்வின் சில்வா அதிரடி

கொழும்பு, செப்.11

கிரிபத்கொட நகரில் உள்ள பல உல்லாச ஹோட்டல்களும், உணவகங்களும் பிரதேச சபைக்குச் சேர வேண்டிய கோடிக்கணக்கான ரூபா வரியைச் செலுத்தாமல் இழுத்தடித்து வந்தமையையடுத்து பொதுசன தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையில் அதிரடியாகச்சென்ற களனிப் பிரதேசசபை உத்தியோகத்தர்களும், பொலிஸாரும் இந்தக் ஹோட்டல்களைப் பூட்டி 'சீல்' வைத்துள்ளனர்.

கிரிபெத்கொட, ஹூணுப்பிட்டிய வீதியில் உள்ள மூன்று, நான்கு ஹோட்டல்கள் இவ்வாறு திடீரென சீல் வைத்து மூடப்பட்டதால் அங்கு உல்லாசமாகத் தங்கியிருந்த பல ஜோடிகள் சிக்கிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

உரிமையாளர் அங்கு இருக்கவில்லை. அவருடன் கைத்தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் மேர்வின், ''சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. நீங்கள் தெரிந்தவர் என்றாலும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. பணம் வேண்டுமானால் நான் தருகின் றேன்'' என்று கூறி அப்போதே தனது மனைவியை கைகத் தொலைபேசியில் அழைத்து குறிப்பிட்ட ஹோட்டல் காரருக்கு 80 ஆயிரம் ரூபாவைக் கொடுக்குமாறு கூறியுள்ளார். அதேவேளை, கோடிக் கணக்கான ரூபா வரிப் பணத்தை அறவிடுவதற்கு எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த பிரதேச சபை உத்தியோகத்தர்கள் நால்வரின் பணிகளும் அமைச்சரின் உத்தரவின் பேரில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. (ச-5)

# வவுனியாவில் மூன்று நாள் திறன்விருத்தி செயலமர்வு

நாவற்குழி, செப்.11

யுனிசெவ் நிறுவன நிதி உதவியில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஊடாக வழங்கப்பட்டு வரும் வாழ்வாதார உதவிகள் தொடர்பான 3 நாள் செயற்திறன் விருத்திச் செயலமர்வு வவுனியாவில் நடைபெறவுள்ளது.

வவுனியா ஈரப்பெரியகுளம் றொக்ஸ்ரார் ஹோட்டலில் எதிர்வரும் 14 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை வதிவிடப் பயிற்சி நெறியாக இந்தச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் கடமையாற்றும் சமூக சேவைகள் அதிகாரிகளை இதில் பங்குபற்றுமாறு மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி ந.இன்பராஜ் அறிவித்துள்ளார்.

16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஏற்கனவே செயற்பட்டு வரும் வாழ்வாதாரத் திட்டங்கள் தொடர்பான வெளிக்களப் பார்வையிடலுக்கும் ஒழுங்கு செய்யப்பட்டு உள்ளது.

இந்த 3 நாள் பயிற்சிச் செயலமர்வில் மாகாண சமூக சேவைகள் திணைக்கள உயரதிகாரிகளும், யுனிசெவ் அமைப்பின் குறித்த திட்டம் தொடர்பான அதிகாரிகளும் கலந்து கொள்ள உள்ளனர்.

(த-121)

# பட்டதாரிகள் அல்லாதோர் உயர்தர விடைத்தாள்கள் திருத்தும் பணியில்

கொழும்பு, செப். 11

பல்கலைக்கழகத்தில் பட்டம்பெறாத ஏழுபேர் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிக்கு வந்துள்ளனர் என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. இவர்களுள் ஓர் ஆசிரியை தனக்கு அழகியற் கல்வியில் பட்டம் உள்ளதாக தெரிவித்து பணியில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது அவரிடம் தேசியக் கல்வியியற் கல்லூரியால் வழங்கப்பட்ட ஆசிரியப் பயிற்சி சான்றிதழ் மட்டுமே இருந்தது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் இவ்வாறு ஈடுபட்ட சிலர் பாடசாலைகளில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாடங்களுக்கான கால அட்டவணைகளில் திருத்தம் செய்து சமர்ப்பித்துள்ளனர் என்றும் தெரியவந்துள்ளது. இவ்வாறு செயற்படும் ஆசிரியர்கள் பற்றி ஏனைய ஆசிரியர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் கிடைத்த ஏராளமான முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே அவர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் இருந்தால் உடனடியாக தனக்குத் தெரிவிக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். இவ்வாறான மோசடிகளில் ஈடுபடுபவர்கள் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மண்ணில்..... புதிய உதயம்

# "asa Cleen for U"

வீடுகளிலும், அலுவலகங்களிலும் தேர்ச்சி பெற்ற பணியாளர்களால்
- மாபிள் வகைகள் (Tiles)
- கண்ணாடி வகைகள்(Glass)
- சீலிங் (Ceiling)
- சுவர்கள்(Walls)
- மலசலகூடங்கள் (Toilets)
- பூந்தோட்டங்கள் (Flower Garden)

முதலியவற்றைச் சுகாதார முறைப்படி துப்புரவு செய்தல், பராமரித்தல், அழகுபடுத்தல் போன்றவை செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:- "asa Cleen for U"
144, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021-222-0752, 0778470798

### வீடு வளவு விற்பனைக்கு

கொய்யாத்தோட்டம் புதுவீதியில் இல 14 இல் உள்ள வீடும் வளவும் (2½ பரப்பு) விற்பனைக் குண்டு.

தொடர்பு: 0778995336

### பணிப்பெண் தேவை

குழந்தை பராமரிப்பதற்கும் வீட்டு வேலைகள் செய்வதற்கும் பணிப்பெண் தேவை

தொடர்பு : 0772224913

### CHEMISTRY

Group and Personal Classes for New and Old Syllabus Students and Paper Classes.

Contact No: 0750392379

### பணிப்பெண் தேவை

கொழும்பில் வசிக்கும் வயோதிபரைப் பாமரிப்பதற்கு ஆள் தேவை. உணவு, இருப்பிடவசதி இலவசம். சம்பளம் மாதம் 10,000/= வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0779004204

## உரும்பிராய்
# கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த் திருவிழா

இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை

காலை 6.00 மணி அபிஷேகம்

காலை 8.00 மணி வசந்தமண்டபப் பூசை

தொடர்ந்து கருணாகரப் பெருமான் திருத்தேருக்கு எழுந்தருளுவார்.

விசேட மேளக்கச்சேரிகள் இடம்பெறும்

கருணாகரன் அடியார்களே! எம்பெருமான் திருத்தேர் காண வாரீர்!! அவனருள் பெறுக!!!

"கருணாகரன் பாதம் கனவிலும் துணைசெய்யும்"

தேர்த் திருவிழா உபயகாரர்கள்.

# திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான கர வருஷம் ஆவணி 25 ஆம் நாள் இன்று (11.09.2011) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணி முதல் 12.30 மணி வரையுள்ள சதய நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு. திருமதி
வெற்றிவேல்
தம்பதியரின்
திருநிறைசெல்வன்
**கொங்காதரன்**
அவர்களுக்கும்



திரு. திருமதி
நாகரத்தினம்
தம்பதியரின்
திருநிறை செல்வி
**கவிதா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு N 28, Carlyle Road, Manopark, London, E 12 6 BN இல் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## தங்கள் நல்வரவை இனிதே நாடும்:

திரு. திருமதி வெற்றிவேல்
திரு. திருமதி ஜெயரத்தினம் (குகன்)
துர்க்காபுரம், தெல்லிப்பழை.
கைத்தொலைபேசி - 07735607400
தொ.பே. இல. 00442084703041

திரு. திருமதி நாகரத்தினம்
மயிலங்கூடல், இளவாலை.
தொ.பே. இல. 00442085502382

### காணி விற்பனைக்கு

பலாலி வீதியில் விவசாய பாடசாலையின் எல்லையில் 1¾பரப்புக்காணி கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

0774912596

### German Swiss மொழிகள்

தமிழ் மொழி பெயர்ப்புடன் Embassy யில் கேட்கப்படும் A1 Certificate ஏற்றவாறு நடைபெறுகின்றது.

10, Palaly Road, Jaffna, T.P.0771604823

### காணி விற்பனைக்கு

கசூரினாபீச் காரைநகரில் கடற்கரை அருகில் தென்னங்கன்றுகளுடன் ஐம்பது (50) நிலப்பரப்புக்காணி விற்பனைக் குண்டு. (உறுதி இல.11780-/04/03/2010)

தொடர்பு : 0777148099

### வீடு விற்பனைக்கு

புகையிரத நிலைய வீதி (உடையார் லேன்) கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரியில் உள்ள வீடு விற்பனைக் குண்டு. (நான்கு பக்கமும் மதிலுடன் கூடியது)

தொடர்பு கொள்ளவும் :
0772298857, 0776508963

### உடன் விற்பனைக்கு

Yamata ஓலக் 5 நூல் தையல் மெசின் Primus NM 230 சிக்சைற் (Yamata) மெசின், பெண்களுக்கான Singer தையல் மெசின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0772260573

## UNI மற்றும் Nottingham College of London கல்லூரிகள் வழங்கும் A/L 2011 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பல்வேறு சர்வதேச கற்கை நெறிகள் தொடர்பான மாபெரும் இலவச வழிகாட்டல் கருத்தரங்கும் தொழிற்பயிற்சியும் !!!

- காலம் - 16/09/2011 (வெள்ளிக்கிழமை)
- நேரம் - காலை 10.30 - 12.30 மணிவரை
- இடம் - நாவலர் கலாச்சார மண்டபம்

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உடனடி அனுமதியும் அன்றைய தினம் வழங்கப்படவுள்ளதால் பெற்றோரும் விரும்பின் பங்குபற்றலாம்!!!

முக்கிய குறிப்பு !!! நீங்களும் இக் கருத்தரங்கில் பங்குபற்றி அதிஷ்டசாலி ஆகுங்கள்!!

இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் மாணவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு ரூபா 60000/= பெறுமதியான Pentium - 04 கணினி ஒன்று எம்மால் இலவசமாக வழங்கப்படும். ஆகையால் தவறாது அனைத்து மாணவர்களும் கலந்து அதிஷ்டசாலி ஆகுங்கள்!

Advanced Diploma in ICT , HND, B.Sc (Hons), Mobile Phone Repairing, Hacking & IT Security, Multimedia கற்கை நெறிகள் பற்றிய பூரண விளக்கங்கள் மற்றும் அன்றைய தினம் அனைத்து கற்கை நெறிகளுக்கும் புலமைப் பரிசில்களும் வழங்கப்படும்!!!

இக் கருத்தரங்கில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளதால் தற்போது A/L பீட்சைக்கு தேற்றி அடுத்து எத்தகய கற்கைநெறிகளை நீங்கள் கற்று உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை இலகுவில் பெற்றுக் கொள்ளலாம் போன்ற விடயங்கள் ஆராயப்பட உள்ளதால் தவறாது அனைத்து மாணவர்களும் பங்கு பற்றி பயன் பெற்றுக் கொள்ளவும்.

!!! இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும் !!! இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!! மேலும் பல கணினி உபகரணங்களும் பரிசாக வழங்கப்படும்!!

மேலதிக விபரங்களுக்கு:- UNI - ICT Campus (Pvt) Ltd, No :- 83, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P :- 021 321 6433 / 0777 110 862

(எமது நிறுவனமானது உலகில் உள்ள 40 ற்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச உயர் கல்லூரிகளால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும்)

- Conditions for Apply -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் 6 மாதங்களாக வழங்கப்படவில்லை

## மார்ச் மாதமே இறுதியாகக் கிடைத்தது

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் கடந்த 6 மாத காலமாக வழங்கப்படவில்லை என்று பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. மார்ச் மாதத்துக்கான நிவாரணம் மட்டுமே கடைசியாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண முத்திரை வைத்திருப்போருக்குரிய நிவாரணப் பொருள்கள் உலக உணவுத் திட்டத்தினால் யாழ். மாவட்ட செயலகத்தினூடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிவாணரம் இந்த வருட ஆரம்பத்திலிருந்து மே மாதம் வரை வழங்கப்படாமல் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பின்னர் கடந்த ஜூன் மாதம், ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்கான நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மார்ச் மாதத்துக்கான நிவாரணம் ஜூலை மாதம் வழங்கப்பட்ட பின்னர் நிவாரண விநியோகம் மீண்டும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது -

தொடர்ச்சியாக ஒரே எண்ணிக்கையான மக்கள் நிவாரணம் பெற்று வருகின்றனர். மக்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்ந்த பின்னரும் அதே எண்ணிக்கையான மக்கள் நிவாரணம் பெற விண்ணப்பித்துள்ளனர். இதனால் உலக வங்கி மீளக்குடியமர்ந்தவர்களின் பெயர்களை நீக்குமாறு மாவட்ட செயலகத்துக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதனால் கிராம சேவகர்களிடமிருந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்தவர்களின் பெயர் பட்டியலைப் பெற்று புதிய பட்டியல் தயாரித்து அனுப்பியுள்ளோம். இந்த மாத முடிவுக்குள் ஏப்ரல் மாதத்துக்கான நிவாரணம் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-15-135)

# விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய ஐவருக்கு அபராதம்

தென்மராட்சி, செப்.11

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்கள் செலுத்திய ஐவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 28 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகனவரி போன்றவையின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு 8 ஆயிரத்து 500 ரூபா அபராம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் -

சாரதி அனுமதிப் பத்திரமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 2 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும்,

காப்புறுதிப் பத்திரமின்றி ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்திய இருவருக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 2 மாத சாதரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி ஓட்டோ செலுத்திய நபருக்கு 2 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிவான் மா.கணேசராஜா மேற்கொண்ட அபராதங்களை விதித்தார். (த-207)

# இந்தியாவிலிருந்து வந்த குடும்பங்களின் வைத்திய சோதனைக்கு விசேட பிரிவு

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில்

தென்மாரட்சி, செப். 11

இந்தியாவிலிருந்து தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள குடும்பங்களின் வைத்தியப் பரிசோதனை களை மேற்கொள்ள சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விசேட பிரிவு அமைக்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள மக்கள் மீளக் குடியமர்வுப் பதிவுகளுக்கு வைத்தியப் பரிசோதனைச் சான்றிதழ் அவசியம் தேவைப்படுவதால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்வதால் தமது பதிவுகள் தாமதமடைவதாக முறைப்பாடு செய்ததையடுத்து யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரனின் விசேட ஏற்பாட்டில் இந்த வைத்தியப் பரிசோதனைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (த-207)

# முழுநேரப் பணியாளராக சாவகச்சேரி நகர சபைத் தலைவர்

தென்மராட்சி, செப்.11

முழுநேரப் பணியாளராக மாறியுள்ளார் சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை.

அலுவலக நாள்களில் காலை 8 மணிக்கு நகரசபைக்கு வரும் தலைவர் மாலை 4.30 மணி வரை அலுவலகத்தில் இருந்து அங்கு வரும் பொது மக்களின் குறைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் உத்தியோகத்தர்கள் மூலம் தீர்வு வழங்கி வருகிறார்.

மக்களின் குறைகள் தொடர்பாக தனது வாகனத்தில் சென்று பார்வையிட்டு அவற்றுக்குத் தீர்வுகாண ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை, மக்களின் கருத்துக்கள் தெரிவிக்கும் அபிப்பிராயப் பெட்டி வைக்கும் வரை மக்கள் தமது குறைகளையும் அபிப்பிராயங்களையும் நகர சபை அலுவகத்தில் கையளிக்குமாறும் அவர் அறிவித்துள்ளார். (த-207)

# பாடசாலைகளின் தேவைகளை கேட்டறிகிறது நகர சபை

தென்மராட்சி, செப். 11

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குட்பட்ட முன்னணிக் கல்லூரிகள் உட்பட 12 பாடசாலைகளுக்கு கடந்த 8 ஆம் திகதி நகரசபையின் தலைவர், துணைத்தலைவர், உறுப்பினர்கள் விஜயம் செய்து பார்வையிட்டனர்.

ஒவ்வொரு பாடசாலை நிர்வாகத்தினரால் முன்வைக்கப்பட்ட பாடசாலைகளில் சேரும் கழிவுகளை அகற்றுவது தொடர்பான கோரிக்கைக்கு சபையினரால் தீர்வு காணப்பட்டது.

வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளில் சபையின் கழிவகற்றும் வாகனங்களைப் பாடசாலைகளுக்கு அனுப்பி அங்குள்ள கழிவுகளை அகற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டு அடுத்த வாரம் தொடக்கம் நடைமுறைப்படுத்தப் படுமென தெரிவிக்கப்பட்டது.

நகரசபையினால் இந்தப் பாடசாலைகளுக்கு வழங்கக்கூடிய அனைத்து சேவைகளும் வழங்கப்படுமெனவும் உறுதியளிக்கப்பட்டது. (த-207)

# காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவோர் விவரம் திரட்டல்

தென்மராட்சி, செப். 11

டெங்கு நோய் வேகமாக பரவி வருவதால் அதனைக் கட்டுப்படுத்த யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அனைத்து வைத்தியசாலைகளிலும் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற வருவோரின் விவரங்களை உடனுக்குடன் அனுப்பிவைக்குமாறு சகல வைத்தியசாலை பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். (த-207)

# யாழ். ஆஸ்பத்திரி கன்ரீனில் பெரும் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். போதனா வைத்தியசாலையின் உணவுச் சாலையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாக யாழ். மாநகர சபையின் 8 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

அத்துடன் அவசர சிகிச்சைப் பிரிவை அண்டிக் காணப் படும் மலசல கூடங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுவ தில்லை எனவும் அங்குமேலும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சுகாதாரக் குழுக் கூட்ட அறிக்கையை அங்கீகரிப்பது தொடர்பான தீர்மானத்தின் போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இவற்றை நேரடியாகச் சென்று பார்வையிட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மாநகரசபை உறுப்பினர்கள் தெரிவித்தனர். (த-7)

# வடமராட்சி கிழக்கில் இரு பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை

## கண்ணிவெடி அகற்றப்படாமையே காரணம்

யாழ்ப்பாணம், செப்.11

வடமராட்சி கிழக்கில் இரு பிரதேசங்களில் இதுவரை கண்ணிவெடிகள் அகற்றப்படாமையால் அந்தப் பகுதிகளில் மக்கள் இன்னும் மீளக்குடியமர்த்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்கின் சுண்டிக்குளம், நாகர்கோயில் கிழக்குப் பகுதிகள் இதுவரை முற்றாக விடுவிக்கப்படாத பிரதேசங்களாக உள்ளன. இந்தப்பகுதிகளில் யுத்த காலத்தில் இரு தரப்புகளினதும் முன்னரங்க நிலைகள் இருந்தமையால் அதிகளவு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதியில் இன்னும் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

நாகர்கோயில் தெற்கு, நாகர்கோயில் மேற்கு பகுதிகளிலும் சில இடங்கள் மீளக்குடியமராத பிரதேசங்களாக உள்ளன. முகமாலைப் பகுதி முன்னரங்கப் பகுதியாக அமைந்திருந்த போது இந்த இடங்களில் இரு தரப்பாலும் அதிகளவு கண்ணிவெடி புதைக்கப்பட்டன.

இதேவேளை, குறிப்பிட்ட பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை 'ஹலோரஸ்ட்' நிறுவனமும் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் மேற்கொண்டு வருகின்றனர். இந்தப் பணிகள் பூர்த்தியடைய அதிக காலம் எடுக்கும் என தெரிவிக்கப்பட்டது. (த-319)

# காரைநகரில் கடற்படை சுவீகரித்த அனைத்துக் காணிகளுக்கும் நஷ்டஈடு

## அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் உறுதி

காரைநகர், செப்.11

காரைநகர் கடற்படை முகாம் விஸ்தரிப்புக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் அனைத்துக்கும் நஷ்டஈடு வழங்கப்படும். இது தொடர்பான காணி உரிமையாளர்கள் அச்சமோ, சந்தேகமோ கொள்ளத் தேவையில்லை.

இவ்வாறு தெரிவித்தார் காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன்.

காரைநகர் கடற்படை முகாம் விரிவாக்கத்துக்காக மக்களிடம் இருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு முதற்கட்ட நஷ்டஈடு, வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலய நடராசா மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் காணிகளை [illegible] நஷ்டஈடுத் தொகைக்கான காசோலைகளை அவர்களிடம் நேரடியாகக் கையளித்து உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் உங்கள் காணிகளைக் கடற்படையினர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தனர். அப்போது சொந்த நிலத்தை இழந்து துக்கமாக இருந்தீர்கள் ஆனால் இன்று உங்களுக்கு மகிழ்ச்சியான - அதிர்ஷ்டமான நாள்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்த இழப்பீட்டுத் தொகை உங்களுக்கு வழங்கப்படுகின்றது. தொடர்ந்து ஏனையவர்களுக்கும் இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் இதில் எவரும் அச்சமோ சந்தேகமோ கொள்ளத் தேவையில்லை.

அமைச்சர் என்ற ரீதியில் உங்களுடன் சகோதரத்துவமாக நின்று உங்கள் தேவைகளையும் அபிவிருத்திகளையும் முன்னெடுப்போம். நஷ்டஈட்டைப் பெற்றுக்கொண்டவர்கள் சிறந்த முறையில் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

ஏனையவர்களுக்கு சமமான முறையில் நஷ்டஈடு வழங்கப்படும் என்றார்.

இந்த நிகழ்வில் காணிகளை இழந்த 153 குடும்பங்களில் முதற்கட்டமாகப் பதிவினை மேற்கொண்ட 46 குடும்பங்களுக்கு, அவர்களின் காணிகளின் பெறுமதிக்கமைய 45 மில்லியன் ரூபா பகிர்ந்தளிக்கப்பட்டது.

காணி அபிவிருத்தி அமைச்சின் பிரதி அமைச்சர் ஹெம்லர், அமைச்சின் செயலாளர் அசோகா பீறிஸ், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோர் உரையாற்றியதுடன் வடமாகாண காணி ஆணையாளர் பி.தயானந்தன், கொழும்பு காணித் திணைக்கள உயர் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சரஸ்வதி சங்கரப்பிள்ளை

நுணாவில் கிழக்கு, கல்வயலைப் பிறப்பிடமாகவும் மருதடி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சங்கரப்பிள்ளை (08.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வல்லிபுரம் வடிவேலு (ஓய்வுபெற்ற நில அளவைத் திணைக்களம்) காலஞ்சென்ற பூலோகம் தம்பதியரின் அன்பு மகளும், பூமணி, (திருவையாறு, கிளிநொச்சி), கனகரத்தினம் (திருவையாறு, கிளிநொச்சி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வல்லிபுரம் வேலாயுதம், காலஞ்சென்ற குணபூரணத்தின் பெறா மகளும், வீ.வீ.முருகையா (கல்வயல்), விஜயலட்சுமி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் சுகந்தி (ஆசிரியை - யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), சிவசீலன், கேதீஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் க.சத்தியானந்தன் (ஆசிரியர்- யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி), தர்சினி, நிரோஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் மதுஷா, (மாணவி- தரம் 10, யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி), லதுஷிகன் (மாணவன்- தரம் 04, யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை), பாமினி (மாணவி- தரம் 5- யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 08.09.2011 வியாழக்கிழமை பி.ப. 4.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

தகவல்:
*க.சத்தியானந்தன் (மருமகன்)*
*(ஆசிரியர்- யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி)*


**இந்தியா அர்ச்சுனா அக்கடமியின்**
**அச்சுக்கலைப் பயிற்சி நெறி**

காலம் : 17, 18.09.2011 இடம் : Y.M.C.A மண்டபம், யாழ்ப்பாணம்.
காலை : 9 - 4 மணிவரை

★ இந்த இரண்டு நாள் பயிற்சியில் 28 முறைகளில் சாறி, சுடிதார், ரீசேட் பிறிண்டிங் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.
★ பயிற்சிக்கு வருவோர் எந்தப் பொருளும் கொண்டுவரத் தேவையில்லை
★ ஆண்/பெண் இருபாலாரும் இந்தப் பயிற்சியில் கலந்துகொள்ளமுடியும். இந்தப் பயிற்சியின் பின் நீங்கள் விரும்பிய டிசைனில் விரும்பிய நிறத்தில் இயந்திரம் இல்லாமல் துணிகளில் பிறிண்டிங் செய்துகொள்ள முடியும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சிக் கட்டணம் : 3500/-

தொடர்புகளுக்கு: 0719062847, 0784561960.

## 6 ஆம் மாத நினைவஞ்சலி — 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**பொன்னையா கந்தையா**

தோற்றம்: 27.07.1930 மறைவு: 26.02.2011



**கந்தையா பூமணி**

தோற்றம்: 16.01.1939 மறைவு: 12.08.2011

எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்
(ரஜீவன் மோட்டோர்ஸ்)

செட்டிச் சோலை,
அளவெட்டி வடக்கு, அளவெட்டி.

# மரண அறிவித்தல்

## சபாரட்ணம் பாலச்சந்திரலால்



திருநெல்வேலியைப் (பணிக்கர் வளவு) பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் பாலச்சந்திரலால் 09.09.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - மங்கையர்க்கரசி தம்பதியரின் மகனும் அன்னலக்ஷ்மியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்தையா - அன்னபாக்கியம் தம்பதியரின் மருமகனும் பிரதீபன் (தீபன்), காண்டீபன் (காண்டீ), ஆரபி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரகுராஜின் (ஜேர்மனி) மாமனும் அஸ்விதா, கிறிஷ் (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் காலஞ்சென்றவர்களான நித்தியானந்தன் (கணேசன்), லக்சுமணலால் மற்றும் திருஞானசெந்தில்லால், சந்திரபோஸ் (ஆஸ்திரேலியா), சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), குபேரலால் (ஆஸ்திரேலியா), ஜெயலக்ஷ்மி, ரவீந்திரலால் (ப.நோ. கூ.சங்கம், நல்லூர்), அம்பலவாணர், பங்கயற்செல்வி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.60, கோணாவளை லேன்,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

(7784)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடு விட்டுக் கூடு பாயும் சட்டங்கள்

ஞாயிறு காரம்

**சந்திரசேகர ஆசாத்**

ஒரு காலத்தில் சிறுவர் சஞ்சிகைகளில் பலவிதமான மந்திர தந்திரக் கதைகள் வெளிவருவதுண்டு. அவை பொழுதுபோக்குக்குரியனவாக அமைந்த போதிலும் சிறுவர்களைத் திகிலூட்டும் வகையில் அமைவதுடன் சிறுவர்கள் மட்டுமன்றி பெரியவர்கள் கூட விரும்பிப் படிக்குமளவுக்கு அவை சுவையாக அமைந்திருக்கும். அவற்றில் வரும் பல்வேறு விதமான அதிசயங்களில் கூடுவிட்டுக் கூடு பாய்வதும் ஒன்றாகும். அதாவது சில மந்திரவாதிகள் தங்களின் சில தேவைகளை நிறைவேற்றவோ அல்லது தங்கள் உயிர் பாதுகாப்புக் கருதியோ தங்கள் உடலை விட்டு உயிரை வெளியேற்றி இன்னுமொரு உடலுக்குள் புகுந்து கொள்வதாகும்.

அந்த நாள்களில் அவற்றைப் பலரும் விரும்பிப் படித்த போதும் அவை முற்று முழுதான கற்பனை என்பதில் எவருக்குமே சந்தேகமிருந்ததில்லை. ஆனால் இன்று இவை இலங்கையில் யதார்த்தமாகிவிட்டதை அதிசயப்படாமலே எம்மால் காணக்கூடியதாக இருக்கிறது.

இதுவரை எமது நாட்டில் சகலவிதமான அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளுக்கும் சட்டபூர்வமான அனுமதி வழங்கி வந்த அவசரகாலச் சட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் முக்கிய மூன்று பிரிவுகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குள் கொண்டு வரப்பட்டு விட்டன.

**அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது ஏன்?**

ஒரு உடலுக்குள் இருந்த அந்தப் பயங்கர சட்டப் பிரிவுகள் இன்னொரு உடலுக்குள் கூடுவிட்டுக் கூடு பாய்ந்து விட்டன. அப்படியானால் அதற்காக எவரின் தேவைகளுக்காக அவசரகாலச் சட்ட விதிகள் நீக்கப்பட்டன என்ற கேள்வி இங்கே எழத்தான் செய்கிறது.

இப்போது இலங்கை அரசு இரண்டு விதமான சிக்கலுக்கு முகம் கொடுக்க வேண்டியுள் ளது. ஒன்று செப்ரெம்பரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத் தொடர். இதில் இலங்கையில் இடம்பெற்ற தாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், நீண்ட காலமாக விசாரணையின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் பிரச்சினைகள், உயர் பாதுகாப்பு வலயங்கள் போன்ற விவகாரங்கள் தொடர்பாக அரசு பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வேளையில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதைச் சுட்டிக் காட்டி நிலைமை சுமுகமாகி வருவதாக ஒரு மாயையை உருவாக்கி கண்டனங்களின் தாக்கத்தைத் தணிப்பதற்கு இது உதவலாம் என அரசு கருதுகின்றது.

மற்றது இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்படுவதற்கு அவசரகாலச் சட்டம் நீக்கப்படாமையும் ஒரு காரணம் எனவே காட்டப்பட்டது. வெகுவிரைவில் இந்தச் சலுகை தொடர்பான மீளாய்வு இடம்பெறவுள்ளது. அங்கு அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டமையை சுட்டிக் காட்டி மீண்டும் அந்த வரிச்சலுகையை கோருவதற்கு இது பயன்படுத்தப் படலாம்.

உண்மையாகவே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருந்தால் நடைமுறையில்ஒருபெரும் மாற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். ஆனால் நிலை மையோ முன்பிருந்ததை விட மோசமாக்கப்பட்டுள்ளதே யதார்த்தமாகும்.

ஒவ்வொரு சின்னச் சின்ன விடயங்களிலும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்குப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்து விட்டன.

அண்மையில் நாவாந்துறையில் மர்ம மனிதன் தொடர்பாக படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது. அதையடுத்து வீடு வீடாகப் புகுந்து நோயாளிகள், முதியவர் உட்பட 100 பேரை அடித்து நொருக்கிக் கொண்டு சென்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்கள் மீது அரசுக்கு எதிராகச் சதி செய்ததாகவும் ஆயுதப் படையினரைக் கடமை செய்யவிடாது தடுத்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**இராணுவப் பேச்சாளர் கூறியுள்ள கருத்து**

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிக்கேடியர் நிஹால் ஹப்பு ஆராய்ச்சி மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

இது மட்டுமன்றி ஏழா லையில் கிறீஸ் மனிதர்கள் எனக் கூறப்படுபவர்களுக்கு எதிரான ஒரு துண்டுப் பிரசுரத்தை விநி யோகித்தார் என்ற பேரில் ஒரு இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது சாதாரணமாக மக்களுக்கு எதிராக எப்படி எப்படியெல்லாம் இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்பதற்கான முன்னறிவித்தல் என்றே கருதவேண்டியுள்ளது.

சாதாரண சட்டங்களின் கீழ் பொலிஸார் சிவில் நிர்வாகத்தின் ஒரு பகுதியினரே. இவர்களே பொதுமக்களின் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு நிலை நிறுத்தல் என்பவற்றுக்குப் பொறுப்பானார்கள். ஆனால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டது. வடக்குக் கிழக்கில் பாதுகாப்பு நடவடிக்கைளில் மட்டுமன்றி சாதாரண ஒவ்வொரு சிவில் நிர்வாக நடவடிக்கைகளிலும் இராணுவத்தினரின் தலையீடு இருந்தது. பாடசாலை நிகழ்வுகள் முதல் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் வரை அனைத்திலும் படையினரின் பிரசன்னமும் தலையீடும் கட்டாயமாக்கப்பட்டுள்ளன என்ற வகையில் விடயங்கள் இடம்பெற்றன.

இப்போது அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு விட்டது. ஆனால் ஏற்கனவே இருந்து வந்த நடை முறைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. இதுவரை வடக்கில் இராணுவ சோதனைச் சாவடிகள், காவலரண்கள் அகற்றப்படவுமில்லை. இராணுவம் முகாம்களுக்குள் முடக்கப்படவுமில்லை.

இதேவேளையில் அவசரகாலச் சட்டம் இல்லாமலே படையினரை நாட்டின் எப்பகுதியிலும் சேவைக்கு அழைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதாவது சிவில் நிர்வாகத்தில் பாதுகாப்புக்குப் பொறுப்பான பொலிஸ் மா அதிபர் பாதுகாப்பு அமைச்சுக்கும் [illegible] நிலையில் [illegible] ஜனாதிபதி இந்த அதிகாரத்தைப் பயன் படுத்த முடியும்.

> **மக்களை வீதியில் இறக்கி மக்களுக்கும் படையினருக்குமிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தி ஓர் அசாதாரண நிலை நிலவுவதாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இதன் அடிப்படையில் அடக்கு முறைச் சட்டங்களை மேலும் இறுக்குவதே நோக்கம் என்பது தெளிவாகிறது.**

இப்படியான நிலை யில் அவசரகாலச் சட்டம் நீக்கப் பட்ட மைக்கு அர்த்தம் எதுவாக இருக்க முடி யும். அதைவிட அவசரகாலச் சட்டத் தின் மூன்று பிரிவுகள் இப்போது பயங்கர வாதத் தடைச் சட்டத்துக்குள் கூடுவிட் டுக் கூடு பாய்ந்து விட்டன.

**மக்களின் எதிர்பார்ப்பு**

அவசரகாலச் சட்டம் நீக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்ட போது தமிழ் மக்கள் உயர்பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும் எனவும் அவற்றுக்காக அபகரிக்கப்பட்ட காணிகள் மீளவும் வழங்கப்பட்டு மக்கள் குடியமர அனுமதிக்கப்படுவார்கள் எனவும் எதிர்பார்த்தனர். அது மட்டுமன்றி விசாரணைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் ங்கைதிகள் விடுவிக்கப்படுவர் அல்லது சாதாரண சட்டங்களின் கீழ் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு பிணையில் விடப்படுவர் எனவும் எதிர்பார்த்தனர். மேலும் சரணடைந்து புனர்வாழ்வு என்ற பேரில் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளும் விடுக்கப்படுவர் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் இந்த மூன்று அவசரகாலச் சட்டப் பிரிவுகளும் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குள் புகுத்தப்பட்டதன் மூலம் நிர் மூலமாக்கப்பட்டன. இவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டம் புனர் ஜென்மம் எடுப்பதற்கும் கிறீஸ் மனிதர்கள் எனப்படும் மர்மமனிதர்களுக்கும் சம்பந்தம் உண்டா என்ற கேள்வி எழுகிறது. நிச்சயமாக அப்படியொரு தொடர்பு இருப்பதாகவே கருத வேண்டியது தவிர்க்க முடியாமலுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் சில நடுத்தர வயதுப் பெண்களின் கொலையுடன் ஆரம்பமான மர்ம மனிதன் விவகாரம் முதலில் மலையகத்தின் பல பகுதிகளுக்கும் விரிவடைந்தன. பெண்கள் மீது பாலியல் சேட்டைகள், மரத்திலிருந்து குதித்து அல்லது மறைவிடங்களிலிருந்து தோன்றி மிரட்டுவது, சந்தேகத்துக்கிடமான வகையில் நடமாடிவிட்டு ஓடுவது போன்ற அர்த்தம் காண முடியாத சம்பவங்களே இந்த மர்ம மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டன. இரத்தினபுரியில் நடந்த சம்பவங்களை விட வேறு எங்கும் கொலையோ, கொள்ளையோ, பாலியல் வன்புணர்வோ மேற்கொள்ளப்படவில்லை.

இதேவேளையில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் உறவினர்களைத் தேடி வந்தவர்கள், யானை கணக்கெடுக்க வந்தவர்கள், தேன் சேகரிக்க வந்தவர்கள் எனக் கூறப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

**நீதியின் முன் நிறுத்தப்படாத 'கிறீஸ்'**

இங்கு கவனத்தில் எடுக்கப்பட வேண்டியது என்னவெனில் கிறீஸ் மனிதர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்கள் எவரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை. மாறாக அவர்களைப் பிடித்தவர்கள் அவர்களைத் தாக்கியவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அடுத்து இந்தப் பிரச்சினை கிழக்கில் பரவியது. வாழைச்சேனையில் ஆரம்பித்த இந்த விவகாரம் கல்முனை, சம்மாந்துறை, களுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி எனப் பரவி கிண்ணியாவரை நீண்டது.

இந்த விடயங்களில் இப்படியான சந்தேகத்துக்கிடமானவர்கள் ஓடிப் போய் பொலிஸ் நிலையங்களுக்குள்ளோ படை முகாம்களுக்குள்ளோ மறைந்துவிட்டனர். மக்களால் பிடித்து ஒப்படைக்கப்பட்டவர்களும் விடுவிக்கப்பட்டனர். இதன் காரணமாக பொலிஸாருக்கும் மக்களுக்குமிடையேயும் படையினருடனும் மோதல்கள் ஏற்பட்டன. இதில் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சில பொதுமக்கள் இறந்தனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளானார்கள். பலர் கைது செய்யப்பட்டனர். ஆனால் எந்த ஒரு மர்மநபரும் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

இதே மர்மநபர் விவகாரம் வடக்கின் பல பகுதிகளுக்கும் பரவியது. மக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட சந்தேக நபர்கள் அனைவருமே விடுவிக்கப்பட்டு விட்டனர். ஆனால் மர்ம நபர்களைப் பிடிக்க முயன்ற பலர் அடித்து நொருக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர். நாவாந்துறையில் வீடுகளுக்குள் புகுந்து கைது செய்யப்பட்டவர்கள் மேல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்படவுள்ளது.

**மர்மமனிதர்களின் நோக்கம் என்ன?**

மலையகத்திலும் சரி கிழக்கிலும் சரி வடபகுதியிலும் சரி இந்த மர்ம மனிதர்களின் நடமாட்டங்கள் மக்கள் நெருக்கமாக வாழும் பகுதிகளில் அதாவது மக்கள் உடனடியாக ஒன்றுகூடக்கூடிய இடங்களிலேயே இடம்பெற்றுள்ளன. அப்படியானால் இதன் நோக்கம் என்ன? மக்கள் விரட்டும் போது மர்த மனிதர்கள் ஓடிப்போய் படைமுகாம்களுக்குள் மறைவது ஏன்?

மக்களை வீதியில் இறக்கி மக்களுக்கும் படையினருக்குமிடையே முறுகல் நிலையை ஏற்படுத்தி ஓர் அசாதாரண நிலை நிலவுவதாக ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி இதன் அடிப்படையில் அடக்குமுறைச் சட்டங்களை மேலும் இறுக்குவதே நோக்கம் என்பது தெளிவாகிறது.

இதைப் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தனா செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்திலிருந்து தெளிவாகவே புரிந்துகொள்ள முடியும்.

அவர் வெளிநாட்டுச் சதிகளின் ஒரு பகுதியாகவே மர்மமனிதர் விவகாரம் விளங்குவதாகவும் அதன் காரணமாகக் குற்றவியல் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வரவுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். ஏற்கனவே அப்படி ஒரு முயற்சி நீதியமைச்சரால் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டு ஐ.தே.கட்சியின் எதிர்ப்புக் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதாவது மர்மதனிதர் விவகாரம் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்ட பின்பு பாதுகாப்புச் சட்டத்தையும் குற்றவியல் சட்ட்களையும் மேலும் வலுப்படுத்தி அடக்குமுறையைத் தொடர காரணங்கள் உருவாக்கத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. அடிப்படையில் அவசரகாலச் சட்டம் இப்போ கூடுவிட்டுக் கூடு பாய்ந்து வேறு சட்டங்களுக்குள் புகுந்து கொண்டுவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடித் தேவை

மடப்பள்ளி அனுபவமுள்ள உதவி அந்தணர் ஒருவர் உடனடியாகத் தேவை. சுறுசுறுப்புள்ளவரும், விவேகமானவரும் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். திறமைக்குத் தகுந்த ஊதியம் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்

(7762) 0776248780, 0777315507

## சேவை நலன் பாராட்டு



யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை, கட்டுடை

**செல்வி சிவஞானவல்லி இராசையா** *(சிரேஷ்ட ஆசிரியை)*

34 வருட கால ஆசிரிய சேவையைச் செய்துள்ளார். ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்வியையும், ஒழுக்கத்தையும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் சென்றவர். கல்வியோடு மட்டுமன்றி இணைப்பாட விதானச் செயற்பாடுகளையும் சிறப்பாகப் பயிற்றுவித்து, இன்று அகவை அறுபதில் இளைப்பாறும் எமது சிரேஷ்ட ஆசிரியரைப் பல்லாண்டு காலம் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

(7796) யா/ கட்டுடை சைவ வித்தியாசாலை.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்

**றோயல் குளுக்கோஸ்**

100%சுத்தமானது

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்

PACKED BY:

ROYAL Industries

Colombo 12, T.P 0777277670

அனைத்துப் பார்மசிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இலவசம்

அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!

எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.

## மணமகள் தேவை

இலண்டன் P.R உள்ள எக்கவுண்டன் மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை. மணமகள் பட்டதாரியாகவும் 1984 ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவராகவும் இருத்தல் வேண்டும். மணமகன் இந்து கௌரவ குடும்பம், 1979 திருவோணம் 3 ஆம் பாதம் 20½ கிரக பாவம்.

தொடர்பு:

மே.பா உதயன், விளம்பர இல.4167,

இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

யாழ்.அரியாலை, கண்டி வீதி தபால்கட்டைச் சந்தியிலிருந்து 50M தூரத்துக்குள் நான்கு படுக்கை அறைகளும், குளியலறை, சமையலறை வசதிகள் கொண்ட வீடு (காரியாலய பாவனைக்கு, உத்தியோகத்தர் விடுதிக்கு, களஞ்சிய அறைகளுக்கு, வீட்டுப் பாவனைக்கு உகந்தது). உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: நேரடித் தொடர்புண்டு.

தொ.பே: 0775006392, 0523531058

## வீடு வாடகைக்கு

நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக உபயோகிக்கக் கூடிய 3 பரப்புக் காணியில் வரவேற்பறை, 4அறை, சமையலறை, களஞ்சிய அறை 2 குளியலறையும் (ஒரு அறை A/C) 10 வாகனத் தரிப்பிடமும் நீர்த் தாங்கி, ஜெனரேட்டர் வசதிகள் கொண்ட வீடு ஐப்பசி முதலாம் திகதி தொடக்கம் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

021 222 8195

077 500 3780

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,

19, முருகேசர் லேன், நல்லூர்.

## வீடு வாடகைக்கு

இலுப்பையடிச் சந்திக்கு அருகில் பலாலி வீதியில் அமைந்த அறைகள் வாடகைக்கு விடப்படும். பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 0773995716

## அமெரிக்க வீஸா லொத்தர்

(இன்ரநெற்/ ஆங்கிலம் தெரியாதவர்களுக்கான சேவை) எம் மூலம் விண்ணப்பிக்க ரூ.15/- முத்திரை ஒன்று, பெயர், விலாசம், மணமான வரா இல்லையா விவரத்துடன் எழுதவும்.

**BBS Netting,**

**3/14, Pinwatta Road, Dehiwala.**

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

22

SEPT. 2011 TO FEBRUARY 2012

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: **0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator

MARUTHUR . A. HASSEN

*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**

24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.

Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org

Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2011

## A/L இன் பின்னர் !!!

சர்வதேசத் தரம் வாய்ந்த கணினிகற்கை நெறிக்குரிய புதிய வகுப்புக்கள் ஆரம்பம்.

- International Diploma in Computing
  Accredited by *ED-hat* international
- International Higher Diploma in Computing
  Computing, Software Development, Computer Networking, Business Management
  Accredited by *ED-hat* international
- International Diploma in Computing
- Multimedia, Web development, CCNA, Desktop Publishing, Accounting Packages, Software Engineering, Hardware

முதலில் பதிவு செய்யும் *50 ED-hat* மாணவர்களுக்கு Pen Drive இலவசம்

முதலில் பதிவு செய்யும் International Diploma in Computing மாணவர்களுக்குIDM T shirt இலவசம்

மேலும் ஓர் அரிய வாய்ப்பு

**IDM Nations Campus Jaffna Branch**

**&**

**Aharam Solution (Pvt) Ltd**

இணைந்து வழங்கும்

இலவசக் கணினிக் கருத்தரங்கும் தொழில்சார் வழிகாட்டலும்..

Tips and Tricks by Experts in Industry.

Computer Networking, Software Development, Multimedia, Ethical hacking Laptop Engineering (1st time in Jaffna), iPhone Jailbreak

பங்குபற்றும் அனைவருக்கும் விசேட கட்டணச் சலுகைகள் வழங்கப்படும்

Sep-10-2011 சனிக்கிழமை காலை 9 :15 AM நெல்லியாடி மத்திய மகாவித்தியாலயம்

Sep-11-2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9 :15 AM சாவகச்சேரி இந்து கல்லூரி

Sep-12-2011 திங்கட்கிழமை காலை 9 :15 AM தியாகி அறக்கொடை நிலையம் (TCT centre) யாழ்ப்பாணம்

**IDM Nations Campus**

IDM Nations Campus

Jaffna Branch

Managed by Aharam Solution (Pvt) Ltd

Sri Lankan Brand *for* Higher Education

# 216 Navalar Road, Jaffna, Sri Lanka | T 021 222 9901 | F 021 222 9901 | info@jaffna.idmcc3.lk | www.jaffna.idmcc3.lk

## Spoken English

After A/L?

2 months course (week days) Mon to Fri 9am – 10am | 3 Months course (Weekend classes) Sat & Sun 11am - 1pm

ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையுடன் உரையாட

சர்வதேச பரீட்சைகளில் தோற்ற

ஆங்கிலமொழிமூல பாடநெறிகளை பயில

Fee Rs.5000/=

BRITISH COUNCIL

**IELTS** IELTS is the world's proven English test. Over 1.4 million candidates take the test each year to start their journeys into international education and employment

- YLE - Young Learners English
- PET – Preliminary English Test
- KET – Key English Test
- FCE – First Certificate in English
- CAE – Certificate in Advance English
- CPE - Certificate of Proficiency in English
- TKT – Teaching Knowledge Test

கணணிமூலமான விளக்கங்கள்

எளிய புதிய அணுகுமுறையிலான விரிவுரைகள்.

A/L English, Commerce & Maths

Cambridge English The most valuable English qualifications in the world

aat SRI LANKA

AAT leads you on to great heights

First step to embark in Professional Accountancy Education

CIMA is the world's largest professional body of management accountants.

CIMA has more than 183,000 students and members in 168 countries

CIMA's globally recognised qualification is the perfect choice for a successful career in business

CIMA

IBSL

நீங்களும் ஓர் வங்கி அலுவலர் ஆக உலகளாவிய அங்கீகாரம்பெற்ற IBSL தகைமையை Spectra Skills மூலம் பெற்றுக்கொள்ளலாம்!

- CBF – Certificate in Banking
- DBF – Diploma in Banking

தமிழ் & ஆங்கில மொழி மூலம்

*Free Regitration for all subjects on or before - 18.09.2011*

*Scholarship!*

**All our courses are conducted by lecturers with several years of teaching and industrial experience**

spectra skills

No. 19, Stanley road, (2nd floor-People's Bank)

Tel: 021 222 1422 & 1423

Email: jaffna@spectraskills.com Web: www.spectraskills.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 13ஆம் திகதி நடமாடும் சேவை

கிளிநொச்சி, செப்.11

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நீதி நியாயத்தை சமமாக அணுகும் கருத்திட்டத்தின் அனுசரணையுடன் கண்டாவாளை பிரதேச செயலாளர் பிரிவில் நடமாடும் சேவை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறவுள்ளது.

இதில் ஆள்பதிவுத் திணைக்களம் மற்றும் பதிவாளர் ஆணையாளர் திணைக்களம் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ளனர்.

இதில் கண்டாவளைப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மக்கள் புதிய அடையாள அட்டை எடுத்தல், அடையாள அட்டை தொடர்பான ஏனைய பிரச்சினைகள், பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக் கொள்ளலாம்.

மற்றும் தேசிய அடையாள அட்டைக்கு புகைப்படம் எடுத்தல், அதற்குரிய முத்திரைக் கட்டணம், ஆவணங்களுக்குரிய முத்திரைக்கட்டணம் என்பனவும் இலவசமாகச் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இந்த நடமாடும் சேவை மூலம் யுத்தத்தால் இடம்பெயர்ந்து தமது முக்கிய ஆவணங்களைத் தொலைத்தவர்களும், உரிய பதிவுகளை உரிய முறையில் மேற்கொள்ளாதவர்களும் பயனடைய முடியும்.

கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.(க-311)

# குள வாய்க்காலில் நீர் பாயாததால் நெற்செய்கை அளவு குறைப்பு

அக்கராயன், செப். 11

அம்பலப் பெருமாள் குளத்தின் கீழ் 150 ஏக்கருக்கு மேலான நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளமுடியாதுள்ளதாக அம்பலப்பெருமாள் குளம் கமக்கார அமைப்பின் தலைவர் மு.சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இந்தக் கிராமத்தில் 2009 ஆம் ஆண்டு மீள்குடியமர்வின் போது 65 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. 1968 ஆம் ஆண்டு அம்பலப்பெருமாள குளம் குடியேற்றத்திட்டம் உருவாகும் போது 210 குடும்பங்கள் இருந்தன.

1981 ஆம் ஆண்டு அம்பலப் பெருமாள் குளம் உடைப் பெடுத்ததன் காரணமாக முக்கியமான வாய்க்கால் ஒன்று பயன் படுத்த முடியாத நிலையில் நீர் வழங்கல் இடைநிறுத்தப்பட்டது. இதன் காரணமாகக் குடியமர்ந்த பல குடும்பங்கள் யாழ்ப் பாணம், கிளிநொச்சி போன்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்து விட்டன.

மேலும் 12,13,15,16 வாய்க்கால்களுக்கு அம்பலவன் சின்னக்குளம் மூலம் நீர் வழங்க முடியும். அம்பலப்பெருமாள் குளத்தின் மூலம் 150 ஏக்கர் நெற்செய்கை மேற்கொள்ள முடியும். மேட்டு நிலப் பயிர் செய்கைக்கும் நீர்வழங்க முடியுமென நீர்ப்பாசன திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பலப்பெருமாள் குளத்தின் கீழ் தற்போது 450 ஏக்கர் நெற்செய்கை காலபோகத்தில் மேற்கொள்ள முடிகின்றது. ஒரு வாய்க்காலில் நீர்ப்பாசனம் மேற்கொள்ளமுடியாமையினால் 150க்கு மேலான ஏக்கர் நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாதுள்ளது.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் 56 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியிலிருந்து அம்பலவன் சின்னக் குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய இரு குளங்களின் வேலைகள் இடம்பெறவுள்ளன எனவும் தெரிவித்தார்.

(க-410)

# ஜெயந்தி நகரில் வீதிகள் புனரமைப்பு

கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் உள்ள வீதிகள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஜெயந்திநகரில் பல குறுக்கு வீதிகள் சிமெந்தால் கொங் கிறீற் இடப்பட்டுப் புனரமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் இந்த வீதிகளின் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேபோலக் கனகபுரம் பகுதியின் குறுக்குவீதிகளையும் திருத்தியமைப்பதற்கான ஆரம்ப கட்டச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது. மேற்படி வீதிகள் புனரமைக்கப்பட்டு வருவதால் இந்த வீதிகளைப் பயன்படுத்துவோர் நன்றி கூறி மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (க-426)

# மரியன்னை ஆலயத் திருவிழா



மன்னார், செப். 11

மன்னார் விடத்தல் தீவு புனித மரியன்னை ஆலயத் திருவிழாத் திருப்பலி கடந்த வியாழக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது இந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு மரியன்னையின் ஆசீரைப் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி திருவிழாத் திருப்பலியின்போது சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டோரின் விடுதலைக்காகவும் இடம்பெற்ற யுத்தத்தின்போது உயிரிழந்த உறவுகளுக்காகவும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

(க-601)

# புகைத்தல் பொருள்கள் விற்பனை

மன்னார், செப்.11

மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்களில் 18 வயதுக்குக் குறைவானவர்களுக்குப் புகைத்தல் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

அரசால் 21 வயதுக்குக் குறைந்தவர்களுக்குப் புகைப் பொருள்கள் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ள இது தொடர்பாக ஒவ்வொரு விற்பனை நிலையங்களிலும் விழிப்புணர்வு விளம்பரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் உள்ள அநேகமான வர்த்தக நிலையங்களிலும் சிறுவர்களுக்குப் புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. சில உணவகங்களில் புகைப்பிடிப்பவர்களுக்காகத் தனிமையான இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே பொதுச் சுகாதார பரிசோதகர் இந்த விடயத்தில் செயற்பட்டு சிறுவர் புகைப் பிடித்தலை தடுக்குமாறும் இதற்கு உடந்தையாகக் காணப்படுகின்ற விற் பனையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(க-601)

# கல்வியைப் பாதிக்கும் போக்குவரத்து

கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி விநாசியோடை அ.த.க. பாடசாலை மாணவர்களின் கல்வி, போக்குவரத்துப் பிரச்சினையால் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது. பரமன் கிராய் சந்தியில் இருந்து விநாசியோடை கிராமம் வரையான 12 கிலோ மீற்றர் நீளமான பாதையில் காலை, மாலை என ஒரு பஸ் சேவையே நடைபெற்று வருகின்றது. இதனால் அங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் செல்வதற்கு அந்தப் பஸ் சேவை பொருத்தமானதாக இல்லை. இதனால் வருமானமற்ற நிலையில் காணப்படும் விநாசி யோடை கிராம அபிவிருத்திச் சங்கம் கடந்த பல மாதங்களாக ஆசிரியர்களை ஏற்றியிறக்கும் பணியை மேற்கொண்டுள்ளது. வாகனம் பழுதான நிலையில் அவர்களாலும் அந்தச் சேவையை மேற்கொள்ள முடியாது போயுள்ளது. இடையிடையே 15 ஆவது பிரிகேட் கௌதாரிமுனை இராணுவத் தளபதியாலும் போக்குவரத்துச் சேவை ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இலங்கை போக்குவரத்துச் சபையின் சீரற்ற சேவையால் பாடசாலை மாணவர்களின் கல்வி பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது. அத்தோடு கடந்த செவ்வாய்க்கிழமை அதிபர் மட்டும் சமுகமளித்திருந்த நிலையில் ஏனைய ஆசிரியர்கள்பணிக்கு வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-406)

# 16 வீதிகள் புனரமைப்பு

முல்லைத்தீவு, செப். 11

முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன.

கரைதுறைப்பற்று புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள 50 கிலோ மீற்றர் நீளமான வீதிகளே புனர மைக்கப்படவுள்ளன.

(க-500)

# மோட்டார் சைக்கிள் களவு

கிளிநொச்சி, செப்.11

கரடிப்போக்குச் சந்தியில் கடைக்கு முன்நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, மருதநகரைச் சேர்ந்த கனகசிங்கம் என்பவர் கடந்த 31 ஆம் திகதி இரவு 8.30 மணியளவில் கரடிப்போக்குச் சந்தியில் உள்ள மணியம் கடைக்குச் சென்றபோது தனது யமஹா மோட்டார் சைக்கிளைக் கடைக்கு முன் நிறுத்திவிட்டுக் கடையில் பொருள்களை வாங்கியுள்ளார்.

பின்னர் திரும்பி வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளைக் காணாது அருகில் உள்ளவர்களுக்கு விடயத்தைக் கூறித் தேடிப் பார்த்தபோதிலும் மோட்டார் சைக்கிள் கிடைக்கவில்லை.

இது தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் [illegible] முறைப்பாடு [illegible] றது. (க-426)

# தொண்டு நிறுவனங்கள் உதவவில்லையென ஒட்டுசுட்டான் பழம்பாசி கிராம மக்கள் கவலை

முல்லைத்தீவு, செப். 11

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள பழம்பாசி கிராமத்து மக்களை தொண்டு நிறுவனங்கள் கைவிட்டு விட்டதாக அந்தக் கிராம கமக்கார அமைப்புத் தலைவர் ஆனந்தராசா கவலையுடன் தெரிவித்தார்.

எமது கிராம மக்கள் அரச உத்தியோகம் பார்ப்பவர்கள் அல்ல. விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே உத்தியோகம் பார்க்கின்றனர். ஏனையவர்கள் யாவரும் கூலிவேலை செய்பவர்களும் நிலத்தைக் கொத்தி சீவனம் செய்பவரும் ஆவார். தொண்டு நிறுவனங்கள் ஒரு சிலருக்கே உதவிகளை வழங்கினர். இதனால் ஏனையவர்கள் பெரிதும் இடர்படுகின்றனர். பாதிக்கப்பட்ட எமது கிராம மக்கள் தற்போது மிகவும் நொந்து போய் உள்ளனர் என்பதை அறிந்தும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கூட அனைவருக்குமான வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வரவில்லை. இது மிகவும் கவலையாக உள்ளது. இது மட்டுமல்ல காணி விடயங்களில்கூட சில செயற்பாடுகள் முரண்பாடான வகையில் நடைபெறுகின்றன என்பதையும் தெரிவிக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-500)

# பரந்தன் சந்தி விபத்தில் ஒருவரின் கால் முறிந்தது

கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி பரந்தன் சந்தியில் மோட்டார் சைக்கிளும் டிப்பர் வாகனமும் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவரின் கால் முறிந்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;

முல்லைத்தீவு வீதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த 53 வயதான தி.தெய்வேந்திரகுமார் என்பவர் பரந்தன் சந்தியால் வந்து திரும்பும் போது கிளிநொச்சி யில் இருந்து முல்லைத்தீவு வீதிக்குத் திரும்பும் டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு விபத்துக்குள் ளாகிக் கால் முறிந்ததுடன் காயங்களுக்கும் உள்ளானார்.

இவர் உடனடியாகக் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கி ருந்து யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். பரந்தன் சந்தியின் நடுப்பகுதியில் உள்ள வீதிக் குழிகள் காரணமாகவே இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. (426)

# க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றியோர் தொகை குறைவு

முல்லைத்தீவு, செப். 11

ஒட்டுசுட்டானில் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு 73 மாணவர்களே தோற்றியுள்ளதாக முதன்மை மேற்பார்வையாளரும் பாடசாலை அதிபருமான நித்தியகலா வேகாவனம் தெரிவித்தார்.

இடப்பெயர்வு காரணமாக பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய மாணவர்கள் தமது கல்வியைத் தொடராததால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கவில்லை. இதனால் பரீட்சார்த்திகள் எதிர் பார்த்த அளவு தோற்ற வில்லையெனத் தெரிய வருகின்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கிறீஸ்பூத விவகாரத்தால் பாடசாலைக்கு வரும் மாணவர்களது தொகையும் குறைந்துள்ள நிலையில் அவர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாட்டினால் முழுமையாகப் பாதிக்கப்படுவது தமிழ் மாணவர்களே எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, குறுக்குத்தெருவில் காமாட்சி அம்பாள் தொழிற்சாலைக்கு கிழக்குப் பக்கமாக உள்ள ஒழுங்கையில் இரண்டாவதாக உள்ள சுற்றுமதில்களுடன் அமைந்த வீடு 2பரப்புக் காணியுடன் விற்பனைக்கு உண்டு. கூடியவிலை கேட்பவர்களுக்கு உடன் கொடுக்கப்படும். நேரடியாக வீட்டு உரிமையாளருடன் அதே விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் ஹாட்வெயர்ஸ் விற்பனை நிலையத்துக்கு கீழ்க்காணும் பணிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. காசாளர்
02. விற்பனையாளர்
03. கணக்குப் பதிவாளர்
04. சிற்றூழியர்

* மேற்படி பணிகளில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு உங்கள் சுய விவரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு 15.09.2011 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

(7798)

விளம்பர இல.4171
மே/பா உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பணிநிலை வேண்டுகை

குமரகுரு மல்ரிசொப். A-9 வீதி, கிளிநொச்சி.
(புதிய பொது வைத்தியசாலை முன்பாக)

கீழ்க்காணும் பணிநிலைகளுக்கான தகைமையானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விளம்பரப் பகுதி:**

* இரண்டுமாத ஒப்பந்த வேலை வாய்ப்பு பேச்சுத் திறமையுடைய ஆண்கள், பெண்கள் இருபாலாரும்.
* வயதெல்லை: 20 தொடக்கம் 35 வயதுவரை
* 15.09.2011 வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்

**விற்பனையாளர்:**

* புடைவை, அழகுப்பொருள், இலத்திரனியல் பலசரக்கு வியாபாரத்தில் குறைந்தது 3 வருட அனுபவம் உள்ள பணியாளர் தேவை. (ஆண்கள் மட்டும்)
* கவர்ச்சிகரமான ஊதியத்துடன் தங்குமிட வசதி இலவசம்

**மின் இணைப்பாளர்:** (Electrician)குறைந்தது 3 வருட அனுபவம் உள்ள தகைமையாளர் தேவை.

விண்ணப்பங்களை 15.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு தபால் மூலமோ நேரிலோ அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர், குமரகுரு மல்ரிசொப்,
A-9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.

## வீடும் கடையும் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பாஷையூர் இல.20, சென். அன்ரனிஸ் வீதியில் அந்தோனியார் கோயிலுக்கு முன்பாக, விளையாட்டு மைதானத்துக்கு அருகில் 4 அறைகள் இணைந்த குளியல் அறையுடன் கூடிய வீடு (1 பரப்பு 9 குளி காணி) அதனுடன் கூடிய கடையும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
0718148150,
61418967725 (ஆஸ்திரேலியா)

## காணி விற்பனைக்கு

மூளாய், சேர்ச் லேனில்
4½ பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0772395774

## பெண் உதவியாளர் தேவை

பகுதி நேரமாக இயங்கும் தனியார் மருத்துவ மனைக்கு பி.ப 3.30 முதல் 7 மணிவரை கடமையாற்றக்கூடிய பெண் உதவியாளர் தேவை. A/L படித்த ஆர்வமுள்ளவர்கள் மாலை 4 மணிமுதல் 7 மணிவரை நேரில் வரவும் (ஞாயிறு விடுமுறை).

**ABC MEDICAL CLINIC,**
*MYLANY ROAD, CHUNNAKAM.*

## காணி வாடகைக்கு உண்டு

இல.77, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்
6 பரப்புக் காணி இரண்டு வருட காலத்துக்கு வாடகைக்குத் தரப்படும்.
தொடர்பு: S.சிவகுருநாதன்,
தொ.பே: 0771686894

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில்
3½ பரப்புக் காணியில்அமைந்த வீடு
விற்பனைக்குண்டு (காணி பிரித்தும் கொடுக்கப்படும்)
தொடர்பு: 0776146434

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு, இலகடியில் 2½ பரப்பில் அமைந்துள்ள 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. ,
தொ.பே: 0722675989

## PHYSICS PARK

* தமிழ் மொழி மூலம்
* ஆங்கில மொழி மூலம்

2011 A/L Repeat
ஆரம்பம்: 12.09.2011 பி.ப. 5 மணி
வைத்தீஸ்வராச் சந்தி அருகில்

A. Anapayan B.Sc. (Hons) Spl (phy)

## ஊடகவியல் குறுங்காலப் பயிற்சி III

### "புலனாய்வு மற்றும் அரசியல் இதழியல்"

### "Investigative and Political Journalism"

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமையம் பத்திரிகைத்துறை சார்ந்தோருக்கான குறுங்காலப் பயிற்சி ஒன்றை ஒழுங்குசெய்துள்ளது

செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி முதல் 20ஆம் திகதிவரை பி.ப. 3 மணி -மாலை 6 மணி வரை நடைபெறவுள்ளது.

**யார் யார் பங்குபற்றலாம்?**

செய்தி இதழ் ஆசிரியர்கள், அலுவலக மற்றும் பிரதேச செய்தியாளர்கள், சிறு சஞ்சிகை ஆசிரியர்கள், பருவகால பத்திரிகையில் பணிபுரிவோர், நிறுவனங்களின் தொடர்பாடல் மற்றும் ஊடக உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் ஊடகக் கல்வி ஆசிரியர்கள் இதில் கலந்து கொள்ளலாம்.

பயிற்சிக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சுவீடன் நாட்டின் போயோ (Fojo) நிறுவனத்தின் ஊடகவியல் விரிவுரையாளரும் பயிற்றுவிப்பாளருமான வில்லி ஒலிவர் (Willie Olivier) பயிற்சிகளை வழங்கவுள்ளார்.

பயிற்சி விரிவுரைகளையும், செயன்முறைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியதான 30 மணித்தியாலங்களைக் கொண்ட பயிற்சியாகும். பயிற்சியில் பங்கு பற்ற விரும்புபவர்கள் 15.09.2011 இற்கு முன்னதாக நேரடியாகவோ, தொலை பேசியூடாகவோ எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம்.




தொடர்பு முகவரி:
ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம்.
இல.84, ஜும்மா பள்ளிலேன்,
யாழ்ப்பாணம்.
[வின்சர் தியேட்டர் சந்திக்கு அருகில்]
தொலைபேசி இல: 0212229873
ஈமெயில்:directormrtc @ gmail. com

## இப்பொழுது யாழ் நகரிலும்

INTERNATIONAL DENTAL CARE

Professional Dental Centre in Sri Lanka





## உயர் வகை பல்வைத்திய சேவைக்கு...

No 84, Stanly road, Jaffna.
(Near the Areakulam Junction)
Tel: 0212220833

Branches: No.67,W.A.Silva Mawatha,Wellawatta, Colombo-06
Raaj Medical Laboratory, NO.10, Bazzar Street, Vavuniya

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவு நின்குறி - அறிவின் குறிநீ



இலக்கியக் காட்சி - 102

இயற்கைச் சக்தியாக இலங்கும் சூரியனை நம்மவர் மாத்திரமன்றி உலகோர் பலரும் தெய்வமாகப் போற்றி வருகின்றனர். சூரியன் தோன்றுவதை வைத்து மிகப் பழங்கால மக்கள் நேரத்தைக் கணிப்பிட்டனர். தமிழர்கள் வாரத்தின் முதல் நாளை ஞாயிறு எனத் துதித்தனர்.

வேளாண் தொழில் சிறப்படைய சூரியனின் அனுசரணை அவசியமாதலால் மக்கள் மத்தியில் சூரியன் அதீத செல்வாக்கைப் பெற்றான். இதனால் பண்டைய அரசர்கள் தம்மைச் சூரியனின் வாரிசுகள் எனவும் பறைசாற்றினர்.

இலக்கியங்களில் மங்கல வாழ்த்துப் பாடும் சூழலில் சூரியனைப் போற்றிப் பாடினர். ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மை வகிக்கும் சிலப்பதிகாரம் சூரியனைப் போற்றுகிறது. இளங்கோவடிகளின் பார்வையில் சோழனுடைய ஆணைச் சக்கரம் போல சூரியன் தென்படுகின்றான். பொன்னாலான அழகிய உச்சியையுடைய மேரு மலையை சூரியன் வலமாகச் சுற்றி வருகின்றான். அத்தகு சிறப்புடைய சூரியனைப் போற்றுகிறார் இளங்கோ.

*ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்*
*காவிரிநாடன் திகிரிபோல் பொற்கோட்டு*
*மேரு வலந்திரித லான்*

என்கிறது சிலப்பதிகாரம்.

இராக்காலம் மாறியவுடன் சூரியன் தோன்றுகின்றான். கதிரவனுடைய வரவைக் கண்டவுடன் உயிரினங்கள் தமது இயல்பான செயற்பாடுகளை ஆரம்பிக்கின்றன. பறவைகள் இறக்கை விரித்துப் பறக்கின்றன. மனிதன் படுக்கை விட்டெழுந்து தனது செயற்பாடுகளைத் தொடக்குகின்றான். எனவே சூரியன் உயிர்ப்புக்கு வழி சமைக்கிறான். இத்தகைய சூரியனை உலகமே வரவேற்பதாகத் திருமுருகாற்றுப்படை பேசுகின்றது.

சங்கத் தமிழ் இலக்கியமாகிய திருமுருகாற்றுப் படையில் சூரியனைப் பற்றிச் சொல்ல வந்த நக்கீரர் அவன் உலகம் எல்லாம் உவக்கும் படியாக வானத்தில் எழுந்தருளுகின்றான் எனக் குறிப்பிடுகின்றார்.

*உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு*
*பலர் புகழ் ஞாயிறு, கடல் கண்டாங்கு*

எனத் திருமுருகாற்றுப்படை ஆரம்பமாகின்றது.

காலையில் உதயமாகும் பாலசூரியனைப் பாலமுருகனுக்கு உவமையாக்குகிறார் நக்கீரர். மயில் மீது அமர்ந்தருளும் முருகக் கடவுளின் கோலத்தைச் சித்திரிக்க நீலக்கடலில் உதயமாகும் சூரியனைக் கவிஞர் உவமையாக்குகிறார்.

காப்பியத்துக்குரிய இலக்கணங்களுள் ஒன்றாக இருசுடர்களின் தோற்றம் இடம்பெற வேண்டும் எனத் தண்டி இலக்கணம் வகுத்தார். இங்கு இருசுடர் எனச் சூரியனையும் சந்திரனையும் குறிப்பிடுவர். இவ்விரண்டுடன் அக்கினியைச் சேர்த்து முச்சுடர் எனக் குறிக்கும் வழக்கமும் உள்ளது.

இந்தவகையில் சென்ற நூற்றாண்டின் யுகபுருஷனாக வாழ்ந்த பாரதியார் சூரியனைப் பற்றிக் கொண்டிருந்த பார்வையை நோக்குவோம். இவருடைய பார்வையில் சூரியனது குறியீடாக அறிவும் அறிவின் குறியீடாக சூரியனும் இருக்கின்றன. அவரது காலத்தில் எழுச்சிபெற்ற அறிவியல்சார் துறைகளின் வளர்ச்சி அவரின் சிந்தனையைக் கிளறிவிட்டிருக்க வேண்டும்.

அறிவு நின்குறி, அறிவின் குறிநீ எனச் சூரியனைக் குறிப்பிடுகின்றார் பாரதி. பாரதியின் ஞாயிறு என்ற வசனகவிதையில் இந்தக் காட்சி இடம்பெறுகின்றது.

தமிழில் வசன கவிதையை அறிமுகப்படுத்திய பெருமை பாரதியையே சாரும். அமெரிக்கக் கவிஞரான வால்ட் விட்மனின் தாக்கத்தினால் கருத்தூன்றப் பெற்றே பாரதியார் வசன கவிதையைப் படைத்ததாகக் குறிப்பிடுவர். பாரதியாருக்குப் பிடித்தமான சமஸ்கிருத வேத சுலோகங்களின் செல்வாக்கும் ஞாயிறு வசன கவிதையில் காணப்படுகின்றது. கவிதை கையாளப்படும் எளிய சிறிய சொற்களின் பயன்பாடு அவரது சமஸ்கிருதச் செல்வாக்கால் ஏற்பட்ட விளைவு என எண்ணத் தோன்றுகின்றது.

உலகின் மீது சூரியனின் பார்வை கிடைக்கவில்லை எனின் உலகு நிரந்தரமாகவே இருண்டுவிடும். ஒளித்தொகுப்பு என்ற தாவரங்களின் உணவு உற்பத்திச் செயற்பாடு நின்றுவிடும். எனவே சூரியனே உலகின் முதல் சக்தி. இதனை உணர்ந்த பாரதியார் சூரியனை 'அறிவு' என்ற உயர் பொருளாகக் காண்கின்றார்.

*அறிவு எதுபோல் சுடரும்*
*அறிவுத் தெய்வத்தின் கோயில் எது?*
*ஞாயிறு அத நன்று*

என்கிறார் கவிஞர்.

இயற்கை முதலாகத் திகழும் சூரியனை ஒளி, மழை, காற்று, மின்னல் என விளங்கம் இயற்கை அம்சங்களுடன் தொடர்புறுத்திப் போற்றுகின்றார்.

நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கம், நீ காட்சி,
மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து
இவை எல்லாம் நினது திகழ்ச்சி
கண் நினது வீடு
புகழ், வீரம்- இவை நினது லீலை
அறிவு நின் குறி. அறிவின் குறி நீ
நீ சுடுகின்றாய், வாழ்க. நீ காட்டுகின்றாய் வாழ்க
உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்.
வளர்க்கின்றாய். மாய்க்கின்றாய்,
நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய் வாழ்க

என்ற கவிதை அடிகள் சூரியனின் பெருமையை உணர்த்துகின்றன.

யாதுமாகி விளங்கும் சூரியனைப் போற்றும் பண்பாடு தமிழரிடமும் உண்டென்பதில் பெருமை கொள்ளலாம். அதிலும் அறிவின் குறியீடாகக் காட்டும் பாரதியின் கவித்திறம் அவர் மேலான மதிப்பை உயர்த்தி நிற்கின்றது.



**ச.லலீசன்**
(விரிவுரையாளர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

# கடவுள் தான் காப்பாத்த வேணும்!



சிறுகதை

சொந்த வீட்டுக்கு மீண்ட முருகையா புதிதாக வீட்டைச் செப்பனிட்டு முடித்திருந்தார். ஒரு நாள் தணிகாசலத்தார் அவரைக் காண்பதற்காக வந்திருந்தார்.

இருவரின் பேச்சுக்களும் அங்கை சுற்றி எங்கெல்லாமோ சுற்றி இங்கே கடைசியாக வந்து சேர்ந்தது.

''இப்பத்தைய நிலையைப் பாத்தா முருகையா மெத்தக் கெதியில இங்கையொரு பிரச்சினை வெடிக்கும் அபாயம் இருக்குமாப்போலதான் கிடக்குக் கண்டியோ..''

தணிகாசலத்தார் கூறியதைக் கேட்ட முருகையாவின் முகம் ஓடிக்கறுத்தது.

''இனியும் ஏதும் துவங்கினால் நாங்க எங்கே ஓடுறது.. இனி எங்களால ஓடேலாது..''

தணிகாசலத்தார் சொன்ன கதையைக் கேட்ட முருகையாவுக்கு மனதில் ஏக்கம் வந்து தொற்றிக் கொண்டது. திரும்பவும் நாட்டில் பிரச்சினை ஏற்பட்டால்..?

இரண்டாயிரமாம் ஆண்டு பங்குனித் திங்களோடு அரசுக்கும், புலிகளுக்கு இடையில் நடந்தேறிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து நாட்டில் இனி எந்த வில்லங்கமும் ஏற்படாதென வன்னியை விட்டுத் திரும்பி வீடு வாசல்களைத் திருத்திக் கொண்டு நிம்மதியாக இருந்த நாங்கள் பிறகு இப்பவும் நடந்த பேரழிவுக்குப் பின்னர் முருகையாவுக்கு தணிகாசலத்தார் கதைத்த கதை சிறிதே கலக்கத்தைத்தான் கொடுத்தது.

''எத்தின தடவை போறதும் வாறதுமா.. எங்கையெங்கை யெல்லாம் ஓடிவந்தம்... கடைசியா வன்னியும் போய் வந்தாச்சு.. இனி எங்க ஓடுற..''

முருகையாவுக்கு ஏற்பட்ட கஷ்ரங்களால் இயலாமையால் அவரை இப்படி பலவாறு சிந்திக்கவும் சொல்லவும் வைக்கிறது.

''விசர்க் கதை கதைக்கிறா முருகையா.. இப்ப இதில ஒரு ஷெல் வந்து வீழ்ந்தால் நாங்க இருந்து கதைப்பமே ஏதோ ஒரு பக்கம் ஓடத்தான பாப்பம்..''

தணிகாசலத்தார் யதார்த்தத்தை விளக்கிச் சொன்னதும் அதன் தார்ப்பரியம் முருகையாவுக்கு தைத்தது.

1995 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அந்த யுகப் பிரளயமான இடம்பெயர்வோடு தேவைக்குரிய சில பொருள்களை மட்டும் எடுத்துக் கொண்டு வெளிக்கிட்ட முருகையாவின் குடும்பம் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் ஓரிரு மாதங்களைக் கழித்து இறுதியாக வன்னிக்குச் சென்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைபெற்று இரு ஆண்டுகள் கழித்தே சொந்த இடமான ஆனைக்கோட்டைக்கு வந்து பார்த்த போது-அவனது வீட்டுக் கூரைகள், மரங்கள், கதவுகள், ஜன்னல்கள் ஒன்றும் இல்லாத சுவர்களுடன் நிமிர்ந்து நின்ற இடிந்த ஒரு கட்டடப் பகுதியாகவே வீட்டைப்பார்க்க முடிந்தது.

வீட்டில் சேகரித்து வைத்திருந்த பொருள்கள், ஆடு, மாடு, கோழிகள் அனைத்துக்கும் என்ன ஆனதோ அவனுக்குத் தெரியவில்லை.

வன்னியில் இருந்த நாள்களில் அவரது வீட்டுக்கு மட்டும் என்றில்லாமல்- அவரைப் போன்று 1996 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமது சொந்த இடங்களுக்கு ஏற்கனவே மீளக்குடியமர்ந்தவர்கள் கொள்ளையர்களாக மாறி எடுத்து விட்டதை எல்லாம் முன்னமே அறிந்திருந்தார்.

அதனால் வெறுமையாய் நின்ற வீட்டுச் சுவர்களைப் பார்த்து அவன் அதிர்ந்து விடவில்லை. அது தானும் மீதம் விட்டுக்கிடந்ததைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தான் அவன். எமது மண்ணில் யுத்தமேகம் சூழ்ந்த போதும் அதன் பின்பாகவும் பெரிதாக உதவியது வெளிநாடுகள் மாத்திரந்தான்.

வெளிநாட்டில் இருக்கும் மனைவியின் தம்பிமார்களின் அனுசரணையால் இரண்டு பெடியளையும் அனுப்பி வைக்கமுடிந்தது. அவர்களின் உழைப்பில் மனைவி, முருகையா திருமணம் செய்து கொண்ட மகள், மருமகன், பேரப்பிள்ளைகளுடன் வந்து இடிந்து கிடந்த வீட்டைக் கட்டி முடித்து நிம்மதியாக இருந்து மூச்சுக் கூட விடமுடியவில்லை. மீண்டும் மீண்டும் பிரச்சினைதான். வன்னிக்குப் போய் மாண்டவர் போக இருப்பவரோடு வெட்ட வெளியில் வந்திருக்கிறம்

**த.பரமலிங்கம்,**
யாழ்ப்பாணம்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் சந்திப்பில்

மௌனத்தையே
பதிலாகத் தந்தாய்
ஆனாலும்
உன் மனதில் எழுந்த
வார்த்தைகள்
கேட்கவே
செய்தன எனக்கு

# ஏதோ ஒரு மனசுக்காக....!



நீ எப்போதும் பூக்களைப் பற்றியோ
பேசிக் கொண்டிருப்பாய்,

ஒரு ரோஜா மெல்ல மெல்ல
துளிர்த்துக் கொண்டிருந்தது
எதிர் வீட்டு மொட்டை மாடியில்,

எனக்கு தெரியும் தாயைப் போல்
உன் கண்களால் நீவி விட்டே
பூக்க வைத்தாய் நீ,

எல்லா இதழ்களும் விரிந்து விடுமென்று
நீ நம்பிய தொரு
காலையில் அந்த ரோஜாவைக்
காணாமல் துடித்துப் போனாய்,

உனது நல்ல மனசு நீ தினம்
பார்த்துக் கொண்டிருந்ததைப்
போலவே
உன்னையே பார்த்துக்
கொண்டிருந்த
தொட்டிச் செடி மறு நாள் இரண்டு
மொட்டுக்கள் விட்டிருந்தது
உன்னை
மகிழ்விப்பதற் கென,

உனக்கு தெரிந்தது
நீரூற்றுபவர்களுக்காக அல்ல,
ஒவ்வொரு செடியும்
பூத்துக் கொண்டிருப்பது
ஏதோ ஒரு மனசுக்காக!....

ச.சோபியா,
கொக்குவில்.

# மூச்சையிட எது மிச்சம்...?

எச்சங்கள் எல்லாம்
இறந்தன கச்சிதமாக...
அச்சங்கள் வந்து
பிறந்தன் அடுக்கடுக்கா...

முச்சங்கம் வைத்து
முடிவேந்தர் வாள்தொட்டு
உச்சங்கள் தொட்டவர்
இப்போ - வெறும்
பிச்சையினமாக...

இச்சைகளை மறைக்கவும் - தமிழை
உச்சரிக்க மறக்கவும்
அச்சமதை மட்டும்
ஆடையாக உடுத்திக் கொண்டு
அடிமன ஆசைகளைத் துறக்கவும்
உறுக்கப்படுகின்றது

நெல்லியடியல்
மதம் பிடித்து
வல்லையடியில்
வதம் செய்து...

உணர்வற்ற - வெறும்
கல்லுகளா நாங்கள்...?

எல்லாம் உன் செயல்
இனிவரும் பொல்லாப்பும் கூட....!

உடுக்கடித்து
உடுக்கடித்து
உருவேற்றி வைக்க
கருக் கொள்கிறாயா..?

சும்மா இருப்பவனை
சுற்றி வந்து - முதுகில்
குத்திவிட நினைக்கிறாயா?

கடவுளே...
எனக்குக் கொஞ்சம்
அஞ்சல் கொடு

துச்சமாய் உயிரை
தூக்கியெறிந்து - உலகு
மெச்ச வாழ்ந்தவரின்
மிச்சமிருக்கின்ற
எச்சங்களையாவது - இவன்
நச்சுக் கண்ணியிலிருந்து அப்பால்
நகர்த்திவிட வேண்டும்....!

கிறுக்கன்.

# பணக்கார வருத்தம்

வருத்தம் சிலநேரம் வாகு(உ)டல் தாக்கும்
பொருத்தம் இல்லாமல் வாய்க்கும் - பருத்த
உடல்கெட்டுப் பால்வடியும் என் முகங்கெட்டு
நடக்கும் பிணமானேன் நான்

கொழுப்பு அதிகமென நல்லசுதன் சொல்லி
வலித்துச் சைக்கிளோ டென்று - அழுத்தி
இனிக்கடலை கௌப்பி பயறு உழுந்து
கனியொன்றோ(டு) உண்ணென்றார் தான்

ஆண்டு பலவாக யான்வளர்த்த நல்லுடம்பை
ஈண்டு சிலகாலம் வாட்டியதால் - நீண்டு
எனையறிந்த தோழர் முதற்கொண்(டு) இவரார்?
வினவுமோர் சங்கடத்தைப் பார்

பணக்கா ரவருத்த மாங்கொலஸ்ரோ லேகாண்
கணக்காகத் தின்றினி வாழ்வாய் - மணமோ?
உயிர்வாழத் தின்போதும் உன் நினைவில் வைப்பாய்
அயராது அட்வைசேதான்

அளவாகச் சாப்பா டுநாளும் பயிற்சி
உளமேன் மைக்கோர் வழிபா(டு) இளவயதில்
போற்றப் பழகுநீ புத்துணர்வு வாழ்வுவரும்
சாற்றுகிறேன் இஃதுண்மை காண்

கொலஸ்ரோலே வாழ்க கொழும்பு வரை என்னைப்
பலரறியப் பண்ணினையே வாழ்க - நலம்பேணல்
ஏதென்று நானும் அறிவதற்குச் செய்திட்டாய்
ஆதிஇறை போல்வாய் இனி

நீர்வைக்கிழார்

# பிளிறுகிறது மதயானை...!

அடைப்பட்ட கதவுகளுக்குப் பின்னால்
பேச்சடங்கி கிடக்கிறது என் சமூகம்

வீச்சரிவாள் கையிலும்
பேச்சரிவாள் வாயிலும் என
மூச்செறிந்து நிற்போரின்
வெளிப் பூச்சல்களுக்குப் பின்னால்
பயக்காய்ச்சலோடு
இன்னும் காய்ந்தபடியே..

நெருப்பு மழையை
பூமாலையாய்
விருப்புடன் சூடி
தீ குளித்த
சேர சோழ பாண்டின்
பேரக் குழந்தைகள் - இன்று
ஈர விழிகளுடன்
தெருவோரக் குடில்களில்

அக்னி நட்சத்திரங்கள்,
ஆலகால விருட்சங்கள்
சத்திய பீஷ்மர்கள்
சாகச புத்திரர்கள்
எல்லோரும் இப்போ வெறும்
யாகச வித்தகராய்...!

வெப்பக் காற்றின் வேர்வையிலும்
உப்புக் காற்றின் உரசலிலும் - உலக
முற்றமெங்கும் நாற்று நட்ட
கொற்றத் தேவியின் குழந்தைகள் - இப்போ
வெற்றுத் தரைகளிலும் - வெறும்
புற்றுப் புதர்களிலும்
உயிர்வேலிகள்
போட்டு வைத்து
தொட்டாலே சுட்டுவிடும்
நெருப்பெரித்த வீரியம் கொடுத்த
கட்டப் பொம்மன்களுக்கு
குட்டக் குட்ட குனியவும்
தட்டத் தட்டப் பணியவும்
வெட்கம் மறைத்து வைத்தது எது..?

காற்றிலலைகின்ற அவர்களின்
கண்ணீர்க் குரல்களை
கலைத்துப் பிடிக்க
இங்கே எந்த
போர்ப் புறாவாலும் முடியாது

அடைக்கப்பட்ட கதவுகளுக்குப் பின்னால்
கொஞ்சம் கூர்மையாக
காதுகொடுத்துக் கேளுங்கள்
வேர்த்துப் போவீர்கள்
மனிதங்கள் மரணித்த - அந்த
புனித வலயத்திலிருந்து
ஆழமாகக் கேட்கும்
நீதிமதயானையின் பிளிறல்களும் - என்
நாதியற்ற சமூகத்தின் கதறல்களும்...

உ_பிரோடை

# நட்பே இது உனக்காக...

நண்பனே
நீ
விலகியிருக்கும் இந்
நாள்கள் எல்லாம்
நட்புக்கான புன்னகையை
தொலைத்த நாள்கள்
சோகங்களையும்
சுமைகளையும்
கைதட்டி கரம்பற்றிய நாள்கள்
இதயச் சுவர்களை
இரும்பாணி கொண்டு
கிழித்த நாள்கள்
எதிர்பாராத திருப்பங்களால்
ஏங்கியிருந்த நாள்கள்
நீ விலகிச் செல்லும் வரை
சென்று கொண்டிருக்கின்றாய்
நான் நேசிக்கும் வரை
நேசித்துக் கொண்டிருக்கின்றேன்
நம் நட்பை இன்னும் இன்னும்....


ஜோ.ஜெரிசிகா,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பேர்லின் பயணம்








நான் டென்மார்கிலிருந்து புகையிரதம் மூலம் ஜேர்மனியின் தலைநகர் பேர்லினுக்குச் சென்றேன். நான் சென்ற புகையிரதத்தில் குளிரூட்டப்பட்ட பெட்டி பொருத்தப்பட்டிருந்தது. அந்தப் புகையிரதம் அதிவேகப் புகையிரதம். அந்தப் புகையிரதத்தில் இருக்கும் யன்னல்களைத் திறக்க முடியாது. தீ விபத்து போன்ற விபத்து ஏற்பட்டால் அந்த யன்னல்களை உடைத்து வெளியே செல்லலாம். அதை உடைப்பதற்கு ஓர் உபகரணமும் உள்ளது. புகையிரதத்தில் பயணம் செய்யும் போது யன்னலின் ஊடாக நான் வெளியே பார்த்துக் கொண்டு சென்றேன். வெளியே முழுவதும் பனியாக இருந்தது. கம்பேக் என்ற இடத்தில் இறங்கி பின்பு வேறொரு புகையிரதத்தில் ஏறிப் பேர்லினுக்குச் சென்றடைந்தேன். அங்குள்ள பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள விருந்தினர் தங்குமிடத்தில் நாங்கள் தங்கினோம். பின்பு அரும்பொருள் காட்சியகத்துக்குச் சென்றோம். அங்கு பழைய காலத்தில் பாவித்த நாணயங்கள் மற்றும் அரசர் போருக்குச் செல்லும் போது பயன்படுத்திய ஆயுதங்கள் என்பவற்றை நாங்கள் பார்த்தோம். 2 ஆம் உலக யுத்தத்தை ஒளிப்பேழையில் பார்த்தோம். கிட்லரின் வரலாற்றையும் பார்த்தோம். பழைமையான கத்தோலிக்க ஆலயத்துக்குச் சென்று பார்த்துவிட்டு பேர்லின் சுவரைப் பார்க்கச் சென்றோம். இது 2 ஆம் உலகப் போரின் போது கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி இரண்டையும் பிரிக்கும் ஒரு சுவராக இருந்தது. இப்போது அந்தச் சுவரின் சிறு துண்டு மட்டும் ஞாபகார்த்தமாக இருக்கிறது. அந்தச் சுவரின் ஒரு பக்கம் ரஷ்யக் கொடியும் மற்றொரு பக்கம் அமெரிக்கக் கொடியும் நடப்பட்டுள்ளன.

காவலரண் அங்கு இருக்கிறது. அது உண்மையானதல்ல முன்னைய ஞாபகத்துக்காக இதை வைத்துள்ளார்கள். இங்கிருக்கும் பொலிஸ் போன்ற வேடமணிந்திருப்பவரோடு புகைப்படம் எடுக்க ஒரு யூரோ கொடுக்க வேண்டும். ரஷ்ய ஆமியின் தொப்பி என்பன அங்கே விற்கப்பட்டன. பேர்லினில் இரண்டு நாள் தங்கிவிட்டு மீண்டும் புகையிரதத்தில் ஏறி டென்மார்கைச் சென்றடைந்தோம். பேர்லின் சுவரின் ஐம்பதாவது நினைவு தினம் இந்த ஆண்டு கொண்டாடப்பட்டது.

**தே. அபிராம்**, தரம் 4 ஈ, யா/இந்து ஆரம்பப் பாடசாலை.


# பொது அறிவு

01.இலங்கையின் முதல் ஜனாதிபதி யார்?
★ சேர். வில்லியம் கோபல்லாவ
02.இலங்கையின் வரைபடத்தை வரைந்தவர் யார்?
★ குளோடியஸ் தொலமி
03.இலங்கையின் இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு எது?
★ 1945 இல்
04.எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ள இடம் எது?
★ சபுகஸ்கந்த
05.இறப்பர் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் எது?
★ அகலவத்தை
06.தலதா மாளிகையைக் கட்டுவித்த மன்னன் யார்?
★ கீர்த்தி ஸ்ரீ மேகவர்ணன்
07.மனித மூளையின் சராசரி நிறை என்ன?
★ 1.4 கிலோக்கிராம்
08.மனித உடலில் மிகப்பெரிய சுரப்பி எது?
★ ஈரல்
09.வேகமாகப் பறக்கும் பறவை எது?
★ புறா
10.மண்புழுவுக்கு எத்தனை இதயங்கள் உண்டு?
★ 5 இதயங்கள் உண்டு



இ.ரஸ்மினி, தரம் 6 பி
யா/ ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயம்.

# கூண்டுக் கிளியின் சுயசரிதை



என் பெயர் சுட்டி. என்னை "ராதா" என்ற சிறுமி மிக அன்பாக வளர்த்து வரு கிறாள். இந்தக் கூட்டில் அடைபட முன் நான் சுதந்திரமாகப் பறந்து திரிந்தேன். என்னைக் "கிருஸ்ணா" என்ற சிறுமி ஒரு தென்னை மரப் பொந்திலிருந்து பிடித்து ராதாவுக்கு 100 ரூபாவுக்கு விற்றுவிட்டாள். ராதா என்னை அழகான ஒரு கம்பிக் கூட்டில் வைத்து அன்பாக வளர்த்து வருகிறாள்.

ராதா எனக்குப் பலவிதமான பழங்களையும் பருகுவதற்கு பாலை தருவாள். எனக்கு எதுவித குறையுமில்லாமல் என்னை வளர்த்து வருகிறாள். என்னுடன் அடிக்கடி வந்து கதைப்பாள். நான் "கீ, கீ" என்று பதில் கூறுவேன். நான் எப்படி மகிழச்சியாக இருந்தாலும் இந்த எல்லையற்ற வானில் பறந்து திரிய முடியவில்லையே என்ற மனக்குறை என்னை வாட்டுகிறது. நான் பிறந்த சூழல் மிகவும் அழகானது. இயற்கைக் காட்சிகள் பலவற்றையும் தன்னகத்தே கொண்டது. என் மேனி நிறத்தில் அமைந்த கம்பளத்தை விரித்தது போன்ற நன்கு செழித்த மரங்கள், மலைத் தொடர்கள்"சோ,சோ" என இசைத்தபடி ஒடிடும் அருவிகள், அதிகாலை மலர்ந்து மணம் பரப்பிடும் பூக்கள் மற்றும் பழுத்து மணம் வீசும் மஞ்சள் பழங்களைக் கொண்டஅழகிய மரங்கள். அந்தக் காட்சிகளை இரசித்தபடி பழத்தை உண்பேன். இவற்றை அனுபவிக்க என் உள்ளம் ஏங்குகிறது. எனது தாய்,தந்தை, சகோதரிகளுடன் மீண்டும் எப்போது இணைவேன். அவர்கள் அனைவரும் பறந்து திரிய நான் மட்டும் சிறகிருந்தும் பறக்க முடியாதவனாகி விட்டேன். ராதா என்னால் மகிழ்சியடைகிறாள். ஆனால் நான் துன்பத்தில் வாடுகின்றேன். என்றோ ஒரு நாள் நான் சுதந்திரமாய் வானில் வட்டமிட்டுத் திரிவேன் என நம்புகிறேன்.அந்த நாளை எதிர்ப் பார்த்துக் காத்திருக்கிறேன்.

**க.ஹம்ஸானந்தி** *யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, தரம் 7 'சி'*






இ.ஹரிலக்ஷன், தரம் 8 ஏ,
யா/ஆவரங்கால் நடராஜ
இராமலிங்க வித்தியாலயம்.



சி.அகல்யா, தரம்10,
யா/இந்து மகளிர் கல்லூரி.

# மூன்றெழுத்து



அன்னை என்ற மூன்றெழுத்தில்
அவள் தருவது அன்பு
தந்தை என்ற மூன்றெழுத்தில்
அவர் தருவது அறிவு
ஆசான் என்ற மூன்றெழுத்தில்
அவர் தருவது கல்வி
கவ்வி என்ற மூன்றெழுத்தில்
அந்தக் கல்வி தருவது
நல்ல பெயர்.

பிரிதா,
கொக்குவில் இந்துக் கல்லூரி

## விடை தெரியுமா? 124

### உங்களுக்கும் பரிசில்கள்

1. வானம்பாடியின் ஆயுள் காலம் எவ்வளவு?
2. சத்திய சோதனை என்ற நூலை எழுதியவர் யார்?
3. உலகப்படத்தில் புதிதாக இணைக்கப்பட்ட நாடு எது?
4. சைக்கிளைக் கண்டு பிடித்தவர் யார்?
5. ஆயிரம் வாவிகள் கொண்ட நாடு எது?

### விடைகள் 122

1. பூனை
2. இராஜநாகம்
3. 22
4. இங்கிலாந்து
5. ரோபர் ஈ

### வெற்றி பெற்றோர் விவரம்

★ இ.நிருத்திகா தரம்-1, யாழ்ப்பாணக் கல்லூரி,வட்டுக்கோட்டை.
★ ந.பவிதா தரம் 12ஏ, யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி.
★ க.கபிலன் தரம்- 8 ஏ, உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்

**விடை தெரியுமா?**

[illegible] 17.09.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன
11 செப்ரெம்பர் 2011 ஞாயி



## அன்னதானக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா



அன்னதானக் கந்தனின் அருள் எல்லோருக்கும் கிடைக்கப் பிரார்த்திப்போம். வேண்டுவோர் வேண்டுவன தருவான் எங்கள் சந்நிதி வேற்பெருமான். அடியவர்களின் அடியனாய் இருந்து எம்மையெல்லாம் காத்தருளும் சிங்கார வேலனுக்கு இன்று தேர்த்திருவிழா. இன்று தேரேறிவரும் ஆற்றங்கரையானின் அருளொளி எங்கும் பரவட்டும்.

ஆற்றங்கரையானாக பூவரசம் மரத்தடியில் அமர்ந்திருந்து 64 ஆலமிலையில் அருளமுதை அடியார்க்கு வழங்கியும் அன்னதானக் கந்தனாக நித்தமும் அன்பர்கள் நெஞ்சமதில் குடிகொண்ட பெருமான் சந்நிதிவேலன், அழகனாய் வேற்பெருமான் அடியார்களுக்கு அவர் தம் வாழ்வில் செல்வச் செழிப்புக்களை வழங்குவதால் செல்வச் சந்நிதியான் என அழைக்கப்படலாயினான்.

இந்தத் தேர்த்திருவிழாவுக்கு நாலாதிசைகளிலிருந்தும் வரும் பக்தர்கள் பாற்காவடி, பறவைக்காவடி, செடில்காவடி, கூத்துக்காவடி, தூக்குக்காவடி, பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திகளுடன் வடிவேலனின் வடம் பிடித்து அருள் வேண்டும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். மற்ற எல்லா ஆலயங்களையும் விட மகேஸ்வர பூசை என்கின்ற பொழுது சந்நிதியில் மிகுந்த சிறப்பு உண்டு. இங்கு வரும் பக்தர்கள் உணவு உண்ணாமல் செல்லும் வழக்கம் இல்லை.

இன்று வண்ணரதமேறி மும்மூர்த்திகளாய் வலம் வரும் விநாயகப் பெருமானும், வேற்பெருமானும் சண்முகப் பெருமானும் பார்ப்பவர்களுக்கு மனநிம்மதியைத் தருவதோடு மகிழ்ச்சியையும் அளிக்கின்றனர்.

எங்கள் செல்வச்சந்நிதி வேலன் தூய அன்புள்ளங்களையும் அடியார்களுக்கு நிம்மதியான வாழ்வையும் வழங்கவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றோம். இன்றைய இரதோற்சவத்தை தரிசிக்கின்ற மானசீகமாக காணுகின்ற முருகன் அடியார்கள் எல்லோருக்கும் சகல செல்வயோகமும் மிக்க பெரு வாழ்வும் கிடைக்க வேலவன் தாழ் பணிந்து போற்றுகின்றோம்.

*மோகனதாஸ் சுவாமிகள்,*
*சந்நிதியான் ஆச்சிரமம்.*

## பிரதம குருவின் ஆசி



சேந்தனாகவும் கந்தனாகவும் செஞ்சுடர் வேலனாகவும் கந்தக் கடம்பனாகவும் செந்தமிழை உலகுக்கு குறுமுனி மூலம் தந்து தமிழ் என்னும் நெறியை உலகுக்கு காட்டிய அவன் இலங்காபுரியின் வடபால் முடிபோல் திகழும் யாழ். குடாவில் முடியின் கோகரண மணியாக விளங்கும் கல்லோடைக் கந்தன் கலியுகவரதன் அருளாட்சி செய்து வரும் தொண்டமானாறு அமைந்துள்ள ஸ்ரீ செல்வச் சந்நிதியாகும். புராதனம் பெற்ற வல்லி ஆற்றங்கரையில் பூவரச மரத்தடியில் கந்தபுராணத் தளபதியாய் விளங்கிய வீரபாகுவால் தூதுவந்த நேரம் வேல்வைத்து வணங்கப்பட்டது. சந்தியா வந்தனத்திற்காக இராவணன் காலத்தின் பின் இலங்கை இந்தியாவினின்று துண்டுபட வல்லியாறு அழிந்து இப்பொழுதும் வல்லை வெளியாய் விளங்குகிறது.

புராதனமும் பழமையும் பெற்ற வேல்முருகன் மீண்டும் மருதர் கதிர்காமர் வழிபாடியற்ற வந்திடும் அடியவர்களுக்கு நோய், பிணியும் நீக்கி, வயிற்றுப்பிணியும் நீக்கி அருளாட்சி செய்து வந்தவர் சந்நிதி வேலன்.

இன்று கர வருட மகோற்சவ காலத்தில் மருதர் கதிர்காமர் வழித் தோன்றலாய் விளங்கும் சிவானந்த ஐயரின் புத்திரனான சிவானந்த ஐயர் செல்வமணி ஐயராகிய யான் பிரதமகுருவாக இறைபணி ஆற்றி வருகின்றேன். எம் பெருமான் அடியவர்களுக்கு வேண்டுபவற்கு வேண்டும் வரம் தருகின்றான். பக்தர்கள் பிரமிக்கும் வண்ணம் அற்புதங்கள் புரிந்த வண்ணமே இருக்கின்றான். நம்பினோரை ஆபத்தினின்று காத்தருளுகின்றான்.

எம்பெருமான் இங்கே கொள்ளுவது ஞான பூஜை - சரியை, கிரியை, யோகமாகிய படிகளை நாற்பாதங்களில் முப்பாதமும் கடந்த நிலையிலேயே ஞான நிலையில் மௌனியாய் நின்று பூசித்தலினாலே அருள் தருகின்றான். எம்பெருமானுக்கும் அடியவர்களுக்கும் இடையில் ஞான நிலையில் பூஜை நடைபெறுவதால். ஞான ஒளியினாலே அருள் கிடைக்கின்றது. பெருமானின் ஞானத்தையும் அருளையும் பொற்காலமாகத் திகழ்ந்து வரும் ஆவணி மாத பூரணை வரை நடைபெறும் உற்சவ காலத்திலும் மேலும் இந்தப் புவியில் இருக்கும் கால்வரை சந்நிதிவேலனின் அருள் பெற்று அஷ்ட இல்ட்சுமி கடாட்சம் பெற வாழ்த்தியும் ஆசி வழங்கியும் நிற்கும் அடியாற்கெளியனாகிய சந்நிதிவேலனின் அடி சேவை புரிகின்ற அடியேன்.

அன்புநெறி மறநெறியு
மறியாதேனை
ஐயந்துவந்தே இன்ப
நெறியில் புகுவித்திட்ட
எந்தாய் தொண்டை
பதிகரசே துன்பமறியேன்
சுகமறியேன்
தொல்வினையுமறியேன்
முன்பறியேன் பின்பறியேன்
முழுதும் முன்மை
எனுமுனியே.

*சிவானந்த ஐயர் -*
*செல்வமணிஐயர்*
*(மணிஐயா)*




ஆண்கள் பெண்கள்
சிறுவர்களுக்கான தரமான றெடிமேட்
ஆடைகளைப் பெற்றுக்கொள்ள
**மகாராணி**
**பட்டுச்சோலை**
பெரிய கடை, யாழ்ப்பாணம்.

உணவுப் பொருள்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள
**வேணி களஞ்சியம்**
கே.கே.எஸ்.வீதி, சத்திரச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தேவர்கள் சேனாபதியே போற்றி
**செல்வாஸ்**
**ஸ்ரோர்ஸ்**
**பல்பொருள் வாணிபம்**
ஆவரங்கால்.

ஓம் சரவணபவாய நமக
கட்டடப் பொருள்கள் மற்றும் பெயின்ற்
வகைகள் , சீமெந் ஆகியவற்றை
தரமாகப் பெற்றுக்கொள்ள
**பாக்கியரெட்ணம்**
**ஹாட்வெயர்**
மெயின் வீதி, சங்கானை.

தினசரிப் பத்திரிகைகள், காகிதாதிகள்
போட்டோக்கொப்பி போன்றவற்றை
பெற்றிட
**கனன்**
**போட்டோ பிரதி நிலையம்**
பருத்தித்துறை

அன்னதானக் கந்தனுக்கு அரகரோகரா
**செ.நவரத்தினராசா**
**குடும்பம்**
குப்பிளான்.

கந்தனுக்கு வேல் வேல்
முருகனுக்கு வேல் வேல்
காலை, மதியம், இரவு உணவு
வகைகளை சுவையாக உண்டு மகிழ
**இந்திரா கபே**
நெல்லியடி.

சேவற் கொடியோனே முருகா சரணம்
பலசரக்குப் பொருள்களைப்
பெற்றுக்கொள்ள
**செல்லப்பிள்ளையார்**
**ஸ்ரோர்ஸ்**
நெல்லியடி.


கண் பரிசோதித்து உடன் கண்ணாடி வழங்கல், பல்கட்டுதல்,
கிளிப் போடுதல், நிரந்தர கிளிப்போடுதல் ஆகியன சிறந்த
முறையில் மேற்கொள்ளப்படும்.
**யாழ்.பல் மூக்குக் கண்ணாடியகம்**
முதலாம் குறுக்குத் தெரு, நெல்லியடி. தொ.பே 0778759622

ஐஸ்கிறீம் வகைகளை ஓடருக்கு
**நியூ சந்திரா கிறீ**
கந்தரோடை பே
சுன்னாகம். தொ.பே

சந்நிதி முருகனுக்கு அரகரோகரா
பலசரக்குப் பொருள்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
**க.கு.கந்தையாபிள்ளை**
**அன்சன்ஸ்**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

வெஸ்ரேன் யூனியன் பணப்பரிமா
வெளிநாட்டில் உள்ள உறவ
பணத்தைப் பெற்றுக்கொ
**புதிய அம்**
**பல்பொருள் வா**
இல.33, பிரதான வீதி,
தொ.பே 021 2263571, 021 226





பலவர்ண வகையான மாபிள்களைப்
பெற நாடவேண்டிய இடம்
**Vinmeen Ankhady**
Main Street, Nelliady.T.P: 021 226 3027
Showroom

ஆங்
மற்
வின
504
யாழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்நிதியானை நினைந்திடு நெஞ்சே!

வெற்றியே வழங்குகின்ற வேலதனைத் தாங்கிடும்
வீரமகன் திருவடியைப் பற்றிப் பிடித்திடுவாய்!
வாடிடும் என் நெஞ்சே! அவன்கோயில்
சுற்றியே வலம்வந்து சுந்தரனின் ஆறெழுத்து
மந்திரத்தை உச்சரித்து உச்சரித்து உருகிடுவாய்!
சூழுகின்ற துயரங்கள் எல்லாமே
அற்றதாம் நிலைவருமே! அழகனவன் அருளதனால்!
அன்றமரர் அல்லலதை அகற்றிட்ட ஆறுமுகன்
அபயமென வருவானே! தித்திக்கும்
நற்றமிழின் நாயகனை தொண்டமான் ஆறதனை
நாடியே உறைகின்ற செல்வனை எப்போதும்
நினைந்து நினைந்து போற்றிடுவாய்!

நாயன்மார்கட்டு, **ப.மகேந்திரதாசன்**

## சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி வேலா தேரேறி வருக

சஞ்சலம் தீர்க்கும் சந்நிதி வேலா
தேரேறி வருக
சண்முகசீலா சங்கரன் பாலா சக்தி வடிவேலா
தேரேறி வருக
சந்ததம் கீதத் திருப்புகழ் பாடி சிந்தை மகிழ
தேரேறி வருக
சரணமலரடி மறவா வரம்தரவே சந்நிதியானே
தேரேறி வருக
சங்கரன் காதில் தத்துவம் கூறிய சிங்காரவேலா
தேரேறி வருக
சர்வமெங்கும் சாந்தி சமாதானம் நிலவ
தேரேறி வருக
சிங்கார மயிலேறும் பெருமானெம் குருநாதா
தேரேறி வருக

**தொல்புரத்தூர்**
**க.லோகேஸ்வரன்**

## தேரேறி வந்து காப்பாய்

செல்வச்சந்நிதியில் வீற்றிருந்து நல்லாட்சி புரிபவனே
அழகும் இளமையும் என்றென்றும் கொண்ட- முருகா
அடியவர்களின் குறை தீர்க்கும் அன்னதானக் - கந்தா
தரணிதனில் சாந்தி சமாதானம் - ஏற்பட தேரேறி வந்து காப்பாய்

**நயினை வி.இராசநாயகம்**

## அறுகோணத்தேரில் அருள்காட்சி



மக்கள் உய்வுபெற உலகத்துச் சமயங்கள் எல்லாம் ஒழுங்கு முறைகளைக் கைக்கொள்கின்றன. சைவசமயம் தனது பாரம் பரியத்தைப்பேணும் முகமாக கைக்கொள்பவற்றை சமூக உளவியல் ரீதியாக சமூக மேம்பாட்டு ரீதியாகச் சமயகைங்கரியங்கள் சரியை, கிரியை யோகம், ஞானம் என வகைப்படுத்தி உள்ளது. சரியைத்தொண்டால் கிரியையும் கிரியைத் தொண்டால் யோகமும் யோகப்பயில் முறையால் ஞானமும் கைவரப்பெற்ற தெளிவை உடையவர்கள் தெளிவிற்கு, கேட்டுச் சிந்தித்துத் தெளிதல் பெறுவதைக் குருவின் திருமேனி கண்டும், குருவின் திருவருளால் செப்பியும், குருவின் திருவார்த்தைகேட்டும் (உள்கொண்டும்) குருவின் திருவுரு காண்பது என திருமூலர் அர்த்த புஸ்டியாக கூறியுள்ளார்.

தொண்டைமானாற்றுச் சூழலில் ஆற்றங்கரை ஓரம் பூவரச மரத்தருகில் கோயில் கொண்டிருக்கும் செல்வச்சந்நிதிமுருகன், சிவகுரு, கர வருட ஆவணி மாத உற்சவத்துள் தேர் உற்சவமாக சதுர்த்தசியில் குரு மூர்த்தமாக வேற்பெருமான் தேர்பவனி வருகின்றார். தேரில் ஆரோகணித்து வலம் வரும்

வெற்றிலை வேலவர் வள்ளியைக் கைப்பிடிக்க கருணை செய்த கரிமுகப்பெருமான் ஆவணி சதுர்த்தியில் ஆகு வாகனமதனில் எழுந்தருளிய அன்னாள் இன்று சதயம் அமைந்த தினமதனில் தாமும் தம்பிக்கு முன்னே தேரேறிவர தந்தையின் கைலாச காட்சியை ஒத்தும் மாமனின் திருக்கோலமோ என இச்சாசத்தி, ஞானாசத்தி, கிரியாசத்தி, யாகியதை எம்முன் நிறுத்தும் பனுவலில் வள்ளி தெய்வானை சமேத சிவசண்முகப்பெருமான் அறுகோணத்தேரினில் அடியவர்களின் அரகரோகரா கோசத்துடன் ஊர்ந்து வரும் காட்சி, திவ்வியக் காட்சி பக்தியோடு ஊர்மக்கள் வடம்பிடித்து உன்னுவதன் ஊடு உலகம் உய்ய ஒரு திருமுருகனாக உதித்த சோதிப்பிழம்பதோர் மேனியன் தேர்க்கோலம் மக்கள் இன்னல் துடைத்திட ஐம்புல வேடர் சேட்டைகளை ஐம்பூத அடக்க ஒடுக்கால் வீரியத்தை பெருக்கி திடீரெனத் தோன்றும் பல்தரப்பட்ட மழைப்பூச்சிகள் போன்ற பூதங்களைக் கண்டித்து எம்மை இரட்சித்து அருள்பாலிக்க வரும் காட்சி, முப்புர தகனத்துக்கு அவர் தந்தை தேரூர்ந்து செல்லாமல் சங்கல்ப மாத்திரையால், முப்புரதகனத்தை ஒத்ததாய் இருப்பதில் வியப்பில்லை.

குருவாய் திருவாய் முருகாய் வரும் அருள்மிகுவேலவா முச்சக்திகளின் முதலாய் எமக்கு எல்லாவகை சத்திகளையும் தந்தருள் வாராக.

*ஆறு சிவசண்முகம் ஐயர்*





# ...தி முருகன் ஆலய
# ...் திருவிழா
## ...மலர் – 11.09.2011

தரமான குளிர்பானங்களை
சுவையாகப் பெற்றுக்கொள்ள
**மது கிறீம் ஹவுஸ்**
சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.
தொ.பே 0774206465

முற்பதிவு செய்து சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், பிஸ்கற் வகைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்
**லிங்கம் கிறீம் ஹவுஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

...ஓடருக்கும் பெற்றுக்கொள்ளலாம்
**...நிரா கிறீம் ஹவுஸ்**
...தரோடை மேற்கு,
...ம். தொ.பே 0775008709

**நெல்லை சில்க்**
பிரதான வீதி, நெல்லியடி. தொ.பே 021 226 3207

ரைப்பிங், பிரிண்டிங், தொலைத்தொடர்பு, நெற் புரோசிங், ஈமெயில் நெற்போன் மற்றும் வெஸ்ரேண் யூனியன் பணப்பரிமாற்றல் சேவை
**அபி நெட்கபே**
143, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே 021 226 2841, 0777297476
பக்ஸ் 021 226 2842
ஈமெயில்:abinetcafe2011@yahoo.com

மங்கையர் மனம் கவரும்
அழகான ஆடை வகைகளுக்கு
**யசோ ரெக்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே 021 226 4997

... பணப்பரிமாற்றல் சேவை மூலம்
...ள்ள உறவுகளிடம் இருந்து
... பெற்றுக்கொள்ளலாம்.
**... அம்பிகா**
**...ருள் வாணிபம்**
...தான வீதி, நெல்லியடி.
...71, 021 2263139, 021 226 4197

**சண் விக்கி ரெக்ஸ்ரைல்**
பிரதான வீதி, நெல்லியடி.

**ஜெனா சிவில் என்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன்**
கே.கே.எஸ்.வீதி, தெல்லிப்பழை.

திருமணத்துக்கான கூறைச் சேலை, பட்டு வேட்டி மற்றும் சேட்வகைகள் அனைத்து அளவுகளிலும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள
**செல்லமுத்தாஸ்**
**புடைவை மாளிகை**
பிரதான வீதி, நெல்லியடி.

விசேட நிகழ்வுகளுக்கான சைவ, அசைவ உணவுகள், சுய உணவுப் பரிமாறல் சேவைகளையும், வீட்டிலிருந்தபடியே உங்கள் உணவுகளைப் பெற்றுக்கொள்ள
**டைட்டானிக்**
**றெஸ்ரோரன்ட்**
தொ.பே: 021 226 2323

...ளைப்

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
**ஆர்.வி.ஜி**
**மருந்தகம்**
504, ஆஸ்பத்திரி வீதி, (O.P.D முன்பாக)
யாழ்ப்பாணம். தொ.பே. 0212222129

**R.V.G**
ஸ்தாபனம்
58, நல்லூர் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6806

அற்புதக் கந்தா அருள் தந்தே
எம் வேணவா தீரவே வருகவே!
**சந்நிதியான்**
**ஆச்சிரமம்**
தொண்டமானாறு

**விஸ்வலிங்கம் அன்சன்ஸ்**
**லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்**
பருத்தித்துறை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, சிறுப்பிட்டி.
உங்களுக்குத்தேவையான சகலவிதமான கட்டடப்பொருள்களும் அழகுசாதனப் பொருள்களைப்பெற்றிட
**என்.வி.பி.ஹாட்வெயர் அன் பான்ஸி**
பருத்தித்துறை வீதி, இமையாணன் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மண்ணில் IDM நிறுவனத்தின் புதிய கற்கைநெறிகள் ஆரம்பம்

IDM Nations Campus யாழ்.நகரகிளையை கடந்த மாதம் தமதுநிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த **Aharam Solution** (Pvt) ltd, சர்வதேசதரம் வாய்ந்தஉயர் பட்டப்படிப்புகளுக்கானஓர் ஆணி வேராக IDM Nations Campus யாழ்.நகரக்கிளை யுடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கணினிக்கற்கைநெறிஎன்பதுதற்காலசுழலில் மிகப் பிரதான ஒரு இடம் வகிக்கின்றது. இது போலவேதான் முகாமைத்துவக் கற்கைநெறிகளும் தற்போதைய இளம் சமுதாயத்தினருடைய வாழ்வில் மிகப்பிரதானமான இடம் வகிக்கின்றமைகுறிப்பிடத்தக்கது. அந்தவகையில் தற்போது IDM Nations Campus யாழ் நகரக்கிளை இலங்கையில் முதன்முறையாக ED-hat International இன் கற்கைநெறிகளையாழ் மண்ணில் உற்சாகமாகஆரம்பித்திருக்கின்றது.

கல்வியையும் வாண்மைவிருத்தியையும் பெற்றுக்கொள்ள மாணவர்களை தயார்ப்படுத்தல்என்ற தொலைநோக்குடன் (Vision) **Aharam Solution** (Pvt) Ltd ஆனதுதனதுகரங்களை IDM Nations Campus யாழ் நகரக்கிளையுடன் இணைத்துமிகப் பெருமிதமாகதனதுகணினிக் கல்விசேவையை வழங்கிவருகின்றது.

மாணவரின் வெற்றிக்குவழிவகுக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் இசேவை களைவழங்கிஆதரிப்பதில் முதல்வனாகத் திகழ்தல்என்றபணிக்கூற்றுடன் (Mission) மிகக் கம்பீரமாகதனதுகல்விச்சேவையையாழ் மாணவர் களுக்குவழங்குவதில் **Aharam Solution** (Pvt) Ltd மகிழ்ச்சியடைகின்றது.

இதுவரைகாலமும் நூற்றுக்கணக்கானமாணவர்களின் கணினிக் கல்விவெற்றிக்குவழிவகுத்த பெருமையோடுயாழ். மண்ணில் முதன் முறையாக ED-hat International இன் கற்கை நெறிகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.



*IDM Nationos Cumpus யாழ். நகர்க்கிளையிலிருந்து வெற்றிகரமாக தமது HND insoftwaer கற்கை நெறியினை பூர்த்தி செய்து ஜூன் மாதம் பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்ட மாணவர்கள்.*

கணினிக் கல்விஎதிர்கால இலட்சியத்தைநிர்ணயிக்கும் இக்காலகட் டத்தில் உங்கள் அடுத்த இலக்கில் உங்களுக்கானடிப்பிளோமாதெரிவுகள் இவையாக இருக்கட்டும்:

**International Higher Diploma (IHD) in Computing (General)**
**International Higher Diploma (IHD) in Software Development**
**International Higher Diploma (IHD) in Computing Networks**
**International Higher Diploma (IHD) in Management** *(Specialized in Business Management, Finance, Human Resources management and Marketing)*

மேற்படிகற்கைநெறிகள் உங்கள் பட்டப் படிப்புக்குபாதைவகுக்கும்

இதுதவிர **Aharam Solution** (Pvt) Ltd உங்கள் வாழ்க்கைக் கானபிரகாசமானஎதிர்காலத்தை நோக்கி இட்டுச்செல்லும் வகையில் **C Language, C++, JAVA, Certificate in Computer Networks, Diploma in Computerized Accounting Packages – DICAP, Certificate Linux** etc... போன்றபலவகையானசான்றிதழ் கற்கை நெறிகளையும்அறிமுகப்படுத்துகின்றது.

நவீனஆய்வு கூட வசதிகளுடன் இலவச கருத்தரங்குகள் Software Training Programs மாணவர்களின் செயல் விருத்திக்கு வழிவகுக்கின்றது IDM Nations Campus, Jaffna

க.பொ.த சா/த இ க.பொ.த உ/த Software Designers, Project managers எனஅனைவரும் பயன்பெறும் வகையில் **"School of Software Engineering"** என்றகற்கைநெறியினைவழங்கி கற்கைநெறியின் முடிவில் 1 மாதகால **Industrial Project training** (தொழில் துறைபயிற்சி) உம் பயிற்சி பெற்றநிபுணர்களால் வழங்கப்படுகின்றது.

இவை தவிரவும் IT Professional, IT Executives, System Administrators, System Engineers, Network Administrators, Network Engineers and IT Managers இற்குரிய **CISCO CCNA Certification** பாடநெறிகளையும் 100%பரீட்சைநோக்கோடுஆய்வு கூட வசதிகளுடன் தருகின்றது IDM Nations Campus, Jaffna. Mahnaged by Aharam Solutions (Pvt) Ltd.

இன்றுயாழ்ப்பாணத்தில் காணப்படும் பல்வேறு தரப்பட்டஎதிர் மறையானகலாச்சாரத் தாக்கங்களுக்கு மத்தியில் அகரம் **(Aharam Solution** தொழில் நுட்பகல்வியோடு தன் மாணவர்களின் ஒழுக்கத்திலும் விழிப்புடன் நடந்துகொள்ளும்.

# கொழும்புக்கு உயிரூட்டும் சௌண்ட்ஸ் ஒப் மியூசிக்

''புலன்களும் ஆன்மாவும் (Senses and Soul) எனும் கொழும்பு இசைவிழா 2012 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கின்றது. பன்முகத்தன்மை கொண்ட இவ் இசை விழா வில் பல்வேறு இசை வடிவங்கள், நவீன பாணிகள் என்பன இசைக்கப்படவிருப்பதால் இவ்வாறான இசை நிகழ்ச்சிக்கான ஒரு சிறந்த தரத்தையும் இது வகுக்கவிருக்கின்றது. உலகின் வேறு பாகங்களில் இடம்பெறும் இசைநிகழ்ச்சிகளில் இணையும் இலங்கை இசையமைப்பாளர்களில் ஆர்வம் கொண்டவர்கள் மற்றும் வெளிநாட்டு இசைப்பிரியர்கள், இவ் விசை நிகழ்ச்சி மூலம் இலங்கைக்கு வருவதற்கான சந்தர்ப்பமும் கிட்டுகிறது'' என்று இவ் இசைநிகழ்ச்சியின் ஸ்தாபகரும், கொழும்பு இசை விழாவினதும், மந்த்ராவின் பணிப்பாளருமான ஹாடியா ஹட்லி பத்திரிகையாளர் மாநாட்டில் பேசுகையில் தெரிவித்தார்.

இவ்விசை நிகழ்ச்சியினை மேலும் உயிரோட்டமுள்ளதாக்குவதற்கும், சர்வதேச தரத்திற்குக் கொண்டுவருவதற்கும் உள்ளூர் வர்த்தக சம்மேளனம், உல்லாசப் பயணிகள் சபை, பயணம் மற்றும் உபசரிப்புத்துறையிலுள்ள பிரதிநிதிகள் ஆகியோரின் ஆதரவிலான முற்றுமுழுதான ஒரு செயற்குழு செயற்படுகிறது.

மந்ரா மூட்ஸின் நிறைவேற்றுக் குழு, வோட்டர்ஸ் எட்ஜ், எம்.என்டர்டெயின்மென்ட், ஸ்ரீலங்கா கொன் வென்சன் பீரு என்பன இணைந்து இவ்விழாவை நடத்தவுள்ளன.

இலங்கையிலுள்ள இசைக் கலைஞர்களுக்குரிய போதிய அளவிலான ஆதரவு வழங்கப்பட்டதுடன் வெவ்வேறுபட்ட இசை வடிவங்களை வழங்கவுள்ள இலங்கையைச் சேர்ந்த மற்றும் நாடு கடந்து வாழும் இலங்கை இசைக் கலைஞர்களையும் சென்ஸஸ் அன்ட் சோல் கௌரவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நிகழ்ச்சியில் முக்கிய பங்குவகிக்கவுள்ளனர். இசையிலும், பாடல் களிலும் மேற்கத்தேயத்திலிருந்து பெறப்பட்டவை சர்வ தேச புகழ்வாய்ந்த பியூசன் போக்குகள் என்பவற்றிலே அதிக கவனம் செலுத்தப்படும். சர்வதேச தரத்தை எட்டும் இலங்கைக் கலைஞர்களின் ஆற்றல்கள் வெளிக் கொணரப்படும்.

உள்ளூர் கலைஞர்களில் மிகவும் சிறந்த தரத்தில் உள்ள கலைஞர்களே தமது ஆதரவை இவ்விழாவுக்கு வழங்குகின்றமை மிகவும் அரிதாகக் காணக்கூடிய விடயமாகும்.

# ஆடவர் ஆடைச் சிறப்பை அறிமுகப்படுத்தும் ஹமீடியா

இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை நிபுணரான ஹமீடியா அதன் குறியீடு, அதன் உற்பத்திகள் மற்றும் அதன் சேவைகளின் சிறப்புத் தன்மையை மலைநாட்டின் தலை நகரின் முக்கிய ஸ்தலமாக உள்ள கண்டி சிற்றி சென்டருக்கு (KCC) எடுத்துச் சென்றுள்ளது.

இந்த இரண்டாவது பிரத்தியேக ஆடவர் ஆடை காட்சியறையின் ஆரம்ப விழாவில் பிரதம அதிதியாக முகாமைத்துவப் பணிப்பாளர் பௌசுல் ஹமீட் கலந்துகொண்டார். கௌரவ அதிதியாக 'KCC'இன் ஸ்தாபகத் தலைவர் துசித விஜேசேன கலந்துகொண்டதுடன், அவரின் பிறந்த நாளும் அதே தினமாக காணப்பட்டது.

கண்டி சிற்றி சென்டரின் 3ஆம் தளத்தில் அமைந்துள்ள 2,700 சதுர அடி ஹமீடியா காட்சியறையானது, அது ஸ்தாபிக்கப்பட்டதன் காரணியான பிரத்தியேக ஆண்கள் ஆடைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நவீன மாதிரி, நிறங்கள் மற்றும் வடிவங்களில் போர்மல் மற்றும் கஷுவல் உடைகள், ஸ்மார்ட் கஷுவல், பார்ட்டி மற்றும் வைபவங்களுக்கான உடைகள் என பலதரப்பட்ட ஆடைகளை வழங்குகின்றது.

'KCC'இன் 3ஆம் தளமானது ''பெஷன் மற்றும்அணிகலன்களுக்கான தளமாக'' உத்தியோகபூர்வமற்று விளங்குகின்றதுடன், தினசரி நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள் இத்தளத்துக்கு விஜயம் செய்கின்றனர். கண்டி வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் ஒரு சிறப்பான சேவை யாதெனில், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு தேவைக்கேற்ற விதத்தில் தமது உடைகளை தைத்துக் கொள்ளலாம்.

# ACCA நிறுவனம் வழங்கும் கணக்கியல் கற்கை நெறிகள்

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கு பட்டயச் சான்றிதழ் அளிக்கப் பட்டயக் கணக்காளர்கள் சங்கம் (ACCA) ஒரு உற்சாகமளிக்கும் செய்தியை வழங்குகின்றது.

கணக்கியல் துறையில் ஒரு செழுமையான தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு அவர்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரை நீண்ட நாள்கள் காத்திருக்க வேண்டிய அவசியமே இல்லை. இவர்கள் தமக்குத் தேவையான அடிப்படைக் கணக்கியல் அறிவை ஒரு இலகுவான அனுமதியின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் பல்வேறு தகைமை போதும் இந்தத் திட்டத்தின் மூலம் மாணவர்கள் பல்வேறு விதமான தகைமைகளைப் பெற முடியும்.

உதாரணமாக ஒரு உதவிக் கணக்காளராகவோ அல்லது கணக்கு எழுதுனராகவோ வர விரும்பும் ஒருவர் அதற்கான தகைமைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். ACCA ஒரு இலட்சத்து 47 ஆயிரம் உறுப்பினர்களையும் நான்கு இலட்சத்து 24 ஆயிரம் மாணவர்களையும் கொண்டுள்ளது. 83 அலுவலர்கள் மற்றும் சுறுசுறுப்பான நிலையங்கள் ஊடாக தனது சேவையைத் திறம்பட ஆற்றி வருகின்றது.




*சாவக்கட்டில் மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் நடமாடும் சேவை நிலையத்தை மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் க.இலட்சுமணசர்மா, வடபிராந்திய முகாமையாளர் கே.ஈ.சுமணசிங்கா, செயற்பாட்டு முகாமையாளர் ஆர். ஜெயேந்திகா, ஓய்வுபெற்ற அதிபர் சி.நாகையா ஆகியோர் நாடாவை வெட்டி திறந்து வைத்தனர். (த-100)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லிசை மாமேதை கலாவினோதன் சின்னமணி

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 9



தமிழர்களின் நாட்டார் வழக்கியற் கூறுகளுள் ஒன்றாக இனம் காணப்படும் வில்லிசை என்னும் நிகழ்வை ஈழத்தில் ஏராளமானவர்கள் நிகழ்த்தி வந்துள்ளனர். எனினும் கணபதிப்பிள்ளை சின்னமணி என்னும் அற்புதக் கலைஞனாலேயே இந்தக் கலை மெருகூட்டப்பட்டு அழகுப் பொலிவுடன் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக வளர்க்கப்பட்டு வருகின்றது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் சங்கமிக்கும் இந்தக் கலையை பல்துறை சார்ந்த அறிவுள்ள இந்தக் கலைஞர் தனது முழுநேரத் தொழிலாகக் கொண்டு இன்று வரை வளர்த்து வருகின்றார்.

காலம் சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதியரின் மகனாக 30.03.1936 இல் வடமராட்சியில் அமைந்திருக்கும் மாதனை என்னும் கலை வளம் நிறைந்த சிற்றுரில் பிறந்தார். தனது எட்டாவது வயதில் குழந்தைக் காத்தானாக நடித்துப் புகழ்பெற்ற இவர் நாடகத் துறையிலும் கல்வியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்வராக வளர்ந்து வந்தார். தமிழ் மொழியில் பெரும் புலமை கொண்டிருந்த தனது பெற்றோரிடம் தாய் மொழியையும் புராண இதிகாச வரலாறுகளையும் குருகுலத்தில் கற்பதைப்போன்று கற்றதுடன் தனது மாமனாரான கீதாஞ்சலி வி.கே.நல்லையாவிடம் நடனத்தையும் இசையையும் கற்றுக் கொண்டார். பாடசாலைப் படிப்பைச் செவ்வனே முடித்துக் கொண்ட பின் 1957இல் ஆசிரிய நியமனம் பெற்று இரத்மலானை கொத்தலாவலபுரம் தமிழ்ப் பாடசாலையில் தமிழ், ஆங்கில ஆசிரியராகப் பணியாற்றினார்.

இந்தக் காலத்தில் தமிழகத்தின் புகழ்பூத்த நாடக மேதைகளான ரீ,கே,எஸ், சகோதரர்களுடன் இணைந்து நாட்டின் பல பாகங்களிலும் இடம்பெற்ற நாடகங்களில் பங்குகொண்டார். அத்துடன் இலங்கை வானொலியில் பகுதி நேர அறிவிப்பாளராகவும் பணியாற்றி வந்தார். அத்துடன் அந்தக் காலத்தில் கொழும்பில் தங்கியிருந்து நாடகங்களை மேடையேற்றிவந்த திரைப்பட நடிகரும் வில்லிசையாளருமான கலைவணர் என்.எஸ்.கிருஸ்ணருடன் தங்கியிருந்து நாடக உத்திகளையும் வில்லிசையின் நுட்பங்களையும் கற்றுக்கொண்டார்.

வண்ணை கலைவாணர் நாடக மன்றத்தின் உருவாக்க உறுப்பினர்களுள் ஒருவரான இவர் இந்த மன்றத்தால் பல தடவைகள் மேடையேற்றப்பட்ட திப்புசுல்தான், வீரமைந்தன், இன்பக் கனவு போன்ற நாடகங்களில் முக்கிய நடிகராகச் சிறப்புற நடித்து அனைவரின் பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டார்.

இவ்வாறு நாடகத்துறையில் துறைதோய்ந்த நடிகனாக விளங்கிய இவர் அக்காலத்தில் வில்லிசை நிகழ்வுகளை வழங்கிவந்த திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்களின் நிகழ்வில் நகைச்சுவையாளனாகவும் பக்கப்பாட்டுக்காரனாகவும் உடுக்கிசைக் கலைஞனாகவும் வில்லிசை அரங்கைப் பல ஆண்டுகளாகச் சிறப்பித்து வந்தார்.

நடிப்பு, இசை, நடனம், தமிழ், சமயம் போன்ற அனைத்திலும் ஒப்பற்ற திறன் கொண்டவராக விளங்கிய இவர் ஹார்மோனியக் கலைஞர் நல்லூர் சோமசுந்தரம், எஸ்.ரி.அரசு ஆகியோரின் துணையுடனும் குருவாக விளங்கிய திருப்பூங்குடி ஆறுமுகத்தின் ஆசீர்வாதத்துடனும் தனித்துவமான வில்லிசைக் கலைஞனாக 02.02.1968 அன்று மாலை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய முன்றலில் பெருந்திரளான கலைஞர்கள், பொது மக்கள், ஆர்வலர்கள் முன்னிலையில் அரங்கேற்றம் கண்டார்.

பல்துறைத் திறன் கொண்ட இவர் வில்லிசை நிகழ்வின் நாயகனாக அமர்ந்து கதையைச் செல்லும் முறையும் நவரச பாவங்களை முகத்தில் காட்டும் அழகும் பாத்திரமாக மாறி நடிக்கும் திறனும் தமிழை அழகுற உச்சரிக்கும் பாங்கும் பொருளுணர்ந்து பாடல்களைச் சுருதி லயம் பிசகாமல் பாடும் இனிமையும் சிந்தனையைத் தூண்டும் நகைச் சுவையும் இவரது தனித்துவப் பண்புகளாக வில்லிசை நிகழ்வுகளில் பொங்கிப் பிரவகித்த போது மக்கள் தம்மை மறந்து இரசித்தனர்.

மரபு வழியான கலைநிகழ்வுகளே முழுமையாக ஆலயத் திருவிழாக்களில் இடம்பெற்று வந்த அந்தக் காலத்தில் இவரால் தொடங்கப்பட்ட வில்லிசை பெரும் வரவேற்பைப் பெற்றது. இக்கலைக்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவர் தமிழர்களால் விரும்பப்படும் கதைகள் அனைத்தையும் வில்லிசை வடிவில் உருவாக்கிச் சிறப்புற நிகழ்த்தி வந்தார். இராமாயணம், மஹாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், ஐம்பெரும் காப்பியங்கள் போன்றவற்றையும் தமிழ் இலக்கியப் பரப்பில் சிதறிக் கிடக்கின்ற நூறுக்கும் மேற்பட்ட வரலாறுகளையும் வில்லிசையாக்கி இன்றுவரை தொடர் நிகழ்வுகளாக நிகழ்த்தி வருகின்றார். இவ்வாறான வரலாறுகளை வில்லிசையாக நிகழ்த்தும்போது கதையில் வருகின்ற அத்தனை பாத்திரங்களாகவும் மாறிவிடும் இயல்புடையவராக இவர் இருப்பதனால் படித்தவர் முதல் பாமரர் வரையான அனைவரும் இவரது வில்லிசையை மெய் மறந்து இரசித்து வருகின்றனர். ஏராளமான கதைகளை வில்லிசையில் நிகழ்த்தியிருக்கும் இவர் ஈழத்தின் பகுதிகளில் மட்டுமல்லாமல் மலேசியா, சிங்கப்பூர், கனடா, சுவிஸ் போன்ற புலம்பெயர் நாடுகளுக்கும் அழைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு வில்லிசைத்துறையில் முழுமையாக ஈடுபட்டு வருகின்ற கலைஞராக இருக்கின்ற போதும் இசைநாடகத் துறையிலும் தன்னிகரற்ற கலைஞராக விளங்கி வருகின்றார். இசைநுட்பம் நிறைந்த பாடல்களையும் பல வரலாறுகளை எடுத்துரைக்கின்ற நீண்ட வசனங்களையும் கொண்டமைந்த பாத்திரமான இயமனாக நடிப்பதில் தனித்துவமான பாணியை ஏற்படுத்திப் பல இளம் நடிகர்களிற்கு எடுத்துக்காட்டாக இருந்து வரும் இவர் சுருதி சுத்தமாகக் காத்தவராயன் கூத்தைப் பாடி நடிக்கும் திறன் கொண்ட சிலருள் முதன்மையானவர்.

கேட்பவர்களால் என்றைக்கும் மறக்கமுடியாதவாறு ஒரு கதையை கலைநயத்துடன் கூறும் ஆற்றுகை வடிவமே வில்லிசை ஆகும். இதில் நடுவில் அமர்ந்திருப்பவர் கதை சொல்பவர். சுற்றியிருப்போர் கதையைப் புதிதாகக் கேட்போர். ஆகவே கதையைக் கேட்பவரில் ஒருவர் நகைச் சுவையாகவோ கோமாளியாகவோ பாவனை செய்து கொள்ளலாம். ஆனால் தற்காலத்தில் தமிழ்த் தினப் போட்டிகளில் மாணவர்களுக்கு வில்லிசையை நெறிப்படுத்தும் ஆசிரியர்கள் நிகழ்வில் பங்குபற்றும் அனைவரையும் கோமாளிகள் போன்று ஆடவைத்து, பேசவைத்து, நடிக்கவைத்து பிழையானதோர் முறையை இத்துறையில் ஏற்படுத்தி விடுகின்றனர். எடுத்துக் கொள்ளும் கதையின் தன்மை கெடாமல் கிராமிய மணம் கமழ இக்கலையை வளர்த்தெடுக்க அனைவரும் முன்வரவேண்டும் என்று தனது உள்ளக் கிடக்கைகளை இவர் கூறுகின்றார். ★

**வசாவிளான் தவமைந்தன்**

# நெஞ்சுச் சளி தணிவடைய நறுவிலி



## மணித்தக்காளி

**வேறுபெயர்:** மணித்தக்காளி, மிளகுத்தக்காளி, காகமாசீ,வாயசம்
**தாவரவியற்பெயர்:** Solanum nigrum (சொலேனம் நைகிறம்)
**குடும்பம்:** Solanaceae (சொலனேசியே)
**சிங்களப்பெயர் :** களு கெம்மெரிய
**சமஸ்கிருதப்பெயர்:** காகமாசீ
**ஆங்கிலப்பெயர்:** Black nightshade

அது சிறு செடி வகுப்புக்குரியது, சாதாரணமணித்தக்காளி (கறுப்பு) சிவப்பு மணித்தக்காளி என்ற பேதங்களுண்டு.

தனி இலைகள், மிளகாய் இலைபோல ஆனால் சற்று நீண்டும் கரும் பச்சை நிறமாகவும் இருக்கும். காய் பச்சை நிறம், பழம் கறுப்பு.

இதன் இலை அல்லது பழத்தை உணவாகச் சமைத்து உண்டு வர (இலையை வறுத்தும், சம்பலாகவும்,காய்,பழத்தை நெய்யில் வதக்கிக் குழம்பாகவும் செய்யலாம், நாச்சுவையின்மை, வாயவியல், அசீரணம், வயிற்றுப் பொருமல், மலச்சிக்கல் என்பன மாறும்.

இலைச்சாறு 1-2 மேசைக்கரண்டியளவில் கற்கண்டுடன் சேர்த்துப்பருகிவர இருமல், சளி,

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

நீர்பாண்டு, வாய்ப்புண் என்பன மாறும்.

காயை உலர்த்தி வற்றல் செய்து நெய்யில் பொரித்து அல்லது குடி நீர் செய்து பருகிவர ஓங்காளம், மலச்சிக்கல், அரோசகம் என்பன நீங்கும்.

## நறுவிலி

**வேறுபெயர்** -நறுவுளி, நறுவிளி, ஒடுக்கிலை, மயிர்க்குட்டிப்பழம்.
**தாவரவியற்பெயர்**-Cordia obliqua (கோடியா ஒப்பிலிக்குவா)
**குடும்பம்**-Boraginaceae போரஜினேசியே
**சிங்களப் பெயர்**-லோலு
**சமஸ்கிருதப் பெயர்**-ஸ்லேஸ்மாதக
**ஆங்கிலப் பெயர்**-Sebestem Plum

இதில் சிறுநறுவிலி, பெருநறுவிலி என்னும் பேதங்களுண்டு, நடுத்தர மரவகுப்புக்குரியது இலைகள் முட்டைவடிவானவை, தனி இலைகள், இலைநுனி சற்று கூராக இருக்கும்.



தை-சித்திரையிலும் புரட்டாதி-ஐப்பசியிலும் கொத்துக் கொத்தாகப் பூக்கும். பூக்கள் வெள்ளை நிறம். குலைகுலையாகக் கனிகள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். நன்கு முற்றியதும் கருமைநிறமாகும்.


இலையை உலர்த்திப் பொடி செய்து அல்லது குடிநீர் செய்து சாப்பிட்டுவர முட்டு, தொய்வு தணிவடையும். இலைச் சாற்றை முகப்பருக்கள் மீது பூசிவரமாறும் கொட்டையைப் பொடி செய்து தேங்காய் எண்ணெயிற் குழைத்து தேமல், கரப்பனுக்குப் பூசிவரமாறும். கொட்டையைக் குடிநீர் செய்து வாய் கொப்பளித்துவர பல்வலி, பல்லரணை, பல்லீறு களில் இரத்தம் வடிதல் என்பன குணமாகும். கனியை உட்கொண் டால் இருமல், நெஞ்சுச்சளி தணிவடையும்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 179



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. அளவுக்கு அதிகம்
6. சேர்.
7. கெட்ட பழக்கம்
8. பலவல்ல
9. ஆடல் அழகி இந்திரலோகத்தில்
11. ஓர் இராசி
12. கூற்றுவன்
14. நல்ல
15. திருமணமாகாத பெண்.
17. ஒரு கிரகம்
18. விவாதம்
20. கிருஷ்ணன்
22. மண்ணுக்கு முந்தியது
23. சிதம்பரம்
24. மனைவி

### மேலிருந்து கீழ்

1. தமிழ் எழுத்தின் தொடக்கம்
2. சக்தி
3. அதிக
4. சளியுடன் தொடர்புடைய ஒரு நோய்
5. ஒரு பிரபந்த வகை
8. தலை
10. சிறுவன்
13. ஆறறிவுடையவன்
15. பழுத்தல்
16. பிரச்சினை
17. மீளாத்துயிலுக்குரிய இடம்.
19. வியாபார நிலையத்தில் பணம் அறவிடும் இடம்.
21. பறவைகளைப் பிடிக்க விரிப்பது.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட் டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவான தாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலி களது பெயர் விவரங்களும்உதயனில் பிரசுரிக் கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 179**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 21.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட் டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.179இற்கான விடைகள் 25-09-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 177 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) பாசாங்கு (4) தகுதி (7) தர (8) கற்கண்டு (9) கம்பன் (11) வடம் (12) நல்ல (13) பாதசாரி (15) கேது (17) விடயம் (18) பிசின் (19) யாகம் (20) நான் (21) தின் (22) அம்புஜம்.

### மேலிருந்து கீழ்

(1) பாதகம் (2) சாரம் (3)குகன் (4) தகவல் (5) குண்டலகேசி ( 6) திடும் (10) பந்தயம் (12) நரி (13) பாடகன் (14) சாம் (16) துன்பம் (17) வியாதி (18) பின்பு (20) நாம்)

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 177 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — **சி.சிந்துஜா,** 184, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

**2 ஆம் பரிசு** — **வி.ஜெயகலா,** சரவணை கிழக்கு, வேலணை.

**3 ஆம் பரிசு** — **K. ரஞ்சித் விஜயகுமார்,** 157, ஸ்ரான்லி பாம், ஸ்ரான்லி றோட்; வவுனியா.

**4 ஆம் பரிசு** — **அ.றூட்ஸ் வசந்தகுமார்,** 43/2, சிவன்கோயில் வீதி, தோணிக்கல், வவுனியா.

**5 ஆம் பரிசு** — **கி. வயித்திலிங்கம்** 97/1 திருவையாறு, கிளிநொச்சி.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

**ஜோ. சறோஜினிதேவி,**
இல.11A, மருதி வீதி, மோதர, கொழும்பு- 15

**வி.மதுமதி,**
யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம். மீசாலை.

**ஞா.டிலான்,**
18, ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு.

# கடவுள்தான்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பவும் நாட்டில் பிரச்சினையெண்டால் சிந்திக்காமல் இருக்க முடியுமா?

தணிகாசலத்தார் சொல்வதைக் கேட்டால் யுத்தம் ஏதோ விளையாட்டுக்கு நடத்தப்படுவது போல் தான் விளங்கியது முருகையாவுக்கு.

''இதென்ன தணிகாசலமண்ண விளையாட்டே ... பூனைக்கு விளையாட்டு; சுண்டெலிக்கு உயிர் போகுதெண்ட மாதிரித்தான் இருக்கு '' என்றார் அவர்.

தணிகாசலத்தாரின் எண்ணத்தில் ஒரு தீ பரவியது யுத்தம் என்னபாப்பா யார் வீரனெண்டு பாக்கிறதுக்காகவே நடந்தது. மூக்கில தொடு பாப்பம் என்டே சண்டை தொடங்கியது. இத்தனை உயிர்களை இழந்து போனம். ஒரு கொள்கைக்காக, நோக்கத்துக்காக வெல்லோ மக்கள் போராட்டமாகப் போர் வெடிச்சது? அது தோத்துப் போச்செண்டில்லை. உலகத்தைச் சற்று கண்விழிக்க வைச்சிருக்கெல்லோ. அது வெற்றிதான். நீதியைத் தோற்கப்பண்ண ஏலாது.

இத்தனை அழிவுகளையும் இதுவரை ஒரு மாதிரித் தாங்கிக் கொண்டம். இனியும் யுத்தம் வராமல் பார்க்க வேணுமல்லோ?

முருகையா பதட்டப்பட்டார்.

'' நீ சொல்லுறது சரியண்ணை. ஆனால் ஏன் இந்த யுத்தம் நடந்த தெண்டதை எங்கட ஆக்களும் சரி எதிர்ப்பாட்டியும் சரி விளங்கிக் கொள்ளாமத்தானே இருக்குதுகள். இப்ப பார் எதுக்காக யுத்தம் நடந்ததோ? எதனால மக்கள் செத்து மடிஞ்சினமோ? எதுக்காகப் போராடினமோ எண்டதெல்லாத்தையும் நாங்களும் மறந்துபோனம்.

அவங்களும மறக்கடிக்கத் தானே பாக்கிறாங்கள் என்றார் தணிகாலசம். தணிகாசலத்தாரின் கருத்தை ஏற்றுக் கொண்டு முருகையா சிந்தித்தார்.

ஓம்.ஓம் •வாலை விட்டுட்டு வேரைப் பிடிச்சகதையாய் போர் ஏன் நடந்ததெண்டதைத் தொலைச்சுப் போட்டம். போரால ஏற்பட்ட அழிவைத் தூக்கிப் பிடிச்சுக்கொண்டு அதுக்கு மருந்து போட ஓடித்திரியிறம். அதுவும் வேணுந்தான் எங்கட போராட்டத்துக்கு ஒரு முடிவும் வேணுமெல்லோ.

இப்ப தெரியுதே எங்கட பாதையைத் திசை திருப்பிறதுக்கு இவங்கலெல்லாரும் போடுற ஆட்டம் நாங்க மச்சான் நிதானமாத்தான் காய் நகர்த்த வேணும்.

அதை இந்த மக்களுக்காகத் தம்மை அர்ப்பணிச்சு நிக்கிறதாகச் சொல்லுறவை செய்ய வேணும் பார்'' என்ற போது முருகையாவின் மனதில் ஒரு ஆற் றாமை கிளைவிட்டது.

''அதையாரண்ண செய்யப் போகினம் பதவியும் பேராசையும் கொண்டு அலையிற எங்கட அரசியல் தமிழ்த் தலைவர்களால் அதைச் செய்ய ஏலுமே!'' என்றார் அவர்.

''அதைத்தானே நானும் யோசிக்கிறன். அண்டைக்கு எங்கட தலைமைகள் ஓர் உறுதியான, மக்கள் நலம் விரும்புற, சேவையாளர்களாக இல்லாமல் போனதால தானே யுத்தம் பிறந்தது. சாத்வீகப் போராட்டத்திலையும் அழிவுகளைச் சந்தித்த பின்னர் தானே ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தது என்றார் தணிகாசலம்.

ஓமண்ணே இண்டைக்கும் அந்த நிலையில தானே எங்கட சனத்தை ஒரு சிலர் ஏமாத்தி ஏமாத்தி அடிமை யாக வைச்சிருக்கப்பார்க்கினம். செல்வநாயகம் ஐயா சொன்னதைப் போல் இப்பவும் நாங்க ''கடவுள் தான் காப்பாத்த வேணும் '' என்றுதான் கையேந்த வேண்டிக்கிடக்கு.

என்ற முருகையாவைப் பார்த்த தணிகாசலத்தார் ''எங்கட அரசியலில் கடவுள் வந்து ஏதும் கை கொடுக் கக் கூடுமோ ஏனெண்டால் பூதங்களெல்லோடாப்பா' இப்ப நாட்டைக் குழப்புது'' என்று பெருமூச்சு விட்டார்.

''பொழுதுபடுகுது நான் போட்டுவாறன்'' என்றார் முருகையா. அவருடைய மனதில் ஒரு பூதத்தின் பயம் எட்டிப் பார்த்தது. ★

# கர்ப்பகாலத்தில் குங்குமப்பூ பாவனை ஆபத்தானது

(கடந்த வாரத் தொடர்ச்சி)

கசப்பான, சுவையற்ற இந்த காம்பின் பின்னே சுவையான பின்னணித்தகவல்கள் உள்ளன.

இந்தத் தாவரம் சுயமாக இனம் பெருக்குமாற்றல் அற்றது. இதன் வேரின் குமிழ்ப்பகுதி பிரிக்கப்பட்டு பதிவைத்தல் மூலமே இந்த தாவரம்பயிர் செயப்படுகிறது. 1 கிலோ குங்குமப்பூ பெறுவதற்கு சுமார் 150000 பூண்டுகள் தேவைப்படும். அதாவது இதற்கு சுமார் 2 உதைபந்தாட்ட மைதானமளவு நிலப்பரப்பில் உள்ள பூண்டுகள் தேவை. இதனாலேயே 1 கிலோ குங்குமப்பூ சுமார் 1 இலட்சம் முதல் 1 மில்லியன் ரூபாவரை விலை போகிறது. வட இந்தியாவில் பெருமளவில் உற்பத்தியாகும். இந்த பூவை கள்ளமாக கடத்துவது இந்தியாவில் ஒரு இலாபமீட்டும் பிரபலமான தொழிலாகும்.

குங்குமப்பூவில் காணப்படும் Picrocrocin எனப்படும் பதார்த்தம் அதன் மருத்துவ விளைவு, பக்கவிளைவுகளுக்கு காரணமாகும். முக்கியமாக இது ஒட்சிட்டொசின் (Oxytocin) புரோஸ்தொகிலண்டின், (Prostaglandin),மிசொப்ரொஸ்தொல் (Misoprostol) ஆகியன போன்று கருப்பையைச் சுருக்கும் திறன் வாய்ந்தன. எனவே இவை கருச்சிதைவை ஏற்படுத்தும் என அண்மைய ஆய்வுகள் காட்டியுள்ளன. குங்குமப்பூவின் அளவுக்கதிகமான பாவனை, அதாவது 10 கிராமை மிஞ்சிய பாவனை மரணத்தைக் கூட விளைவிக்கலாம். எனினும் தகுந்த அளவுப்பாவனை மகப்பேற்றின் பின்னர் இது ஒரு நல்விளைவை ஏற்படுத்தும், அதாவது குருதிப்போக்கை குறைக்கும்.

இதைவிட குங்குமப்பூ மார்பகப்புற்று நோய், Alzheimers எனப்படும் மறதி நோய்க்கும் மருந்தாகப் பயன்படுகிறது.

குழந்தையின் நிறம் அதன் பெற்றோரின் நிறமூர்த்தத்தாலேயே (DNA)தீர்மானிக்கப்படுகிறது. குங்குமப்பூவோ அன்னாசிப் பழமோ இதைத் தீர்மானிக்காது என்பதை கர்ப்பிணிதாய்மாரும் மற்றோரும் உணர்ந்து இது போன்ற மருந்துகளையும் மூலிகைகளையும் தவிர்த்து கருச்சிதைவு ஆபத்திலிருந்து தப்புவது அவசியம். முக்கியமாக கருவின் அங்கவளர்ச்சியடையும் காலமான முதல் 18 கிழமைவரை தேவையற்ற மருந்துப் பாவனையை தவிர்க்க வேண்டும்.

**டாக்டர்.சி.நவநீதன்**
மகப்பேற்றுத்துறைத் தலைவர், கிரிபித் ஆதார வைத்தியசாலை, ஆஸ்திரேலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 35

# மழைநீரைக் குடிதண்ணீராக்கிப் பயன்பெறுவோம் 4


கூரை மேற்பரப்பில் பெறப்பட்ட மழையானது பீலிகள் (Gutters) மூலம் ஒன்று சேர்க்கப்பட்டு இலை நீர் சேகரிக்கும் நீர்த் தாங்கிகளின் பீலிகளில் காணப் படும் நீர் வெளிச்செல்லும் துளைகளின் மூலம் சென் றடைகின்றன. இவ்வாறு செல்லும் மழைநீரையும் மேலும் தூய்மைப்படுத்த இரு வேறு வகை வடிகட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. கீழே காட்டப்பட்ட படத் தில் உள்ளது போல பீலிகளின் நீர் வெளிச் செல்லும் துளை கள் பிளாஸ்டிக் வலைகள் மூலம் தடையிடப்படுகின் றன. (Screening) இவற்றினால் காற்றின் மூலம் வரும் இலைகள், குழைகள் நீர் சேகரிக்கும் தொட்டியையும், வடிகட்டியையும் அடையாமல் தடுக்கப்படுகின்றன.

படம் (01)




அடுத்து நீர்த் தாங்கியை அடையமுன் ஒரு வடிகட்டியினூடாக இந்த நீரானது செலுத்தப்படல் மிக உகந்தது. இந்த வடிகட்டி(Filter) அமைப்பதும் மிக இலகுவான ஒன்றேயாகும். இவை சாதாரணமாக வீடுகளிலேயே அமைக்கப்படக் கூடியவை.


படம் (02)




சாதாரண பிளாஸ்டிக் வாளியானது சமச்சீரான முறையில் சீராகத் துளைகள் இடப்பட்டுத் தயாரிக் கப்படும். இங்கு வாளியின் அளவானது உங்கள் நீர் சேகரிக்கும் தாங்கியின் அளவில் தங்கியிருக்கும். அதனுள் சீரான வடிவம் கொண்ட கூளாங் கற்களை 1/3 பங்கு அளவுக்குத் திருப்பி அதன் மேல் ஒரு படைக்கரியை இட்டு நிரப்பி, சிறுதுளை கொண்ட பிளாஸ்ரிக் வலையினால் வாயை இறுகக்கட்டுவதன் மூலம் இலகுவாகத் தயாரிக்கலாம். இங்கு நாம் சாதாரண வடிகட்டலில் பயன்படுத்தப்படும் வேறு அளவுள்ள கூளாங்கற்கள், சிறுமணல் என்பவற்றைக் கொண்டு பல படைகள் கொண்ட வடிகட்டியையும் தயார் படுத்தலாம். இதுவும் மிகச் சிறப்பாக சிறிய தொங்கல் பாத்திரங்களையும், Bacteria போன்ற நுண்ணங் கிகளையும் நீர்த்தாங்கிகளைச் சென்றடை வதைத் தடைசெய்யும்.

ஆயினும் எம்மால் கூரை மூலம் சேகரிக்கும் நீர் பீலிகள் மூலம் வரும் வேகம் இந்தவகை நுண் வடிகட்டிகளில் வடிக்கப்படும் வேகத்துக்கு ஏதுவாக அமையப்போவதில்லை. ஆகவே நான் முன்னர் கூறிய வெறும் கூளாங்கற்கள், கரிகள் கொண்டு தயாரிக்கப் பட்ட வடிகட்டிகளே போதுமானதாகும்.

அடுத்து நாம் மிக முக்கியமாக அறிய வேண்டி யவை நீர் சேகரிக்கும் தொட்டிகளாகும். ஆயினும் அதற்கு முன் நாம் முன்னர் கூறியது போல் எவ்வாறு முதல் மழையின் போது கூரையில் காணப்படும் அசுத்தங்களைக் கழுவிவரும் நீரை நாம் சேகரிக்கும் நீர்த் தொட்டிகளை அடையாமல் தடுக்க நாம் அடைக்க வேண்டிய முறையைக் கட்டாயம் அறிதல் வேண்டும். இதுவும் ஓர் இலகுவான அமைப்பே.




**முதல்கருவி (First Flush)**

படத்தில் காட்டப்பட்டது போல் நீரை நீர்த்தாங் கிக்குக் கொண்டு செல்லும் குழாயில் நீர்த்தாங்கியில் காணப்படும் வடிகட்டிக்கு முன்பாக செங்குத்தாக ஒரு நீர் வெளியேற்றுக் குழாயையும் அதனுடன் ஒரு வால்வு (Valvu) அமைப்பையும் இணைத்தல். முதல் மழை பெய்யும் நேரங்களில் Valvu திறந்த நிலையில் வைத்திருப்பதன் மூலம் முதல்கருவி வரும் (First Flush) நீரானது நீர்த் தாங்கியை அடையாமல் மிகப் பாதுகாப்பாக வெளியேற்ற முடியும்.

நீர்த்தாங்கியானது குடும்பங்களில் வருமான நிலையையும் அவர்களின் குடிநீர்த் தேவையிலும் பெரிதாகத் தங்கியிருக்கும். நீர்த்தாங்கிகள் அமைக்கும் செலவினமானது மிக முக்கிய பங்கு வகிக்கின்ற போதும் அமைக்கும் நீர்த்தாங்கியானது ஓரளவேனும் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

அண்ணளவாக ஒரு நாளைக்கு ஒரு மனிதனின் குடி தண்ணீர்த் தேவை 2.5 L (Sphere standard 2004) ஆகும். நாம் இதனை அண்ணளவாக 3L எனக் கொண்டு நீர்த்தாங்கியின் கொள்ளளவைக் கணக்கிட்டோம் ஆயின்

ஒரு மனிதனின் நீர்த்தேவை 3L
குடும்ப அங்கத்தவர் 4 பேர் எனின்

ஓர் ஆண்டுக்கான நீர்த் தேவை அண்ணளவாக 3L x 4 பேர் x 365 நாள்கள் எனின் 4380L தேவை ஏற்படும். ஆகவே 4 பேர் கொண்ட குடும்பம் ஆனது குறைந்தது 5000L ($5M^3$) ஏனெனில் இந்த நீரானது நீண்ட கால சேமிப்பில் இருக்கப் போவதால் அதனால் ஏற்படும் நீர் இழப்பையும் (ஆவியாதல், வீணாக்கப்படல்) கருத்தில் கொள்ள வேண்டும்.

சு.சரவணன்
இரசாயனவியலாளர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை.

அடுத்து வரும் வாரங்களில் பல்வேறு வகையான நீர்த்தாங்கிகளையும் அவைக்கான செலவினங்கள் போன்றவற்றையும் தெளிவாகப் பார்ப்போம். இந்த மழை நீர் சேகரிப்புத் தொடர்பாகத் தங்களுக்கு ஏதும் ஐயப் பாடு இருப்பின் இந்தப் பகுதிக்கு அனுப்பி வைக்கவும் தங்களுக்கு தகுந்த விளக்கங்கள் எம்மால் தரப்படும்.

(தொடரும்)

# விற்றமின் - C / உயிர்ச்சத்து C

* இது அஸ்கோபிக் அசிட் (Ascorbic acid) என அழைக்கப்படும். இது நீரில் கரையும் சுயாதீன மூலகங்கள் உருவாவதைத் தடுப்பதுடன் உடலில் கொலாஜன் நார்ப் புரதம் உருவாவதைத் தடுக்கும்.
* சிறு குடலில் காணப்படும் இது இரும்பு மூலகத்தின் அகத்துறிஞ்சலை மேம் படுத்துகின்றது.
* இந்த விற்றமின் இலகுவாக வெப்பத்தால் அழிவடையக் கூடியதாகையால் குறைந்த வெப்பநிலையில் நீராவியில் அவிப்பதன் மூலம் காய்கறிகள் இலைவகைகளில் இருந்து இழக்கப்படுவதை தடுக்கலாம்.
* புகைப்பிடிப்பவர்கள் அவசியமாக இந்த விற்றமினை உட்கொள்ள வேண்டும். ஏனெனில் சுயாதீன மூலகங்கள் உருவாவதைத் தடுக்கும்.
* இது அநேகமான உடல் இரசாயனத் தாக்கங்களின் ஊக்கியாகச் செயற்படுகிறது.
* சாதாரண நிறையுடைய வளர்ந்த மனிதர் ஒருவர் இதனை 30 mg / நாள் என்ற வீதத்தில் உள்ளெடுக்க வேண்டும்.
  கர்ப்பிணிகள்: 100 mg /நாள், பாலூட்டும் தாய்மார்- 150 mg/ நாள் என்ற வீதத்தில் உள்ளெடுக்க வேண்டும்.
* இதன் குறைபாடு ஸ்கேவி நோயை உண்டாக்குகின்றது.
  உ+ம்: முரசிலிருந்து இரத்தம் வடிதல்.
* விற்றமின் C அதிகமாக உள்ள உணவுகள்.
  -பச்சை இலைவகைகள்: முருங்கையிலை, வல்லாரை, அகத்தி, பொன்னாங் காணி இவற்றைப் பகுதியாகச் சமைத்த உணவாக உட்கொள்ளுதல் நல்லது.
  -பழவகைகள்: வாழைப்பழங்கள், கொய்யா, பப்பாசி, தோடம்பழச்சாறு, மாம் பழம், பெருநெல்லி (500 mg), அன்னாசி.
* இந்த விற்றமினை அதிகளவில் உட்கொள்வதால் இது எந்த விதப் பாதிப்பையும் சாதாரண, நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவர்களுக்கு ஏற்படுத்தாது. ஏனெனில் இது சிறுநீருடன் கழிக்கப்பட்டுவிடும்.

S.சிவமைந்தன்,
மருத்துவபீட மாணவன்.

உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப் பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.

# சுகத்தை தகர்க்கும் இயந்திர வாழ்க்கை

**கேள்வி:** உலக நடைமுறைகள் இயந்திர மயமாக்கப்படுவதால் மனிதன் நோயாளி ஆகிக்கொண்டிருக்கிறான். அந்தக் காலத்து மனிதன் இயற்கையுடன் ஒன்றி எவ்வளவு ஆரோக்கியமாக வாழ்ந் திருக்கின்றான். அன்றைய மருத்துவ முறைகள் மனிதனை ஆரோக்கிய மானவனாக வாழ்வதற்கு உதவியிருக் கின்றன. இயந்திரங்கள் மனிதனை நோயாளியாக்குகின்றன. புதிய மருத்துவ முறைகளால் கூட ஒன்றும் செய்ய முடி யாதுள்ளது. இதனால் மக்களை அன்றைய வாழ்க்கை முறைக்கு மாறச் செய்வதன் மூலம் நோய்களைத் தவிர்க்க முடியுமல் லவா? இதனை சுகாதாரத் துறையினர் ஏன் முன்னெடுக்கமுயலவில்லை?

-செல்வநாயகம்- குப்பிளான்.

**பதில்:** நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது. உலகம் இயந்திரமயமாகி சுதந்திரங்கள் பறிபோய் பூமிக்காற்றுப் புகையாகி புழுதி மண்டலமாகி ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்து பூமியை கதிர் வீச்சுக்கள் தாக்க, இலட்சக்கணக் கான பச்சை மரங்கள் வெட்டிச் சாய்க் கப்பட்டு பாவப்பட்ட இந்த மண் பாலை வனமாகிக் கொண்டிருக்கிறது. இயற்கை யான இனிய கனிகளுக்குக் கூட இரசா யனம் தெளிக்கப்பட்டு பகட்டான நச்சுக் கனிகள் ஆக்கப்பட மனிதன் நோய் வாயப்பட்டுக் கொண்டிருக்கிறான்.

இதன் மறுபுறத்தைப் பார்த்தால் பண்டைய காலம் போல் நாம் பழை [illegible]க்குப்போய் வேட்டையாட முடியுமா? எந்தக் காட்டுக்குப் போவது? எதனை வேட்டையாடுவது? இயந் திரங்கள் அனைத்தையும் இல்லை என்று அழித்துவிட்டு மின்சாரமின்றி, வாகனங்களின்றி, தொலைபேசி இன்றி, பேனை, பென்சில், பேப்பர், புத்த கங்கள் எதுவுமின்றி மருத்துவத் தொழில் நுட்பமும் விவசாய விஞ்ஞானமும் இலத் திரனியல் சாதனங்களும் இன்றி வகை தொகை இன்றிப் பெருகி நிற்கும் இந்த மனித குலத்தைப் பராமரிப்பது எப்படி?

சி.சிவன்சுதன்
வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை

விஞ்ஞான தொழில்நுட்ப வளர்சி யினூடே எமது சுகத்தையும் கட்டி வளர்ப்பது எப்படி என்றுதான் நாம் சிந்திக்க வேண்டும். இயந்திரங்களால் சூழல் மாசடைவதையும் மனிதன் நோய்வாய்ப்படுவதையும் குறைக்க என்ன செய்ய வேண்டும் என்று சிந் திக்க வேண்டும். இதற்கு எம் எல்லோ ரினதும் ஒன்றுபட்ட முயற்சி தேவை.

விஞ்ஞான வளர்ச்சியினால் மனிதன் சராசரியாக வாழும் வயதெல்லை அதி கரித்திருக்கிறது. கற்கை, கற்பித்தல் செயற்பாடுகளில் புரட்சிகர மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தகவல் பரிமாற் றத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சியினால் உலகம் ஒரு குடும்பம் போல நெருங்கி வந்திருக்கிறது. இந்த நல்ல மாற்றங் களை எமது சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்திக் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்காத்தா




விமர்சனம்

அஜித்குமார், அர்ஜூனும் சேர்ந்து நடித்துக் கலக்கும் இந்தப் படத்தின் கதையில் வரும் சண்டைக் காட்சிகளில் இருவேறு வடிவங்களில் இருவரும் சண்டை பிடிப்பது பார்வையாளர்களுக்கு ஆக்ஷன் கிங் அர்ஜூனுக்கு ஈடாக தலை அஜித் நடித்திருப்பது சிறப்பாகும். இந்தப் படத்தின் கொள்ளைக் கும்பல் ஒன்று திட்டம் போட்டு வங்கியிலிருந்து தங்கக் கட்டிகளைக் கொள்ளையடிக்கிறது. கொள்ளைக் கும்பலில் ஒருத்தன் மற்ற உறுப்பினர்களை ஏமாற்றிவிட்டு தங்கக் கட்டிகளுடன் தலைமறைவாகி விடுகின்றான். ஏமாற்றப்பட்டவர்கள் அவனைக் கண்டு பிடித்துத் தங்கக்கட்டிகளை எப்படி கைப்பற்றுகிறார்கள் என்பதே மங்காத்தா திரைப் படத்தின் கதையாகும்.

இந்தப் படத்தின் கதையில் கிரிக்கெட் சூதாட்டத்துக்காகக் கொண்டு செல்லப் படும் ஐந்நூறு கோடி பணத்தைக் கடத்த முயற்சிக்கும் குடும்பத்துடன் வந்து சேரும் பொலிஸ் அதிகாரி பதவியில் இருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட அஜித்குமார் மும்பையில் நடைபெறும் கிரிக்கெட் சூதாட்டத்தின் முக்கிய புள்ளியாக ஜெயப்பிரகாஷ் இருக்கிறார். கிரிக்கெட் சூதாட்டக் கும்பலை வளைத்துப் பிடிக்க நியமிக்கப்படும் பொலிஸ் அதிகாரியான அர்ஜூன் தனது குறூப்பை மும்பையில் களமிறக்குகிறார்.

இதற்கிடையில் ஜெயப் பிரகாஷ்சின் மகள் திரிஷாவும் அஜித்தும் காதலர்கள். ஜெயப்பிரகாஷிடம் வேலை செய்யும் 4 பேருடன் அஜித்தும் இணைந்து திரிஷா மூலம் ஜெயப்பிரகாஷை நெருங்கி, அந்தப் பணத்தை நோட்டம் இடுகிறார்கள். பணம் வந்து சேரும் நாளில் பொலிஸ் கெடு பிடி அதிகம் ஆக, ஜெயப்பிரகாஷ் குறூப் உஷாராகிறது. அந்தப் பணத்தைத் திருடு வதற்குத் திட்டம் போட்ட 4 பேரும் அஜித்தும் ஒன்றாகக் கைகோர்த்துப் பணத்தைத் திருடு கிறார்கள். ஒருபக்கம் அர்ஜூன் விரட்ட, மறுபக்கம் ஜெயப்பிரகாஷ் விரட்ட அது போதா தென்று திருடிய 5 பேரும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொள்கின்றனர்.

இறுதியில் அந்தப் பணம் யாருக்குச் சேர்ந்தது, திட்டம் போட்ட அஜித்துக்கா, வில்லன் குறூப்புக்கா, பொலிஸூக்கா என்பது விறுவிறுக்க வைக்கும் காட்சியில் இந்தப் படம் அமைந்திருக்கிறது. கதையே இல்லாமல் படம் எடுக்கிறார்கள் என்று பலரும் சொன்னதாலோ என்னவோ இயக்குநர் வெங்கட் பிரபு இவ்வளவு சிக்கலான கதையை எடுத்துக் கொண்டு களம் இறங்கி இருக்கின்றார். இன்னும் எத்தனை புதுமையான திறமைகளை வெளிக்காட்டப் போகின்றார் என்ற ஆவலுடன் பார்க்கின்ற ரசிகர்களுக்கு படத்தின் ஒவ்வொரு காட்சிகளும் நகர்கிறது. தமிழ் சினிமாக் ஹீரோக்கள் இதையெல்லாம் செய்யக் கூடாது என ஒரு இலக்கணம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக பேர் எடுத்த ஹீரோக்கள் அந்த இலக்கணங்களைக் கடைப்பிடிப்பது அவசியம்.

கதாநாயகியை ஏமாற்றாதது, கெட்ட வார்த்தைகளைத் தவிர்ப்பது, உண்மையான வயதை மறைப்பது என அத்தனை விடயங்களையும் துணிச்சலாக உடைத்து மங்காத்தா விளையாடி இருக்கிறார் அஜித். எதைப்பற்றியும் யோசிக்காமல் எதிரான கதாபாத்திரத்தில் நடித்திருப்பது பாராட்டத்தக்கது.

அர்ஜூன் இந்தப் படத்தின் மூலம் மீண்டுமொருமுறை ஆக்ஷன் கிங் என்று நிரூபித்திருக்கிறார். சண்டைக் காட்சிகளில் அதேவேகம். அஜித்துக்கு இணையாக கதையில் முக்கியத்துவம் அர்ஜூனுக்குக் கொடுத்திருப்பது படத்தின் பலம் எனலாம். அஜித்தும் அர்ஜூனும் மோதும் காட்சி அமர்க்களம், மகாகவி பாரதியின் பேரனான நிரஞ்சன் பாரதி எழுதிய 'கண்ணாடி நீ... கண்ஜாடை நான்' பாடல் இனிமையாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு ஒரு நடிகரைப் பிடிக்க வேண்டும் என்றால் சினிமாவில் நன்றாக நடிக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. நிஜவாழ்வில் ஒரு நல்லவராக மனதில் பதிய வேண்டும். திறமையைக் காட்டுபவரை விட, நல்லவராகக் காட்டுபவரையே உயரத்தில் வைப்பார்கள். எந்தத் திட்டமிடலும் இல்லாமல் அஜித்துக்கு அது வாகவே நடக்கிறது. இந்தப் படத்தின் பின்னணி இசை யுவன் சங்கர்ராஜா. ஒளிப்பதிவு சக்தி சரவணன். இந்தப் படத்தின் மும்பை தாரவி பகுதியா இல்லை செட்டா என்று கண்டு பிடிக்க முடியவில்லை. மெலடிப் பாடல்கள் படத்தின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடிய வில்லை.

படத்தில் அஜித் மோட்டார் சைக்கிள் ஓடும் காட்சியில் பரபரப்பு தெரிகிறது பார்வையாளர்களிடம். அஜித் தண்ணியடித்துக் கொண்டு கூட்டாளிகளைக் கொல் வதற்கு செஸ் போர்டில் திட்டம் போடும் காட்சி வெங்கட் பிரபுவின் தனிச்சிறப்பு.

படத்தில் முக்கியமாக தூக்கி நிறுத்தும் காட்சி அஜித், அர்ஜூன் சேர்ந்து வரும் காட்சிகள். அஜித் தனது முக்கியமான 50 ஆவது படத்தில் பிறநடிகர்களுக்கு முக்கிய தோற்றங்கள் கொடுத்து கதைக்கு முன்னுரிமை கொடுத்து நடித்திருக்கும் அஜித்தின் பெருந்தன்மை புதுமுக நடிகர்களின் மனதில் ஒரு தெம்பை கொடுத்தி ருக்கிறது.

'காதல்கோட்டை' படத்தின் மூலம் அஜித்துக்கு ஒரு திருப்புமுனை கிடைத்ததுபோல் மங்காத்தா படத்தின் மூலமும் ஒரு திருப்புமுனை கிடைத்திருக்கிறது. இனிமேல் தனது இயற்கைத் தோற்றத்துடன் அஜித் தனது படங்களில் வெளி வருவார் எனத் தெரிகிறது.

இந்தப் படத்தின் மூலம் உண்மைத் தோற்றத்துடன் இனி மேல் நடிக்கப் பல ஹீரோக்கள் முன்வருவார்கள் என்பது உண்மை. மங்காத்தா ஒரு பொழுதுபோக்குத் திரைப்படம்.

- குமார்.

# இனப்பற்றும் தேசப்பற்றும் மிக்க மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



தேசப் பற்றும், தெய்வப் பற்றும், மொழிப் பற்றும், இனப்பற்றும் மிக்க பாரதியார். தமிழ் இனப்பற்றினால் அவர் வாழ்ந்த காலத்தில் தமிழ் இனத்தின் துன்பம் கண்டு துடித்தார்.

இன்று பொருள் ஈட்டவென்று நம் இனத்தவர் வெளிநாடு செல்கின்றனர், போருக்கு அஞ்சி வெளிநாடு செல்கின்றனர். ஈழத்தில் வாழும் தமி ழர்கள் நிம்மதியாக வாழ்கின்றார்களா? அன்று பாரதி காட்டிய தமிழ் இனத்தின் அவலங்கள் இன்றும் தொடர்கின்றனவே.

இன்று ஈழத்திலும் வேறு பல நாடுகளிலும் தமிழ் இனம்படும் அவலத்தைத் தீர்க்க தரிசியாகிய பாரதி பாடிக் கண்ணீர் விடுகிறார்.

*''பற்பல தீவினும் பரவி இவ்வெளிய*
*தமிழ்ச் சாதி தடி உதை உண்டும்*
*காலுதை உண்டும் கயிற்றடி உண்டும்*
*வருந்திடும் செய்தியும் மாய்ந்திடும் செய்தியும்*
*பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறாது*
*செத்திடும் செய்தியும் பசியாற் சாதலும்*
*பிணிகளாற் சாதலும் பெருந்தொலைவுள்ள தம்*
*நாட்டைப் பிரிந்த நலிவினாற்சாதலும்*
*இஃதெலாம் கேட்டும் என்னுளம் அழிந்தியேன்''* என்று பாடுகிறார்.

தமிழ்ச் சாதிக் கொடியோரின் தடியடிக்கு ஆளாகிறது, கால் உதைக்கு ஆளாகிறது, கயிற்றடிக்கு ஆளாகிறது, இதனால் வருந்துகிறது, சாகிறது.

மனைவியைப் பிரிந்த கணவன், கணவனைப் பிரிந்த மனைவி இவர்களைப் பிரிக்கும் கொடியவர்கள் என்றெல்லாம் கூறுகிறார்.

தமிழினத்தின் அவலங்கள் காலம் மாறினும் மாறாதிருக்கின்றனவே!

### தேச விடுதலையின் பாரதியார் பங்கு

பாரத தேசம் அடிமைப்பட்டிருந்த காலம். மகாத்மா காந்தி ரஷ்சிய ஞானியின் நூல்களைப் படித்தவர். ரஷ்ய ஞானிமேல் பெரும் மதிப்புக் கொண்டிருந்த மகாத்மா காந்தி ரஷ்யஞானி ரோல்ஸ்ரோய்க்குக் கடிதம் எழுதி இந்திய விடுதலைக்கு அறிவுரை வழங்குமாறு கேட்டிருந்தார்.

ரோல்ஸ்ரோய் உலகம் ஒப்புக் கொண்ட பெரிய மகான். மகாத்மா காந்தியின் கடிதத்துக்கு நீண்ட பதில் எழுதவில்லை. சுருக்கமாகவே பதில் எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர் 30 கோடி மக்கள் தொகையைக் கொண்ட இந்திய தேசத்தை ஆயிரக்கணக்கான ஆங்கிலேயர்கள் அடிமையாக்கி ஆள்வதற்கு என்ன காரணம் என்பதைச் சிந்தித்தால் விடை கிடைக்குமெனக் குறிப்பிட்டிருந்தார். அதன் பின்புதான் மகாத்மாகாந்தி இந்தியா சமயத்தாலும், சாதியாலும் இன்னும் பல காரணங்களாலும் சிதறுண்டிருப்பதை அறிந்தார். பாரததேச மக்கள் எல்லோரும் ஒரு தாயின் பிள்ளைகள், உடன் பிறப்புக்கள், இந்தப் பிள்ளைகள் சாதிபேதம், சமயபேதம், மொழிபேதம் அனைத்தையும் மறந்து தேச விடுதலைக்காக ஒன்றுபட்டுப் போராட வேண்டும் என்றார்.

மகாத்மாகாந்தியின் விடுதலைக் கருத்தை ஏற்றுக் கொண்ட பாரதியார்
*'' பாரத தேசம் பழம் பெரும் தேசம்*
*நீரதன் புதல்வர் நினைவ கற்றாதீர்''* என்று பாடினார்.

இந்திய மக்கள் அனைவரும் இந்தியாவின் புதல்வர்களே, தாயின் அடிமை விலங்கு ஒடிக்கப் பிள்ளைகள் ஒன்று படவேண்டும் என்று கூறினார்.

*''ஒன்று பட்டால் உண்டு வாழ்வு - நம்மில்*
*ஒற்றுமை நீங்கின் அனைவர்க்கும் தாழ்வு''* என்று பாடினார்.

தேச விடுதலைக்கு இந்திய மக்களை ஒன்று படுத்திய பணியில் பாரதி யாருக்கும் பெரும் பங்குண்டு.

### ஊர் கூடித் தேர் இழுத்தல்

ஊர் மக்களிடையே கருத்து வேற்றுமை இருக்கலாம். தனிப்பட்ட பகை கூட இருக்கலாம். ஆனால் தேர்த் திருவிழா வரும்போது தேர்த் திருவிழா சிறப்பாக நடைபெறவேண்டும் என்ற ஒன்றுபட்ட நல்லெண்ணத்துடனயே போவார்கள். ஒரே திசை நோக்கி ஒரே பக்தி உள்ளத்துடன் தேரை இழுப்பார்கள். நெடும் தேர்கூட இலகுவாக இழுபடும். திருவிழா சிறப்பாக நிறைவுறும்.

இந்திய தேசமும் நெடுந்தேராகப் பாரதியார் கண்களுக்குத் தெரிகிறது. முப்பது கோடி மக்களும் சுதந்திர தேவியைத் தேரில் ஏற்றி ஒன்றுபட்டு இழுத்தால் சுதந்திரம் என்கின்ற இந்தியதேசத் தேர்த் திருவிழா விரைந்து நிறைவுறும் என்று கூறுகிறார். இந்தப் பணி எப்படி நிறைவேற வேண்டும் இதனைத் தொடர்ந்து தேச அபிவிருத்திப் பணி எப்படி நிறைவேற வேண்டும் என்பதையும் கூறும் பாரதியார்.

*'' இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்*
*இனிய நீர்த் தண் சுனைகள் இயற்றல்*
*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்*
*ஆலயம் பதினாயிரம் நாட்டல்*
*பின்னருள்ள தருமங்கள் யாவும்*
*பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்*
*அன்னயாவினும் புண்ணியங்கோடி*
*ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''*
*எனக் கூறி இந்தப் பணிகள் சிறப்புற நிறைவேற*

*''நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்*
*நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்*
*அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்*
*ஆண்மையாளர் உழைப்பை நல்கீர்*
*மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்*
*வாணி பூசைக்குரியன பேசீர்*
*எதுவும் நல்கி இங்கெவ் வகையானும்*
*இப்பெரும் தொழில் நாட்டுவம் வாரீர்''* என்கிறார்.

எல்லோரும் தேச விடுதலையிலும், தேச அபிவிருத்தியிலும் ஒன்றுபட வேண்டும். அதற்காக அவரவர் ஆற்றலுக்கேற்ப உழைக்க வேண்டும் என்பது பாரதியாரின் விருப்பம்.

புலவர்.ம.பார்வதிநாதசிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 04.09.2011 முதல் 10.09.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

எந்த விடயத்திலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் மனம் தள்ளாடும். சபலங்கள், பேராசைகளால் தண்டச் செலவுகளுக்கு ஆள்படலாம். பயணங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். மாறுதலான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.நண்பர்கள், உறவினர்களுடன் கொண் டாட்டங்களில் பங்கேற்கலாம். இழுத்தடித்த வழக்குகள் முடிவுக்கு வரலாம். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடைவீர்கள். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதிலும் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். எந்தச் செலவையும் செய்யும் முன், ஒன்றுக்கு பல முறை யோசித்துச் செய்யவும். இருந்தாலும், அடிக்கடி அவ நம்பிக்கை, அலுப்பு, சலிப்பு ஆள்கொள்ளும். காரிய வெற்றி உண்டு. பணம் வரும். நல்ல செய்தி கேட்கலாம்.

### இடபம்

ஊக்கம், உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். சிரமங்கள் இருந்தாலும், திட்டமிட்ட காரியங்களைச் சரியான நேரத்துக்கு முடித்துக் கொள்வீர்கள். புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம். நண்பர்களால் நன்மை கிட்டும். எதிலும் கவனம், எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாகலாம். மறதி, வீண் செலவுகளைச் சந்திக்கலாம். சுகசௌகர் யங்கள் குறைந்து வேலைப்பளு அதிகரிக்கும். தேவையற்ற அலைச்சல்களாலும், அடிக் கடி உடல் நிலையில் பாதிப்பு ஏற்படலாம். நிதி நிலைமையும் சொல்லிக் கொள்ளும் வகை யில் இருக்காது. வாக்குக் கொடுத்தவர்கள் எல்லாம் கை கொடுத்து உதவுவதை விட, காலை வாரி விடுவதே அதிகமாக இருக்கும். குடும்ப உறுப்பினர்களிடம் கோபமான வார்த்தைகளைப் பேசுவதை தவிர்க்க வேண்டும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக்கொள்ளும் சூழ்நிலை உருவாகலாம். பெண்கள், பயணங்கள், பொழுது போக்கு விஷயங்கள், மாமன், மைத்துனர்கள், நண்பர்களால் ஆதாயம் அனுகூலம் பெறலாம். அவர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

### மிதுனம்

எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகளை வசூலிக்க மேற்கொண்ட முயற்சிகளில் நல்ல பலன் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான புதிய பொருள்கள் வாங்குவீர்கள். நண்பர்கள் சந்திப்பால், பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். மனைவி, குழந்தைகளின் நீண்ட நாள் ஆசை ஒன்றை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணப்பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். தேவையான பணத்தை 'புரட்டிக் கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். நல்லவர்கள், பெரிய மனிதர்கள், மகான்களின் ஆசி கிட்டும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீர்ந்து சுமூகமாக முடிவுக்கு வரும். வீட்டுக்குத் தேவையான விலை உயர்ந்த பொருள்கள் வாங்கலாம். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள், விருந்து உபசரிப்புகள் போன்றவற்றால் சந்தோஷம் அடை வீர்கள். வெற்றி கிடைக்கும். கோபம், வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். எதிலும் கவனம், நிதானமாக செயற்பட வேண்டும். வீண் பிடிவாதங்களை தவிர்ப்பது நல்லது.

### கடகம்

பிள்ளைகள் வழியில், எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். மற்றொருவரை நம்பி ஒப்படைத்த வேலை முடியாமல், அவற்றை நீங்களே செய்ய நேரிடலாம். எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் கேட்ட உதவிகளை, மறுக்காமல் செய்து, அவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பணவரவுகள் வந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் தொடர்ந்து கொண்டிருக்கும். மாமன், மைத்துனர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். நண்பர்கள் மூலம், சில காரியங்களைச் சாதித்துக் கொள்ளலாம். உறவுப் பெண்கள், சகோதரிகள் உதவிகரமாக இருப்பர். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற நேரிடலாம். மருத்துவ சிகிச்சை பெற, மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. தொழில் ரீதியாக வெளியூர் அல்லது வெளிநாட்டுப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். சகோதரர்கள், பிள்ளைகளின் தேவைகளை, நிறைவேற்றி வைப்பது போன்றவற்றுக்காக, அலைய நேரிடலாம். அந்த வழிகளில் செலவும் உண்டாகலாம். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். பணவரவு உண்டு.

### சிங்கம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் தங்கள் வேலைகளை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். மற்றவர்களுக் காக உங்களின் கைப்பணத்தை செலவு செய்யலாம். மந்தம், மறதி, கவனக் குறைவு, வீண்செலவு போன்றவற்றால் அவதிப்படலாம். சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங் களின் மதிப்பு, மரியாதை மேம்படும். பெரிய மனிதர்கள் வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. சம்பள உயர்வு, பதவி உயர்வு சாதகமாகும். பெண்கள் மூலம் கிடைக்கும் உத விகள், இனிய பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றால் சந்தோஷம் அடை வீர்கள். அனுகூலம் பெறலாம். அவர்களுக்காக எடுத்த காரியங்கள், எளிதில் முடியலாம். கடன் விவகாரங்களால் ஏற்பட்ட கவலைகள் மாறும். பணவரவுகளைப் பெறலாம். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள்.

### கன்னி

பம்பரமாகச் சுழன்று பணியாற்றுவீர்கள். நிதியுதவி, கடனுதவி பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நீங்கள் எதிர்பாராத சிலர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம். பணவரவுகளைப் பெறலாம். வழக்கத்துக்கு மாறாக கூடுதல் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். திட்டமிட்டதற்கு மாறாக சில விடயங்கள் நடக்கலாம். உறவினர்களால் செலவுகள், தொல்லைகள் உருவாகலாம். அதிகப்படியான செலவினங்கள் ஏற்பட்டு, அதனால், பற்றாக்குறை நிலைமையைச் சந்திக்கலாம். தேவையற்ற விவகாரங்களில் மூக்கை நுழைத்து மன அமைதி பாதிக்கப்படலாம். வண்டி, வாகனங்களில் செல்லும் போது, அதிக வேகத்தைத் தவிர்க்க வேண்டும். பெரிய மனிதர்கள் உதவி கிடைப்பது தள்ளிப் போகலாம். தொழில், உத்தியோக ரீதியான சிரமங்கள் தொடர்ந்து கொண்டிருக்கும். நீண்ட தூரப் பயணங்கள், சகோதரிகள் வீட்டுக் காரியங்கள், தந்தையின் உடல் நிலை, மாமன், மைத்துனர்களுக்கு உதவி செய்தல் போன்ற வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான அலைக் கழிப்புகள் அதிகரிக்கும். மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். திடீர் செலவுகளைச்சந்திக்கலாம். தூக்கமின்மையால் சோர்வு, சோம்பல் உண்டாகும்.

### துலாம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். நீண்ட நாள் களாக பிற்போட்ட வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். திட்டமிட்ட வேலைகளை செய்ய முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படலாம். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சில வேலைகளை சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் கைக்கு கிடைக்கலாம். தேவையற்ற செலவுகள் தொடர்ந்து கொண்டிருக்கும். நம்பகம் இல்லாத நபர்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பி எதையும் செய்ய வேண்டாம். பணம் கொடுக்கல் வாங்கல்களிலும் எச்சரிக்கை அவசியம். வேலையாள்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து, எரிச்சல் உண்டாக்கலாம். செலவுகளைச் சமாளிக்கும் வகையில் வரவுகளைக் கொடுத்துக் கொண்டிருப்பார். பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். அதிகாரிகள் உதவிகரமாக இருப்பர். மாமன், மைத்துனர்கள், உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உறவுப் பெண்கள் சிலரின் உதவிகள் கிடைக்கும்.

### விருச்சிகம்

உத்வேகம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். உருப்படியான சில காரியங்களை முடித்துக் கொள்வீர்கள். நண்பர்கள் சந்திப்பு, பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்துக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். வழக்கமாக செய்யும் வேலைகளை செய்ய முடியாமல் தடை ஏற்படலாம். முடங்கிக் கிடந்த சில வேலைகள் சுறுசுறுப்பாக முடியலாம். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. தொழில் விஸ்தரிப்பு விடயங்களில் நாட்டம் செல்லும். அதற்கான கணிசமான தொகையைச் செலவிடலாம். மனைவி வழி உறவினர் உங்களின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் நல்ல விடயங்கள் நடக்கலாம். அவர்கள் கேட்ட உதவிகளைச் செய்வீர்கள். இழுபறியாகப் பத்திரப்பதிவுகள் நடக்கலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். தொழில் ரீதியான முன்னேற்றம் காணும் வாய்ப்பு உண்டு.

### தனுசு

சில விடயங்களை நினைத்து மனம் அலைபாயும். பலவிதமான எண்ணங்களால் குழப்பங்கள் உருவாகும். தேவையற்ற அலைச்சல்களுக்கும், செலவுகளுக்கும் ஆள்படலாம்.எதிர்பார்த்த பணவரவுகள் மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளையும் பெறலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கலாம். சக ஊழி யர்களுடன் கருத்து மோதல்கள், பொறாமைப் பிரச்சினைகள் உருவாகலாம். பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். மற்றவர்களின் வேலைகளையும் நீங்களே சேர்த்துச் செய்ய நேரிடலாம். குடம்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பார். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்களின் முதிப்பு, கௌரவம் மேம்படும். பெரிய மனிதர்கள் வழியில், சில சலுகைகளைப் பெறலாம். பிள்ளைகள் வழியில் சந்தோஷமான செய்திகளைக் கேட்கலாம். கணவன், மனைவி தேவையற்ற விடயங்களுக்கு வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். மறதியால் அவதியுண்டு.

### மகரம்

ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள். விருந்து, விசேடங்களில் பங்கேற்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகி திருப்தி தரும் சுகமான அனுபவம் உண்டு. திட்டமிட்டதை விட, சில காரியங்களுக்கு அதிகமாகச் செலவாகலாம். தர்ம, புண்ணியக் காரியங்களைச் செய்வீர்கள். சில முக்கிய வேலைகளுக்காக பொன், பொருள்களை அடமானம் வைத்து கடன் பெறலாம். சகோதரர்கள், பங்காளிகள் வகையில் அனுகூலம் உண்டு. கடன் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். வரவேண்டிய கடன் மிகுதிகள் வராமல் இழுத்தடிக்கலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவதிலும் பிரச்சினைகள் உருவாகலாம். சுறுசுறுப்பாகச் செயற்பட முடியாத அளவுக்கு, ஏதாவது சிறுசிறு உடல் உபாதைகள் உங்களை ஆள்கொள்ளு ம். தாயார் வழியில் அன்புத் தொல்லையுண்டு. வீண் பேச்சுக்களைத் தவிர்க்க வேண் டும். பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு. மாமன், மைத்துனர் உத விகரமாக இருப்பர். ஊக்கம், உற்சாகம் கூடும். பணவரவுகளைப் பெறலாம்.

### கும்பம்

அலைந்து திரிந்தா ாது எடுத்த காரியங்களை வெற்றிகரமாக முடிப்பீர்கள். கணவன், மனைவி உறவில் அன்னியோன்யம் காணப்படும். உங்களின் சந்தோஷத்தை அதிகரிக்கும் வகையிலான நிகழ்ச்சிகள் நடக்கலாம். பிரியமானவர்கள் சந்திப்பு நிகழும். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள்

வரவுகளைப் பெறலாம். உங்களுக்கு பிடித்தமானவற்றை மற்றவர்கள் கொடுக்கலாம். கொண்டாட்டங்களால் சந்தோஷம் அடைவீர்கள். எந்த வேலையையும் கடும் பிரயத்தனம் மேற்கொண்டே முடிக்க நேரிடும். அதிகளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியங்களில் எல்லாம், குறைந்த அளவே பலன் கிடைக்கும். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் அடிக்கடி நாணயம் தவறும் சூழ்நிலையும் உருவாகும்.

பெண்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வாகனங்கள், வீட்டு பராமரிப்பு வகையில் செலவுகள் உண்டாகலாம். ஒன்றுக்கு பல மடங்காக செலவு ஏற்படலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம்.

### மீனம்

சில பிரச்சினைகளை நினைத்து அதிகம் பதற்றம் அடைவீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் எண்ணம் போல நிறைவேறும். பல நாள்களாக இழுத்தடிக்கப்பட்ட பணவரவுகள் வந்து சேரலாம். பெரிய மனிதர்கள் சிலரின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். ஆறுதல் அனுபவம் உண்டு. நண்பர் ஒருவர் கணிசமான பணத்தைக் கொடுத்து உங்களின் குடும்ப வசதியை மேம்படுத்துவார். பிள்ளைகளின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாற்று மதத்தினர், மாற்று மொழி பேசுவோர் உதவிகரமாக இருப் பர். மருத்துவ காரியங்கள் மனதுக்கு பிடித்தமான வகையில் அமையும். மாமன், மைத் துனர்களால் ஆதாயம் பெறலாம். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். எதிர் பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். நண்பர்கள் மூலம் சில காரியங் களைச் சாதிக்கலாம். சுகமான அனுபவம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Without IELTS STUDY IN UK

## Spot Admission!



# இலவச கருத்தரங்கும் உடனடி அனுமதிகளும்

## Free IELTS Class

**GENERAL /ACADEMIC for Student Visa & Settlement Visa Applicant**

புதிய வகுப்புகள் யாழ் London Metropolitan College மற்றும் கொழும்பு நகரில் தற்பொழுது ஆரம்பம்

Full Time | Part Time

2011 July 04 ம் திகதி அமுலுக்கு வந்த புதிய நடைமுறைகளுக்கு ஏற்ப லண்டனில் உயர்கல்வி கற்பது தொடர்பான இலவச ஆலோசனைகளுடன் ஒரே நாளில் அனுமதிகள் பெற்றுத்தரப்படும்.

பட்டதாரிகள் மற்றும் க.பொ.த சாதாரண தர பரீட்சையில் ஆங்கில பாடத்தில் A / B தர சித்திகள் பெற்றவர்கள் University /Higher Educational Institute (HEI) இல் அனுமதி பெறுவதற்கு IELTS தேவையில்லை

September மற்றும் October / November Intake ற்கான அனுமதிகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பல வருடம் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் உங்களது விசா தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

**GCE(O/L) தகமை போதுமானது**

| | |
|---|---|
| காலம் | 18th September 2011 : 10.00a.m. - 1.00pm. |
| இடம் | Exponet (Jaffna Branch) 197 Arasady Road,Jaffna |

**May/ June மாதங்களில் விசா கிடைத்து பயணமான மாணவர்களில் சிலர்**



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Aravinthan PULOLY | Antony MATHAGAL | Anusha JAFFNA | Anushajini KARAVEDDY | Anushan JAFFNA | Anbalagan COLOMBO | Arulnesan COLOMBO | Gobiraj JAFFNA | Isuru COLOMBO | Jathishangar KOKUVIL | Jegarajiny INUVIL | Kabilan KOKUVIL | Kabilraj CHANKANAI | Kajakoban VALVEDDYTHURAI | Kajanany WATTALA |



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Kajanthan COLOMBO | Kalaivanan VAVUNIYA | Kalpana VAVUNIYA | Ketheesan KARAINAGAR | Logeshwaran COLOMBO | Nirojan KONDAVIL | Niruthika VADDUKKODAI | Nitharshini TRINCO | Nithyadarsan VAVUNIYA | Pathmatheepan COLOMBO | Rajmohan NELLIADY | Rakeesan URUMPIRAI | Ramya MALLAKAM | Rizmy KANDY | Rushanth JAFFNA |



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Sasivathana POINTPEDRO | Sathurna KAITHADY | Sathveehan JAFFNA | Sayanthan KONDAVIL | Sowmya URUMPIRAI | Srivithyakaran NELLIADY | Subakalyani THOLPURAM | Subasini KARAVEDDY | Tharaneetharan COLOMBO | Thargika PALLAI | Tharshika ANAIKODAI | Thavalingan PULOLY | Thushyandan JAFFNA | Thuvarahan TRINCO | Vishnumohan URUMPIRAI |

**பதிவுகளுக்கு**
**Colombo - 0117 555511, Jaffna - 021 7538395**
**Hotline - 0117 555514, Fax - 0117 555517**

EXPONET
Overseas Consultants

Head Office : 379 - ½, Galle Road, Colombo 06.
Jaffna Branch : 197,Arasady Road, Jaffna.
(Between Kantharmadam Junction & Hindu Ladies College)
London Branch : 56, The Gardens Harrow Middlesex, HA1 4EY, UK.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**யாழில் இயங்கும் முன்னணி தனியார் தொலைத்தொடர்பாடல் கம்பனியின் விற்பனைப் பிரதிநிதிக்கான வெற்றிடம்**

தொடர்புகளுக்கு கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் சமுகமளிக்கவும்.
தொடர்பு: 127, Hutch Shop, K.K.S.Rd, Jaffna.
தொலைபேசி: 0785020535, 021 222 0588

**நேர்முகத்தேர்வு இடம்பெறும் காலம்:**
**12.09.2011 -17.09.2011**
**(காலை 9 மணி - 10 மணி வரை)**

**Personal Class (கணினி)**

* உங்கள் வீடுகளுக்கு வந்து அனைத்து கற்கை நெறிகளும் கற்பிக்கப்படும்.
* Ms office 2007/2010, Internet and E-mail, Desktop Publishing, Web Design, Graphic Design சிறுவர்களுக்கான கணினி வகுப்பு.
* பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
* குறிப்பு: கணினி இல்லாதவர்களுக்கு எனது Laptop மூலமாகப் பயிற்சியளிக்கப்படும். * ஆசிரியர்: KRC
* T.P. 0779672038 நல்லூர்.

**தவறிவிட்டது**

சுளாவடி, ஆனைக்கோட்டையை முகவரியாகக் கொண்ட உஷாநந்தினி சற்குனானந்தம் என்பவரது சாரதி அனுமதிப்பத்திரம் A018695397 கடந்த 29.08.2011 அன்று நல்லூர் ஆலயத்தில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்: 021 321 6284

**The Enlightenment**
**புலமைப்பரிசில் பரீட்சை 2011**

பெறுமதி வாய்ந்த கற்கைநெறிகளை பெறுமதியாய் கற்றிடவும் உங்கள் திறமைக்கேற்ப கட்டணக்கழிவுகளைப் பெற்றிட The Enlightenment பரீட்சையில் பங்கேற்க மறவாதீர்கள்.

காலம் - 17.09.2011(9.00மணி)
இடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி
கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி




அனுமதி இலவசம்

பரீட்சைக்குரிய பாடப்பரப்புக்கள் அடங்கிய The Enlightenment புத்தகம் இலவசம். IDM சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம்

மேற்படி பரீட்சையில் பங்குபெற விரும்புவோர் கீழ் காணும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்

பெயர் : ______________________
முகவரி : ______________________
தொ.பே : ______________________

**IDM Nations Campus**
Chavakachcheri Branch
Managed by stepinto(pvt) Ltd
IDM Nations Campus
Sri Lankan Brand for Higher Education
NO: 5, 1/1 Kandy road, Chavakachcheri(Near to Commercial bank) | Tel : 021 7 200 600




* GCE (O/L) , GCE (A/L) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.
* முதலாம் வருடம் ஜேர்மன் மொழி (German Language) கற்றல்.
* இரண்டாம் வருடத்தில் இருந்து அரச நிதியில் பல்கலைக்கழகத்தில் கல்வியைத் தொடர வாய்ப்பு.
* France, Norway, Italy and Sweden உட்பட 15 நாடுகளுக்கான வீசா அனுமதி (Schengen Visa).
* Part Time Job - 20 மணித்தியாலங்கள் என்பதுடன் விடுமுறை காலங்களில் 40 மணித்தியாலங்கள்.

Eurasia Institute ன் பிரதிநிதிகள் அனுமதிகளை வழங்குவர்.

காலம்: 15th September
காலை 10.00 மணி முதல்

இடம்: British College of Higher Studies
No, 15-2/1, Sirambiyadi Lane,
Off Stanley Road, Jaffna.

Eisc **EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**

30-1/14, W.A.De Silva Mawatha Colombo-06
(Above Hotel Saravana Bavan)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com Robin-0777 222 422 Selva-0714 299 935
Web: www.expresslanka.com

**அரிய சந்தர்ப்பம்!**
**காலவிரயத்தைத்தவிர்த்து எம்முடன்இணையுங்கள்**
**தமிழ் மொழி மூலம் பட்டதாரி ஆகுங்கள்**
(தமிழ் இணையப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் வட மாகாணக்கிளை)

★ கா.பொ.த (உ/த) 3 பாடங்கள் சித்தியுடன் மாணவர்கள், அரச தனியார் அலுவலர்களும் .
★ 2011 ஆம்ஆண்டு க.பொ.த (உ/த) தோற்றிய மாணவர்களும் தொடர்பு கொள்ளவும்.

2010 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சை எழுதியவுடன் எம்முடன் தொடர்பு கொண்டவர்கள் ஒரு வருடத்தை மீதப்படுத்தி உள்ளனர்.

இன்றே தொடர்பு கொள்ளவும்

தபால் மூலமாகவும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளலாம்

| சிந்து அக்கடமி 49/5, யாழ்.வீதி, யாழ்ப்பாணம். | பாரதி கல்வி நிலையம், டச்சுவீதி, மீசாலை. | சைன் கல்விநிலையம், A-9 வீதி, அரியாலை. |
|---|---|---|

T.P: 0778051173 0775835372
0776161964

தகுதியுடைய அனைவரும் எங்கிருப்பினும் இன்றே தொடர்புகொள்ளவும்.
மின் அஞ்சல் : sindhu .academy@yahoo.com

# கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1.பிரதான உணவகம்- திருநெல்வேலி
2.மருத்துவபீட உணவகம்- திருநெல்வேலி
3.ஆனந்தக்குமாரசாமி பெண்கள் விடுதி உணவகம்- திருநெல்வேலி
4.பாலசிங்கம் ஆண்கள் விடுதி உணவகம்-திருநெல்வேலி
5.இராமநாதன் நுண்கலைக்கழக உணவகம்-மருதனார் மடம்
6.சித்தமருத்துவத்துறை உணவகம்- கைதடி

மேற்படி உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 2011.09.23 ஆம் திகதி முற்பகல் 10 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000 உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 200 உம் தனித் தனியாக பல்கலைக்கழக நிதிக் கிளையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு உணவகத்துக்கும் தனித்தனி கேள்விப் படிவங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி/3714) 09.09.2011

# மரண அறிவித்தல்
## திருமதி தயாளசாமி புனிதவதி



வேலணை வடக்கு, சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொட்டடியை வதிவிடமாகவும் கனடாவில் வசித்தவரும் தற்போது 66/2, அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தயாளசாமி புனிதவதி கடந்த (08.09.2011) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - யோகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தயாளசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைராசா மற்றும் சிவனேசம், தர்மலிங்கம், செல்வரஞ்சிதம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் ராஜேஸ்வரி, மார்க்கிரட், திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும் திலகேஸ்வரி (தயா), புஸ்பராஜா (பிரபாகரன்-பிரான்ஸ்), தனேஸ்வரி, கருணாகரன் (கனடா), ரஞ்சனேஸ்வரி (கனடா), முரளிகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவபாதசுந்தரம் (பிறின்ஸ் உணவகம், வவுனியா, Prince Pharmacy, யாழ்ப்பாணம்), ஞானம் (பிரான்ஸ்), சந்திரன் (உப அதிபர், வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி, துணைப் பேராசிரியர் மனவளக் கலை), வசந்தி(கனடா), தயானந்தராஜா (கனடா), சுமித்திரா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் வாசவன், யாழினி, பிரசன்னா, லோஜினி (மக்கள் வங்கி, யாழ்ப்பாணம் R.H.O), அகிலன், புவித்திரா, கிஷான், செந்தூரா, சுவர்ணா, ஜனகன், கீர்த்தனா, ரஜீவன், விதுஷா, வினோத் ஆகியோரின் பேர்த்தியும் தேஷானியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

66/2, அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

(7814)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்

(சுகிர்தா ரீச்சர்)

எமது கல்லூரியில் 42 வருட காலமாக ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் கடமையாற்றி, தற்போது கனடாவில் வசித்து வந்தவரும் எமது கல்லூரியின் பழைய மாணவியும் கனடாப் பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவரும் ஆயுட்கால உப தலைவருமாகிய திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் வியாழக்கிழமை (08.09.2011) அன்று கனடா ஜோக் மத்திய வைத்தியசாலையில் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள், S.D.S, S.D.C.
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

(சி/3711)

## விற்பனைக்கு

45 நாள் பூர்த்தியான லான்ட் பொமேரியன் குட்டிகளும், 8 மாதம் பூர்த்தியான பொமேரியன் ஆண், பெண் நாயும், 3 மாதம் சினைப் படுத்திய யமுனா பாறி ஆடும், வான்கோழி, மணித்தாரா, வன்டம், சில்க்கி வெள்ள டியன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: வி.மயூரன், இல: 209, பலாலி றோட், கோண்டாவில். (ராஜா பிளாசா முன்பாக )

## சாரதி தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு யாழ்-கொழும்பு போக்கு வரத்துக்கு லொறிச் சாரதி ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு - 077 4940592

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு கொக்குவில், திருநெல்வேலி, கல்வியங்காடு பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:- 0773997207

## பூப்புனித நீராட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது

வீரபத்திரர் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில் வசிக்கும்
திரு. திருமதி மூர்த்தி தம்பதியரின்
செல்வப் புத்திரி
**வர்ஜனா (வதனா) வின்**
பூப்புனித நீராட்டு விழா இன்று *11.09.2011*
ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்தது. ஆனால்
சில தவிர்க்க முடியாத காரணங்களால்
பிற்போடப்பட்டுள்ளது என்பதை யாவருக்கும்
அறியத் தருகின்றோம்.

திரு.மூர்த்தி,
வீரபத்திரர் கோயில் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(7817)

இலங்கை மின்சார சபை-யாழ். பிரதேச அலுவலகம்

## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களிலுள்ள மின்கம்பங்களை இடமாற்ற வேண்டியிருப்பதால் குறிப்பிட்ட தினங்களில் காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்துக்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

| திகதி | இடங்கள் |
|---|---|
| 12.09.2011 (திங்கட்கிழமை)<br>14.09.2011 (புதன்கிழமை)<br>16.09.2011 (வெள்ளிக்கிழமை) | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, உடுவில் ஒரு பகுதி. |
| 13.09.2011 (செவ்வாய்க்கிழமை)<br>15.09.2011 (வியாழக்கிழமை)<br>17.09.2011 (சனிக்கிழமை) | கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி மற்றும் ஈவினைப் பிரதேசத்தின் ஒரு பகுதி. |
| 18.09.2011 (ஞாயிற்றுக்கிழமை) | இணுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ். பட்டணப்பகுதி, உடுவில் ஒரு பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான். |

இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறோம்.

"சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு
கைகொடுக்கும் இலங்கை மின்சாரசபை"

## காவலாளி தேவை

திருநெல்வேலியில் உள்ள வீடொன்றுக்கு இரவுநேரக் காவலாளி தேவை.

தொடர்பு: 077 0303982

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே.
ஆங்கிலத்தில் சர்வதேச சான்றிதழ்

City & Guilds - UK English Course

- IESOL- International English for Speakers & other Languages.
- ISESOL- International Spoken English for Speakers of other Languages.

புதிய ரிஷகள் ஆரம்பம்

Batch I 12-09-2011- 9.00 AM
Batch II 12-09-2011- 1.00 PM
Batch III 18-09-2011- 9.00 AM

ESOFT
Esoft Computer Studies.

Hotline: 077 309 9 308

Jaffna 021 222 4142 · Nelliyadi: 021 226 4940
Kilinochchi: 021 228 5444 · Kodikamam: 077 625 0789
Chavakachcheri: 077 625 0789 · Udappiddy: 021 320 1303

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் பண்டாரக்குளம் வீதியில் இரண்டு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு - 0212228462
0771871686, 0776048927

## செயலாளர் தேவை

தமிழில் கடிதங்கள், கவிதைகள், கட்டுரைகள் எழுதக் கூடிய ஒருவர் தேவை.
தொடர்பு கொள்ளவும்.
0719364237

## தேவை

பள்ளி முன்னிலைப் பிள்ளைகளை பராமரிக்க அனுபவமுள்ள ஒரு பெண் தேவை. நேரில் வந்து சந்திக்கவும்.
பணிப்பாளர், சென்றல் நேர்ஸிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி.

## சிமெந்து

விற்பனைக்கு உண்டு.
யாழ் சிமெந்து வணிகம்
021 320 2020

# SRI LANKA RED CROSS SOCIETY

*If you are proactive, highly motivated, results oriented and ready to embark on a ehallenging carrier - come join us! The world's largest humanitarian organization – The International Red Cross and Red Crescent Movement:*

| POST | QUALIFICATION & EXPERIENCE | DUTIES & RESPONSIBILITIES |
|---|---|---|
| Finance and Admin Officer<br><br>Based in Jaffna<br><br>01 Positions<br><br>HRM 481 | -A degree in Accounting, Business Administration, Commerce or Finance or Intermediate level in ICASL / CIMA.<br><br>-03 Years experience in a similar capacity<br><br>-Experience of working with Accounting Software's.<br><br>-Experience of preparing budgets, cash flow statements & financial plans | • Manage the funds and financial assets of the Community Based Health (CBH) Project, under the overall direction and supervision of the Branch Executive Officer (BEO). This includes cash flow and cost control management as well as management and supervision of payments.<br>• Work closely with the field staff to ensure timely and accurate reporting of Project expenditure as well as working advances, which is the primary mechanism for major program payments within the project.<br>• Assist the BEO / Programme Manager and Project Delegate in co-coordinating and compiling the program budget and financial plans i.e. Monthly/ Quarterly & annual budgets and budget revisions. Advise the Programme Manager / Project Delegate with regard to funding availability, to ensure that the organization procedures are followed to prepare realistic and balanced budgets.<br>• Ensuring all expenses are in accordance to the approved budgets, accurate and timely accounting of the expenses and ensuring all the internal control procedures are adhered.<br>• Compile accurate and timely financial reports for the organization including those for the National Headquarters and the donors, in accordance with Standard reporting procedures.<br>• Send the cash advance request / settlement on time to Health specialist<br>• Train, support and advice CBH project staff / project delegate and delegation staff in all financial matters. |

**Applicable to all personnel:**

- Abide and work in accordance with the Red Cross and Red Crescent Fundamental Principles
- Respect the safety and dignity of all Red Cross personnel and the people, that we the Red Cross serve
- Perform all duties as required to the best of ability.

**Abilities and skills required**

**Excellent command of English / Sinhala & Tamil - oral and written.**
**Excellent Computer abilities (MS Office, Email, Internet and relevant Electronic Communications**

Red Cross Movement is an equal opportunity employer. Only short listed applicants will be called for the interview.
Please submit your applications no later than 16th September to reach the following address:

Director General,
Sri Lanka Red Cross Society,
104,Dharmapala Mawatha Colombo 07
Or Email to: jobs@redcross.lk
Please indicate the post applying with the reference number on the top left hand corner of the envelope or in the subject (HRM 481)

## P.W. அரியரட்ணம் ஞாபகார்த்த சிறுவர் இயல், இசை அரங்கு - 2011

*P.W.* அரியரட்ணம் ஞாபகார்த்தமாக, அகில உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணக் கல்லூரி, பிரதம பாடசாலையினரால் அழைக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் சிறுவர் இயல், இசை, அரங்கவிழா - 2011 இந்த வருடமும் 08.10.2011 அன்று நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை பெரு மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 19.09.2011 இற்கு முன்பதாக கல்லூரியுடன் தொடர்புகொண்டு தங்களது பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டுகின்றோம். அத்துடன் கடந்த வருடம் பங்குபற்றிய மாணவர்களைத் தவிர்த்து, புதிய மாணவர்களுடன் இந்த வருடம் இந்தச் சிறுவர் நாடக ஆற்றுகை செய்யப்படல் அவசியம் என்பதையும் அறியத் தருகின்றோம்.

அதிபர்,
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

## வேலைவாய்ப்பு

கனடா, ரொறன்டோவில் மிகப் பிரபலம் பெற்ற நிறுவனமான ஜெயசாஜி சுப்பர் சென்டர், தனது கிளை நிறு வனத்தை யாழ். மண்ணில் மிகவும் பெருமையுடன் ஆரம்பிக்கிறது.
மேற்படி நிறுவனத்துக்கு, கீழ்வரும் வேலை வாய்ப்புக்களுக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) விற்பனைப் பிரதிநிதிகள் - (ஆண்/பெண்)
- புடைவை
- எலெக்ரோணிக்
- தங்க நகைகள்
- அழகு சாதனப் பொருள்கள்

(2) கணக்காளர்
(3) உதவியாளர்
(4) சிட்டை எழுதுனர்
(5) பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்/பெண்)
(6) கணினி தெரிந்தவர்கள்

தங்கள் சுயவிவரக் கோவையுடன் (13.09.2011) செவ்வாய்க்கிழமை காலை 8.30 தொடக்கம் 12.30 வரை நேர்முகத்தேர்வுக்கு நேரடியாக சமுகமளிக்கவும்.
நேர்முகத்தேர்வில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு சம்பளம்+கொமிஷன் வழங்கப்படும்.

**Jeya Saji Super Center**
114, நாவலர் வீதி,
(தம்ரோ காட்சியறை முன்பாக)
யாழ்ப்பாணம்.
Tp / Fax : 021-2220916
Mobile - 0779204205/0771755688
E-mail - jeyasaji@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொக்குவில் இந்து மைந்தர்களின்
## கண்ணீர்க் காணிக்கை

**எமது கல்லூரியின் சிரேஷ்ட பழைய மாணவியும் ஓய்வுபெற்ற ஆசிரியையும், பிரதி அதிபருமாகிய**
**திருமதி சுகிர்தலக்ஷ்மி சுப்பிரமணியம்**

கொக்குவில் இந்துக் கல்லூரி பெற்ற தவப் புதல்வியர்களில் முதன்மையானவராகவும் எல்லோராலும் போற்றப்படுகின்ற பெருந்தகையாகவும் விளங்கியவர். அன்னார் கல்வி கற்ற காலம் தொடக்கம் இறைவனடி சேரும் வரை கனவிலும் நனவிலும் கல்லூரியின் உயர்வே தனது உயிர் எனக் கருதி அயராது உழைத்த உத்தமராவார். அவர் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைந்துள்ளது. எமது நம்பிக்கை நிதியச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டி உறுதுணையாக இருந்தவர். அவரைக் கௌரவிக்கும் முகமாக ஏற்கனவே அவரது குடும்பத்தினர் நிதியத்துக்குப் பெருமளவு பங்களிப்புச் செய்துள்ளார்கள். இதனால் பல மாணவர்கள் பயன்பெற்று வருகின்றார்கள். கௌரவத்துக்குரிய அன்னாரைப் பிரிந்து தவிக்கும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் பாதார விந்தங்களை வேண்டி நிற்கின்றோம்.

*கொக்குவில் இந்துக் கல்லூரி*
*பழைய மாணவர்*
*சங்க நம்பிக்கை நிதியம், யாழ்ப்பாணம்.* **நிதியச் சபையினர்.**

---



# JOGIS BEAUTY

(THE ACADEMY OF BEAUTY THERAPY, HAIR DRESSING & HOME SCIENCE)

**குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள்**
**18.09.2011 அன்று ஆரம்பமாக உள்ளன.**

1. அழகுக்கலை (Advanced Beauty Culture Hair Dressing)
2. Advanced Cosmetology Course.
3. நவீன ஒப்பனையும், தலை அலங்காரங்களும் (Advanced Bridal Make- up & Hair Styles)
4. 10 வகை வித்தியாசமான சாறி கட்டும் முறைகள்.
5. கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள் (B'day Cakes, Fondant Structures & Sugar Flowers)

**பயிற்சிகளில் சேர விரும்பும் அனைவரும் உடன் தொடர்பு கொள்ளவும்**

ஆசிரியை
**Mrs. Yogini Shanmuganathan**
Diploma in High tec Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make -up Character - Make -up (India)
Diploma in Home Economics (India & Sri Lanka)

**அம்மன் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

Phone:021 222 2796, 0777164923, 021 321 0077

---

# STUDY ABROAD...

HOTLINE 0777113777




- Well Recognized Universities
- அடிப்படைத் தகமை GCE (O/L)
- Experienced documentation
- Minimum time of processing
- Affordable course fee

## What's your plan after A/L?

UK
Malaysia
Newzealand
&
Australia

உங்கள் எதிர் காலத்திற்காக
10,000 புலமைப்பரிசில்கள்

- HND in Information & Communications Technology
- HND in Hospitality Management
- HND in Business Management
- HND in Marketing



Success is Within your REACH

பாடநெறியைப் பூரணப்படுத்திய பின்னர் :

மத்திய கிழக்கு நாடொன்றில் வேலைவாய்ப்பினை நாம் உறுதிப்படுத்தித் தருவோம். அல்லது இறுதியாண்டு கற்கை நெறியை *UK, Australia, Newzealand, and Malaysia* முதலான நாடுகளிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் தொடரலாம். விபரங்களுக்கு உங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

உங்கள் பெயர் ,விலாசம் ,தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் குறிப்பிட்டு SMS அல்லது மின்னஞ்சல் அனுப்பவும்.

**Courses Available :**

| | |
|---|---|
| Spoken English | 9,900/= |
| Diploma in English | 14,900/= |
| Advanced Diploma in English | 19,900/= |
| IELTS | 12,900/= |
| TOFEL | 13,900/= |
| ESOL | 9,900/= |
| Microsoft office | 7,900/= |
| HTML / CSS | 9,900/= |
| C# & ASP.NET | 34,900/= |
| PHP & MySOL | 18,900/= |
| JAVASCRIPT & AJAX | 24,900/= |
| J2EE | 19,900/= |

SMS 0777883229

IBt CAMPUS

1st 25 students will get a dicount of 10% from the Course fee

No: 538-3/1, Galle Road,Colombo-03. / E-mail: Scholarship@ibtedu.lk / Telephone: 0114 306334

---

# உடனடி வேலை வாய்ப்பு

இலங்கையில் உராய்வு நீக்கி எண்ணெய் விற்பனையில் முன்னணி நிறுவனமாகத் திகழும் CALTEX LUBRICANT LANKA PLC யின் யாழ்.கிளைக்கு கீழ்வரும் தகைமையுடைய பணியாளர் உடன் தேவை.

**பணிநிலை :** கணக்காளர்/ கையிருப்புபேணுதல்.

**தகைமை :**
1. க.பொ.த உ/த சித்தி [வர்த்தகம்]
2. கணினி அறிவு [MS Office]
3. வயது எல்லை 25-35 வயது
4. யாழ். மாநகர எல்லைக்குள் வசித்தல்.

மேற்படி தகைமையுடைய ஆண்கள் மட்டும் தமது சுயவிவரக் கோவையை 20.09.2011 இற்கு முன் எமது கீழ் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Caltex Regional Warehouse**
No.158, Stanley Road,
Jaffna.
Tel : 021 222 2100

சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரி
***M.Kugarajan.***

---

## காணி விற்பனைக்கு

24, குமாரசாமி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் 3-1/2 பரப்புக் காணி கிணறு , நீர்த்தாங்கியுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு : 0777149666

Foresights

---

# வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் **Galle Road** இற்கு மிக அருகாமையில் அமைதியானதும், பாதுகாப்பானதும் ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள **Apartment** இல் **3B/R, 2B/R, 1B/R** வீடுகள் **44** இலட்சத்தில் இருந்து விற்பனைக்குண்டு. முன் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு**
**தொடர்பு கொள்க : 0777368764**

---

# STUDY & WORK IN

New zeland / Australia / Poland / UK
Cyprus / Canada / Switzerland / Swedan
Germany / Scotland / Ireland
(Study + Work Permit + PR)

- ✓ Courses :- Management, Computing, IT, Travel Tourism, Cookery, Beauty Culture & more than 100 Courses.
- ✓ Minimum Qualification :- ● 'O' Level ● No Need IELTS (நிபந்தனைகளுக்குட்பட்டது)
- ✓ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் அனைத்து விதமான VISAக்களும் செய்துதரப்படும்.
- ✓ **Accomodation and Part Time Work Gurantee, Visa Gurantee for Genuine Applicants**

## Study MBBS/MD/ENGINEERING in
East Europe (UKRINE/RUSSIA/BELARUS/GEORGIA)

- ✓ **SRI LANKA MEDICAL COUNCIL (SLMC)**
- ✓ **WORLD HEALTH ORGANIZATION (WHO)**

**Approved Universities**
**(Fees Start from USD 2400 Pa)**

Study MBBS & Engineering in CHINA

Entry Qualification : A/L 3 Passes ⇒ **Admission in Progress**

**SIEG INTERNATIONAL**
169 , George R De Silva Mawatha,
Kotahena , Colombo-13. (opposite to McDonalds )
Tel :- 011-2434767
Mobile :- 077 3 502 612

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 153 ஓட்டங்களால் ரஜரட்டவை வென்றது சென்.ஜோன்ஸ் அணி

யாழ்ப்பாணம், செப் 11

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 153 ஓட்டங்களால் ராஜரட்ட தேசிய பாடசாலை அணியை வெற்றிகொண்டது.

நேற்று முன்தினம் ரஜரட்ட தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்ற இலங்கைப் பாடசாலைகளுக்கான 15 வயதுப் பிரிவின் பிரிவு- 3 மூன்றாம் சுற்றுக்கான ஆட்டம் ஒன்றில் ரஜரட்ட தேசியப் பாடசாலை அணியைஎதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிமோதிக்கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 283 ஓட்டங்களைப் பெற்றது.

கபில்ராஜ் 85 ஓட்டங்களையும் துவரகசீலன் ஆட்மிழக்காமல் 41 ஓட்டங்களையும் ஜோனதாப் 29 ஓட்டங்களையும் பிரிசங்கர் 35 ஓட்டங்களையும் சிந்துஷன் 20 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் ராஜரட்ட தேசிய பாடசாலை அணி சார்பாக ஜெயந்த 10 ஓவர்கள் பந்து வீசி 62 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் அஜந்த குணவர்த்தன 10 ஓவர்கள் பந்து வீசி 49 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் தென்னகோன், 8 ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கருணரத்தின 6 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

284 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ரஜரட்ட தேசிய பாடசாலை அணியினர் 36 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். பெர்னான்டோ, 29 ஓட்டங்களையும் ஜெயலத், 38 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக லோகதீஸ்வர் 8 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும் சிந்துஷன், 5 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் பிரிசங்கர் 6 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (த-23)

## மூன்றாவது இடத்துக்கான ஹொக்கி போட்டி

யாழ்ப்பாணம்,செப்.11

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை, பாடசாலைகள், விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஹொக்கி சுற்றுப்போட்டித் தொடரின் மூன்றாவது இடத்துக்கான ஆட்டம் நாளை திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

(ம-23)

## பளு தூக்குதலில் மூன்றாமிடம்



யாழ்ப்பாணம்,செப்.11

இலங்கை கல்வி அமைச்சு தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய பெருவிளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான 20 வயதுப் பிரிவு பளு தூக்கும் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி மாணவன் ஏ.விதன் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.

கொழும்பு ஆனந்தாக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் போட்டிகள் இடம்பெற்றன.

80-85 கிலோ கிராம் எடை பளு தூக்கும் இந்தப் போட்டியில் 170 கிலோ கிராம்வரை பளுதூக்கி மூன்றாமிடத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

இவர் முதன்முறையாக பளு தூக்கும் போட்டியில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

(ம-23)



மாகாணக்கல்வித் திணைக்களம் வட மாகாணத்தினால் நடத்தப்பட்ட மெய்வல்லுநர் போட்டியில் பதக்கங்களைப் பெற்ற மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை வீரன் செல்வன் மை.ஜெனோசன் (100 மீற்றர் முதலாமிடம், 200 மீற்றர் இரண்டாமிடம்), வீராங்கனை செல்வி க.உஷாயினி (200 மீற்றர் மூன்றாமிடம்) ஆகியோருடன் அதிபர், விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர், விளையாட்டுக் குழு.

### கைதடியில் மின்னொளியில் கரபந்தாட்டம்

# ஆவரங்கால் இந்து இளைஞர் வடமாகாணச் சம்பியனானது

கைதடி, செப். 11

கைதடி வடக்கு, நவசன சமூக நிலையமும் நவசக்தி விளையாட்டுக்கழகமும் இணைந்து ''அலெக்சன் ஞாபகார்த்தமாக வடமாகாணம் மற்றும் தென்மராட்சி ரீதியாக மின்னொளியில் நடத்திய செற்றப் முறையிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தென்மராட்சி சம்பியனாக மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் வடமாகாண சம்பியனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் வெற்றிக் கிண்ணங்களைக் கைப்பற்றின.

இந்தப் போட்டியில் பல கழகங்கள் மோதியபோதும் இறுதிச் சுற்றுக்கு தென்மராட்சிக் கிண்ணத்தைக் கைப்பற்ற மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் என்று நிர்ணயிக்கப்பட்ட இந்தப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் தொடர்ந்து மூன்று சுற்றுக்களில் வென்று சம்பியனானது.

இந்தப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனாக மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.சிவகரன் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற வடமாகாண ரீதியிலான போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் போட்டியிட்டன. இந்தப் போட்டி ஐந்து சுற்றுக்களைக் கொண்டதாக இருந்தபோதும் முதற்சுற்றில் மத்திய விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடந்த போட்டியில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மூன்று சுற்றுக்களில் தொடர்ந்து வென்று வடமாகாண சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

இந்தப் போட்டியின் சிறந்த ஆட்ட நாயகனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக வீரன் எஸ்.றொசான் தெரிவுசெய்யப்பட்டார்.

போட்டிகளுக்கு நடுவர்களாக எஸ்.சுதேஸ்குமார், கே.காந்தரூபன், ஆர்.சதாசிவம் ஆகியோர் கடமையாற்றினர். (ம-288)

## உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.11

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையே கம்பர்மலை, யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 15ஆம் திகதி யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

இதில் 20இற்கு மேற்பட்ட கழகங்கள் பங்குகொள்ள வுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-23)

## செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளின் தேசியமட்ட கிரிக்கெட்

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின்75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருகோணமலை கிளையின் ஏற்பாட்டில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கங்களின் கிளைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் விளையாட்டு மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வி.பி.பாலசிங்கம் கலந்துகொள்வார்.

(ம-23)

# எம்பிலிப்பிட்டிய ஜனாதிபதி கல்லூரியை வென்றது யாழ்.இந்துக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், செப்.11

யாழ். இந்துக் கல்லூரி அணி எம்பிலிப்பிட்டிய ஜனாதிபதி கல்லூரி அணியை 26 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

கடந்த வியாழக்கிழமை எம்பிலிப்பிட்டிய ஜனாதிபதி கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இலங்கைப் பாடசாலைகளுக்கான 17 வயதுப் பிரிவு 3க்கான மூன்றாம் சுற்றுக்கான ஆட்டம் ஒன்றில் யாழ். இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து எம்பிலிபிட்டிய ஜனாதிபதி கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.இந்துக் கல்லூரி அணி 274 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யஸ்மின் 37 ஓட்டங்களையும், தஜீசன் 21 ஓட்டங்களையும், கல்கோபன் 24 ஓட்டங்களையும், றுக்ஸ்மன், 17 ஓட்டங்களையும், பிரிந்தாபன் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர். பந்து வீச்சில் எம்பிலிப்பிட்டிய ஜனாதிபதி கல்லூரி அணி சார்பாக கதறசிங்க 7.4 ஓவர்கள் பந்து வீசி 40 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும் விக்கிரமகே 7 ஓவர்கள் பந்து வீசி 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய எம்பிலிப்பிட்டிய ஜனாதிபதி கல்லூரி அணி 29 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 118 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் சந்துறங்க 25 ஓட் டங்களையும் அமந்த 13 ஓட்டங்களையும், பெரேரா 13 ஓட்டங்களையும், கதறசிங்க 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.பந்து வீச்சில் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாக யஸ்மினன் 10 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் தரங்கன் 9 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் றுக்ஸ்மன் 5 ஓவர்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள். (த-23)

# இறுதியாட்டத்துக்குத் தெரிவான டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்

வல்வெட்டித்துறை கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளை யாட்டுக் கழகம் நடத்தும் 20.20 கிரிக்கெட் சுற்றும் போட்டித் தொடரின் அரைஇறுதியாட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. கடந்த வாரம் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற அரை இறுதியாட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நியூட்டன் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய டைன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றனர். சுவேந்திர 46 றஜீவன் 25 ராஜராம் 23 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூட்டன் விளையாட் டுக்கழக அணி சார்பாக ரதீஸ், சீலன், சாந்தன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். 140 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூட்டன் விளையாட்டுக் கழக அணியினர் 12 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் அரவிந்தன் 13, இளந்திரையன் 12, சாந்தன் 6 ஓட்டங்களை தமது அணிசார் பாகப் பெற்றனர். பந்து வீச்சில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணியினர் சார்பாக பவிதரன், ஜீவா, றஞ்சித், செந்தில் ஆகியோர் தலா 2 விக் கெட்டுகளை வீழ்த்தினர். (ம-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸி. வலுவான நிலையில் மழை குறுக்கீடு; ஆட்டம் பாதிப்பு



இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் மூன்றாம் நாள் ஆட்டம் மழை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளது. நேற்றைய நாளில் 40.3 ஓவர்கள் மாத்திரமே வீசப்பட்டுள்ளது. முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் ஆஸ்திரேலிய அணி நேற்றைய நாள் ஆட்டம் இடை நிறுத்தப்படும் போது 411 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. இந்த நிலையில் இரண் டாவது டெஸ்ட் ஆட்டம் பல்லேகலவில் 8 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சி யில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வெளியேறினர். மத்தியூஸ் 58 ஓட்டங்களையும், சங்ககார 48 ஓட்டங்களையும் அணிக்காக அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். இதன் மூலம் இலங்கை அணி 174 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பில் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும், கொப்லென்ட், ஜோன்ஷன், நதன் லயோன் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஆஸி. அணி இரண்டாம் நாள் முடி வில் 264 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்துள்ளது. ஷோன் மார்ஷ் 87 ஓட்டங்களையும், மைக்கல் ஹஸி 76 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றிருந் தனர். இந்த நிலையில் நேற்றைய தினம் ஆட்டம் ஆரம்பமானது. ஆரம்பத்திலிருந்தே சிறப்பாக ஆடிய மார்ஷ் - ஹஸி ஜோடி இணைப்பாட்டம் நேற்றைய தினமும் தொடர்ந்தது. பொறுப்பாக ஆடிய ஹஸி 193 பந்துகளில் தனது 14 ஆவது டெஸ்ட் சதத்தை பூர்த்தி செய்தார். ஹஸியினைத் தொடர்ந்து மறுமுனையில் சிறப்பாக ஆடிய மார்ஷ், தனது அறிமுக டெஸ்ட் ஆட்டத்திலேயே சதம் அடித்து அசத்தினார். இவர்கள் இருவரும் இணைந்து 4 ஆவது விக்கெட்டுக்காக 258 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் ஹஸியின் விக்கெட் வீழ்த்தப்பட்டது. பகுதி நேரப் பந்து வீச்சாளரான சமரவீர ஹஸியை 142 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தார். ஹஸி ஆட்டமிழந்த சிறிது நேரத்திலேயே மார்ஷும், லக்மலின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். 141 ஓட்டங்களுடன் அறிமுக வீரர் மார்ஷின் ஆட்டம் நிறைவைக் கண்டது. சங்ககாரவின் அபார பிடியெடுப்பினாலேயே மார்ஷ் மற்றும் ஹஸி இருவரது விக்கெட்டுக்களும் வீழ்த்தப்பட்டது.

தொடர்ந்து களமிறங்கிய ஹடின் 1 ஓட்டத்துடன் ரன்டீவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அடுத்து களமிறங்கிய ஜோன்ஷன் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ரன்டீவின் பந்து வீச்சிலேயே 'போல்டாகி' வெளியேறினார். ஆஸி அணி 392 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

அதன் பின்னர் இணைந்த உஸ்மான் - ஹரிஸ் இருவரும் ஆட்ட இடைநிறுத்தப்படும் வரை 18 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்தனர். உஸ்மான் 13, ஹரிஸ் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். பந்து வீச்சில் ரன்டீவ் 103 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை கைப்பற்றியுள்ளார். லக்மல் 102 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். ஆஸி அணி இலங்கையை விட 237 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது. இன்று ஆட்டத் தின் நான்காம் நாளாகும். (15)

# நினைவுதின நிகழ்வில் இன்று நூல் வெளியீடு

கொழும்பு, செப்.11

இந்துபோர்ட் இராஜரத்தினம் அவர்களின் வாழ்வியல் பணிகளை உள்ளடக்கிய நூல் வெளியீட்டு விழாவும் திருமதி திலகவதி தர்மராசாவின் ஆறாம் ஆண்டு நினைவு தினமும் இன்று மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் பேராசிரியர் சபா.ஜெயராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக இளைப்பாறிய நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி சட்ட ஆலோகர் கனகநாயகம் கனகஈஸ்வரன் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீடுகளைத் தொடர்ந்து முன்னாள் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் அமரர் இந்து போர்ட் இராஜரத்தினம் அவர்களின் வாழ்வும் பணியும் என்ற நூலின் ஆய்வுரையை நிகழ்த்துவார். நிகழ்வில் வித்துவாட்டி திருமதி வசந்தா வைத்தியநாதன், தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோரும் சிறப்புரை ஆற்றுவர்.

இதேவேளை யாழ்.திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் இருந்து பணத்துக்குப் பெறப்பட்ட ''இந்து போர்ட் இராஜரத்தினம் காலமும் வாழ்வும்'' என்ற நூல் ரூபா 250 க்கு விற்பனை செய்யப்பட்டு கிடைக்கும் பணம் யாழ். போதனா வைத்தியசாலையில் தங்கியுள்ள புற்று நோயாளர்களுக்கும், காரைநகர் இந்துக் கல்லூரி பழையமணவர் சங்கத்தினருக்கும் பகிர்ந்தளிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-323)

# விளக்கமறியல் கைதி ஆஸ்பத்திரியில் சாவு

பருத்தித்துறை நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர் ஒருவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை மரணமானார்.

எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த இராசையா தணிகாசலம்(வயது-62) என்பவரே இவ்வாறு மரணமானார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது.-

பிரஸ்தாப சந்தேக நபர் பருத்தித்துறை நீதிமன்றின் உத்தரவுக்கமைய கடந்த 5 ஆம் திகதி முதல் யாழ். சிறைச்சாலையில் காவலில் வைக்கப்பட்டிருந்தார். அவருக்கு திடீரென சுகயீனம் ஏற்பட்டது. நீதிமன்ற பணிப்பின் படி யாழ்.போதனா வைத்தியசாலையில் சந்தேக நபர் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் அங்கிருந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் அங்கு நேற்று அதிகாலை அவர் மரணமானார்.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-4)

## மரண அறிவித்தல்



### R.நடராஜா (இன்சூரன்ஸ் ஓகனைசர்)

இன்சூரன்ஸ் ஓகனைசர் R.நடராஜா காலமானார்.

அன்னார் வசாவிளானைச் சேர்ந்த திரு.திருமதி இராமலிங்கம் தம்பதியரின் அன்பு மகனும் பத்மலோசனியின் கணவரும் சுஷிலா, காலஞ்சென்ற ராஜமோகன் மற்றும் கல்யாணி, வத்சலா ஆகியோரின் தந்தையும் சரன், பரேஷ், காலஞ்சென்ற ஸ்ரீரங்கனின் மாமனும் காலஞ்சென்ற இரத்தினசபாபதி மற்றும் கந்தையா, காசிநாதர், அன்னலக்ஷ்மி, சொர்ணம் ஆகியோரின் சகோதரனும் ஜெய்ஷன், வருன், கோகிலா, கிரண் ஆகியோரின் பேரனும் கரலினின் பாட்டன் மாமனாரும் ஹென்றி ஆச்சியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Mt. Lavinina மஹிந்த மலர்ச்சாலையில் இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 11 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பி.ப. 2 மணிக்கு Mt. Lavinia மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

**வீடு காணி விற்பனை**

சுன்னாகத்துக்கு அருகில் உள்ள மல்லாகம், வங்களா ஒழுங்கையில் கே.கே.எஸ் வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் 8½ பரப்பு கிணற்றுடன் கூடிய வீடு வளவு விற்பனைக்கு.

தொடர்பு- 0773013756/0114954593

**வீடு வாடகைக்கு**

யாழ்.கச்சேரிக்கு அண்மித்ததாக அமைந்த 6 அறைகள், 2 Sitting Room, சாப்பாட்டறை, Store Room, சமயலறை, 2 குளியலறை, Servant குளியலறை கூடிய இருமாடி விசாலமான வீடு வாடகைக்கு உண்டு. தனியார், அரச, NGO நிறுவனங்களுக்கு ஏற்ற இடம். வாகனத் தரிப்பிடம் உண்டு.

தொடர்பு-0772 991176, 0755753559

**கார் விற்பனைக்கு**

வைத்தியரின் பாவனையில் நல்ல நிலையில் உள்ள SUZUKI SWIFT, KA xxxx கார் விற்பனைக்குண்டு. விலை 18 லட்சம் ரூபா. (விலை பேசித் தீர்க்கலாம்)

தொடர்புகளுக்கு-0774293575

**விற்பனைக்கு**

கலர் மீன்கள், மீன் தொட்டிகள், மீன் தொட்டி உபகரணங்கள் என்பன விற்பனைக்குண்டு. அத்துடன் மீன் தொட்டிகள் நவீன முறையில் சீர் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு- *பிரசன்னா அக்கூரியம் 881, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*

0214901632, 0779672599

**விற்பனைக்கு**

யாழ். நகருக்கு அண்மையில் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கும் றெஸ்ரோறன், தளபாடங்கள் மற்றும் ஏனைய வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு- 0774710002

**காணி விற்பனைக்கு**

கோண்டாவில் கிழக்கு, பலாலி வீதி, டிப்போவுக்கு அருகில் 7 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு

தொடர்பு- 0774710002

**வீடு- காணி விற்பனைக்கு**

சாவகச்சேரியில் வீடு, காணி விற்பனைக்கு உண்டு. தற்போது இயங்கும் நீதிமன்றத்துக்கு முன்னால் உள்ளது. 5 பரப்பு காணியும் வீடும், [4 அறைகள்] 10 பரப்பு வெற்றுக்காணியும் விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும்.

**மொத்தம் 20 பரப்பு வீடும், காணியும் வாங்குபவர்களுக்கு விலைச்சலுகை உண்டு.**

முதலீட்டாளர்களுக்கு பொருத்தமான இடம்.

தொடர்பு-0773526211

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா குருசாமி



யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கனகம்மா குருசாமி நேற்றுமுன்தினம் (09.09.2011) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குருசாமியின் அன்பு மனைவியும் மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பத்மசுந்தரம் (மின்சார சபை ஊழியர்), கேதாரசுந்தரம் மற்றும் பிறேமசுந்தரம், கனகேஸ்வரி, நகுலேஸ்வரி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் குகதாசனின் அன்புப் பெரிய தாயும் காலஞ்சென்றவர்களான பஞ்சாட்சரம், பாக்கியலட்சுமி மற்றும் புவனலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவானந்தம், மாணிக்கவாசகர், பாலேந்திரன், காலஞ்சென்ற இராஜா மற்றும் அருள்ராணி, கலாராணி ஆகியோரின் அன்பு மாமியும் சுபாங்கினி, துஷ்யந்தி, அலன் அமலன், அஷ்வினி, அச்சுதன், மதுரா, அனித்தா, பவித்திரா, குமரநாத், குயிலியா, துவாரகா, தனிஷிகா, யதுஷிகா, தரணிகா, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிந்துஜன், நிரோஜன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2011) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*35, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

*தகவல்: ப.சுபாங்கினி (சுபா - பேர்த்தி).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் சுயமாகத் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!

எமது 26 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன**

சனி ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 18-09-2011 காலை 09.00 மணி
கிழமைநாள் பிரிவு ஆரம்பம் : 19-09-2011 காலை 09.00 மணி

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்
- கைவேலை
- Saree Work
- கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் (Hair Dressing & Styling)
- பூவேலை
- பப்றிக் வர்ணம் தீட்டுதல்
- தையல் அறிவு அற்றவர்களுக்கான தையல் (உடை தயாரித்தல்) பயிற்சிகள்.
- மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் Facials, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure பயிற்சிகளும் நடைபெறும். மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான 10 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.
மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.



**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981ஆம் ஆண்டு, ஆயிலிய நட்சத்திரம், உதயத்துச் செவ்வாய், பாவம் 80 உடைய மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு-0213219468

**எடிசன் கல்லூரி**
ஆனந்தபுரம் -கிளிநொச்சி
**SPOKEN WITH GRAMMAR**
புதிய வகுப்புகள் ஆரம்பம்
12.09.2011 காலை 9 மணிக்கு
By.V.J.சுஜீந்திரன்(Dip.in.Eng)

**September intake now on for O/L & A/L students**

ACCA @ CCBT

Merit Based Scholarships
- O/L's - 3 A's or More : 10%
- A/L's - 2 A's or More : 10%
- O/L's - 7 A's : 30%
- A/L's - 3 A's : 30%

Achieve a Professional Qualification (ACCA) + UK Degree (Bsc Hons in Applied Accounting from Oxford Brookes University) } 2 1/2 Years

**WHY ACCA @ CCBT**
- Professionally qualified, industrially experienced expert resource panel
- Participants limited to 25 per class
- Access to free study materials (Kaplan)
- Computer Lab & Library facilities
- Mock exams with one to one discussions
- Flexible payment options
- Supporting programmes - English / Employability Skills
- Convenient location (Opp British Council)

LIMITED Scholarships Available

**Register Now 0777 55 98 56 / 0112 55 98 55**

CCBT
Towards an Inspired Generation
502, R.A De Mel Mawatha, Colombo-3, Sri Lanka.
Fax: 0112 55 98 44 e-mail: infosl@ccct.edu.bn
Web: www.ccct.edu.bn

ISO 9001-2008 சர்வதேச அங்கீகாரம் பெற்ற கணினிக் கற்கைநெறிகள்......

e.com
Computer Training Centre

2,500/= செலுத்தி 04 கற்கைநெறிகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்....

Special Offer!!

- Diploma in Microsoft Office
- Internet & E-Mail
- Windows
- Linux

Only 2,500/=



Head Office: No.95A Temple Road, Nallur, Jaffna
Branch: K.K.S Road, Kondavil, Jaffna.
Call... 021-7429005 021-7200902

# மரண அறிவித்தல்

## சீவரெட்ணம் விஸ்ணுமூர்த்தி (விஸ்னு)



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சீவரெட்ணம் விஸ்ணுமூர்த்தி நேற்று (10.09.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரெட்ணம் (முன்னாள் ஊழியர் CTB ) -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்ற சங்கரலிங்கம்- கமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் அன்புக் கணவரும், மோகனரூபன், ரகுரூபன், நிரோஜன், புஸ்பமாலா, நந்தரூபன், விதுசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்தானலட்சுமி(லண்டன்), இந்துமதி, காலஞ்சென்ற சிவலோக நாதன், சந்திரமௌலேஸ்வரி(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாசுகி, சிவகுமார் மற்றும் காலஞ்சென்றவர்களான சசிக்குமார், சந்திரகுமார் மற்றும் சத்தியகுமார், வசந்தகுமார் மற்றும் காலஞ்சென்ற இராசரட்ணம், தர்மகுலசிங்கம், றதி, தேவராசா(U.K) ஆகியோரின் மைத்துனரும், சயந்தனின் (பிரான்ஸ்) சிறிய தந்தையும், சாந்தமலர், பராசக்தி, இரத்தினகுமார் (பிரான்ஸ்), ரமேந்திரகுமார்(U.K), விசியரசி, ரம்மியா, கஜேந்திரன்(U.K), வித்தியா, செந்தூரன் (பிரான்ஸ்), மயூரன் (பிரான்ஸ்), காந்தீபன், மதனதீபன்(U.K), காண்டீபன்(U.K) ஆகியோரின் மாமனும், இந்துஸ்சியன், சாலின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.09.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் வட்டாரம்,
மண்கும்பான்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

**BBS பாடசாலைகளின் ஆங்கிலமொழி பாடநெறிகள்**

O/L, A/L கற்ற மாணவர்களுக்கு விசேட வகுப்புக்கள்.

Certificate in English,
Diploma in English,
Advanced Diploma in English

தகுதி வாய்ந்த விரிவுரையாளர்கள்.
வசதிக்கேற்ப நேர அட்டவணை
பரீட்சைக்குப் பதிவு செய்பவர்களுக்கு இலவச கையேடுகள்
பரீட்சை வழிநடத்தல் வகுப்புக்கள்.
இலக்கண வகுப்புக்கள்

BRITISH COUNCIL IELTS
அங்கிகரிக்கப்பட்ட பரீட்சைப்பதிவு நிலையம்

Academic, General
IELTS பரீட்சைக்கு தோற்ற விரும்பும் யாழ்குடாநாட்டு மாணவர்கள்.
BBS நல்லூர் வளாகத்திற்கு நேரில் வருகை தந்து, பரீட்சைக்கட்டணத்தைக்கட்டி பதிவு செய்யலாம்.
பிரிட்டிஸ் ஹைகொமிஷனால் அங்கீகிரிக்கப்பட்ட பாடநெறிக்கான கைநூல்கள் வழங்கப்படும்

September இல் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

SPECIAL ENGLISH CLASSES
For Professionals Including Doctors, Engineers, Nurses & Government Officials

ENGLISH CLASSES FOR CHILDREN
Pre-Foundation, Foundation- Level 1,2,3,4
School Syllabus Covered
சிறுவர்களுக்கான ஆங்கில பாடநெறிகள்
வாரத்தின் எல்லா நாட்களிலும் BBSஇன் அனைத்து வளாகங்களிலும் நடாத்தப்படும்
நேரம் : கிழமை நாட்களில் பிப 2.00-4.30
சனி, ஞாயிறு முப 8.30-12.00 பிப 2.00-4.00

BBSஇன் சர்வதேச பாலர் பாடசாலைகள்
Dr.Maria Montessori & Canadian Early Learning Method
ஆங்கில மொழிமூல பாடசாலை செயற்பாடுகள்

+2 முதல் 5 வயதுவரையுள்ள சிறார்களுக்கு
- Play Group (2+சிறார்களுக்கு)
- Montessori (3+சிறார்களுக்கு)
- Pre-School (4+சிறார்களுக்கு)

BBSஇன் 10 வளாகங்கள்

| | |
|---|---|
| நல்லூர் | - 140. கோவில் வீதி. நல்லூர் |
| கோப்பாய் | - பருத்தித்துறை வீதி. கோப்பாய் மத்தி |
| நீர்வேலி | - 1ம் கட்டை. இராசவீதி. நீர்வேலி. |
| சாவகச்சேரி | - சாவகச்சேரி இந்து ஆரம்பபாடசாலை அருகாமை |
| மானிப்பாய் 1 | - 252. ஆலடிசந்தி. யாழ்வீதி. மானிப்பாய். |
| மானிப்பாய் 2 | - சங்கரப்பிள்ளை வீதி. மானிப்பாய். |
| சுண்ணாகம் | - Lakshmi (புதியதிரையரங்கு அருகாமை) K.K.S.வீதி மல்லாகம் |
| புலோலி | - ஸ்ரீ பத்மநாதன் இல்லம். மந்திகை. |
| அச்சுவேலி | - அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை அருகாமை |
| சங்கானை | - நிகர வைரவர் கோவிலடி. AGA Office அருகாமை |

2012ம் ஆண்டிற்கான புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்று முதல்

The Peninsula's Premiere English Academy

BRITISH BUSINESS SCHOOL
140, கோவில் வீதி நல்லூர். Contact : 021 2225796, 0777 009653, 0776646357

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு துரித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்கீழ் இயங்கும் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் 119 வேலைத் திட்டங்களுக்கு இந்த வருடம் 1275.42 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

உள்ளக வீதிகள் புனர் நிர்மாணம் மற்றும் புனரமைப்புக்கு 373.84 மில்லியன் ரூபாவும், நீர்ப்பாசனத்துக்கு 273.17 மில்லியன் ரூபாவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் புனரமைப்புக்கு 56.87 மில்லியன் ரூபாவும், கமநல சேவைகள் நிலையங்களின் புனரமைப்புக்கு 23.13 மில்லியன் ரூபாவும்,

பாதுகாப்பு அணைகளை அகற்றுவதற்கு 39.12 மில்லியன் ரூபாவும், பாடசாலை களின் கட்டடங்கள் புனரமைப்புக்கு 179.02 மில்லியன் ரூபாவும், சுகாதார நிலையங்களின் நிர்மாணத்துக்கு 74.66 மில்லியன் ரூபாவும், பொது நிர்வாக கட்டடங்களின் புனரமைப்புக்கு 101.25 மில்லியன் ரூபாவும், பொதுச்சந்தை புனரமைப்புக்கு 81.17 மில்லியன் ரூபாவும், பருத்தித்துறை நகரசபைக் கட்டடம், நெடுந்தீவு சுயகற்றல் நிலையம் போன்ற வற்றுக்கு 49.31 மில்லியன் ரூபா நிதியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

119 வேலைத் திட்டங்களில் சில வேலைத் திட்டங்கள் முடிவடைந்துள்ளன. ஏனைய வேலைத் திட்டங்கள் அனைத்தும் அடுத்த வருடம் ஜூன் மாதத்துக்கு முன்னர் முடிவடையும்.

புதிதாக வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு தற்போது நிதி இல்லை. இருப்பினும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதமளவில் அடுத்த வருடத்துக்கான ஒதுக்கீடுகள் கிடைத்தவுடன் புதிய வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(த-15)

### வீடு விற்பனைக்கு

*கொக்குவில் சந்திக்கருகில் K.K.S வீதியில் வீடு உடன் விற்பனைக்கு உண்டு. [வியாபார ஸ்தாபனத்துக்கு உகந்தது]*

**தொடர்பு-0777781221**

### காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாய், 7ஆம் கட்டை, மானிப்பாய், காரைநகர் வீதியில் 5 பரப்பு, 8 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு

**தொடர்புகளுக்கு -0773013060**

## பூதங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான அரசியல் கட்சித் தலைவர்கள் நடத்திய பேச்சின் பின்னரும் பல்வேறு இடங்களில் 'கிறீஸ் பூத' அச்சுறுத்தல் இருப்பதாக மக்கள் தெரியப்படுத்தி உள்ளனர். இந்த விவகாரத்தை முடிவுக்குக் கொண்டுவர பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என ஜனாதிபதி அளித்த உறுதிமொழி நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையே இது காட்டுகிறது என்றார் சுரேஷ்.

'கிறீஸ் பூத' அச்சுறுத்தல் தொடர்ந்து கொண்டிருக்குமாயின், அதை நிறுத்த சாத்வீக வழியிலான போராட்டங்கள் தவிர்க்க முடியாதவை என்றும் அவர் தெரிவித்தார்.

''சர்வதேசத்துக்கு இந்த விவகாரத்தின் உண்மைநிலையை நாம் தெரிவிப்போம்'' என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-ஐ)

## செல்வச்சந்நிதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தேர், தீர்த்தத்திருவிழாக்களை முன்னிட்டு பக்தர்களின் வசதி கருதி விசேட போக்குவரத்து, சுகாதார, குடிதண்ணீர் பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பருத்தித்துறை இ.போ. சபையின் டிப்போவின் பஸ் சேவைகள் யாவும் இன்றும் நாளையும் செல்வச்சந்நிதியில் உள்ள தற்காலிக பஸ் நிலையத்தில் இருந்தே நடைபெறவுள்ளன. சந்நிதி திருவிழா விசேட சேவைக்கென யாழ்ப்பாண டிப்போவிலிருந்தும் சில பஸ் வண்டிகளை பருத்தித்துறை டிப்போ பெற்றுள்ளது. வடமராட்சி சிற்றூர்தி சங்கம் உட்படத் தனியார் மினிபஸ் சேவைகளும் இடம்பெறவுள்ளன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து வல்வெட்டித்துறை நகரசபை காலை, மாலை வேளைகளில் கோயில் சுற்றாடல்களில் அன்னதானம் வழங்கல், மடங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற்கொள்ளவுள்ளன. பருத்தித்துறை பிரதேச செயலகம், வல்வெட்டித்துறை நகரசபை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம் ஆகியவற்றின் உபஅலுவலகங்கள் கோயிலின் சுற்றாடலில் செயற்பட்டு வருகின்றன.

கோயில் சுற்றாடலில் பக்தர்களின் போக்குவரத்து ஒழுங்குகளை பொலிஸாருடன் இணைந்து சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர். தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு காலை 9.30 முதல் மாலை வரை சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானம் இடம்பெறுவதுடன் ஏனைய மடங்களிலும் அன்னதான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(க-236)

### வயற்காணி விற்பனை

